

# சின்மயம்

| | | |
|---|---|---|
| NAME OF BOOK | : | **CHINMAYAM**<br>PUYJA GURUDEV<br>SWAMI CHINMAYANANDA'S BIRTH<br>CENTENARY SOUVENIR<br>1916 - 2016 |
| PUBLISHED BY | : | CHINMAYA MISSION<br>JAFFNA. |
| SIZE OF THE BOOK | : | B5 |
| DESIGNING & PRINTING | : | MATHI COLOURS PRINTERS<br>NO.10, MURUGESAR LANE, NALLUR.<br>021 2229285 |
| ISBN NO | : | 978-955-4002-00-5 |
| NO OF PAGES | : | 100 |
| NO OF COPIES | : | 1000 |
| நூலின் பெயர் | : | சின்மயம்<br>பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின்<br>பிறந்த நூற்றாண்டு மலர்<br>1916 – 2016 |
| வெளியீடு | : | சின்மயா மிஷன்<br>யாழ்ப்பாணம். |
| நூலின் அளவு | : | B5 |
| வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும் | : | மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்<br>இல.10,முருகேசர் லேன், நல்லூர்.<br>021 222 9285 |
| ISBN No | : | 978-955-4002-00-5 |
| பக்கங்கள் | : | 100 |
| பிரதிகள் | : | 1000 |


Chinmaya Mission
No.9, Chetty Street Lane, Nallur, Jaffna.

சின்மயா மிஷன்
இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

Email: info@chinmayamissionjaffna.org
FB Page: Chinmaya Mission Jaffna

Web: www.chinmayamissionjaffna.org
Phone: +94 21 222 3447

# சின்மயம்

குருர் ப்ரம்மா குருர் விஷ்ணு:
குருர் தேவோ மஹேஸ்வர:
குரு ஸாக்ஷாத் பரப்ரம்ஹ
தஸ்மை ஸ்ரீ குரவே நம:

குருவே அந்தப் பரம்பொருள், மனிதர்கள் பக்குவநிலை அடையும் பொழுது அந்தப் பரம்பொருளே குருவடிவாக வந்து ஆட்கொள்கின்றது.

குதிரைகள் கொள்வனவு செய்வதற்காகச் சென்ற அமைச்சர் திருவாதவூரரை குருந்த மர நிழலில் குருவாகக் காட்சி கொடுத்து ஆட்கொண்டதும் அப்பரம்பொருளே.

அந்த வகையில் பக்குவப்பட்ட ஜீவன்களைக் கடைத்தேற்றுவதற்கும், சகல ஜீவன்களையும் பக்குவ நிலைக்கு உயர்த்துவதற்குமாக அவதரித்தவரே பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்கள். இத்தகைய ஞானி மனித உடல் தாங்கி பூமியில் பிறந்து 08.05.2016ஆம் திகதியுடன் நூறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதனை நினைவு கூருமுகமாக யாழ் சின்மயா மிஷன் 29.05.2016 அன்று விழா எடுத்து "சின்மயம்" என்ற பெயரில், பிறந்த நூற்றாண்டு மலரையும் வெளியிடுவதில் பெருமகிழ்வடை கின்றது.

மகான்களின் வரலாறுகள் மாண்பு மிக்கவை. அவை மனிதர்களைப் புனிதர்களாக மாற்ற வல்லன. எனவே நாம் இங்கு சின்மயா மிஷன் உருவாவதற்குக் காரணமாயமைந்த, உருவாக்கிய, இன்று நிர்வகித்து வழிநடாத்தும் மகான்களின் வாழ்க்கை வரலாறுகள், அவர்களின் ஆன்மிக அனுபவங்கள் மற்றும் மக்களுக்கு அவர்கள் ஆற்றிய பணிகள் ஆகியவற்றை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். அவை படிப்பவர்களை நன்னிலைக்கு உயர்த்துவதுடன் எம்மையும் உயர்த்தட்டும்.

**சின்மயா மிஷன்**
**யாழ்ப்பாணம்.**

# சரணம் சரணம் குருதேவா. . .

1. மெய்ஞ்ஞானத்தின் ஆதவனாய்
அஞ்ஞானத்தின் இருள் அகற்றும்
முனியின் பாதம் சரணடைந்தோம்
சரணம் சரணம் குருதேவா

2. புண்ணிய பாரத பூமியிலே
ஆதி சங்கரர் உதித்த மண்ணில்
வையம் உய்ய வந்துதித்தார்
சரணம் சரணம் குருதேவா

3. சிவானந்தரின் தீட்சைதனில்
தபோவனத்தின் போதனையில்
பிரகாசித்தார் சின்மயமாய்
சரணம் சரணம் குருதேவா

4. அதிகமானோர்க்கு அதிகநேரம்
அதிக இன்பம் தந்திடுதல்
இதுவே நமது கொள்கை என்றார்
சரணம் சரணம் குருதேவா

5. சின்மய இயக்கத்தை உருவாக்கி
வளர்ந்தோர் முதியோர் பெண்களென
அனைவரும் உயர வழியமைத்தார்
சரணம் சரணம் குருதேவா

6. சிறுவர்களுக்கு பாலவிஹார்
யுவகேந்திரா இளைஞருக்கு
வழிகாட்ட அமைத்து வைத்தார்
சரணம் சரணம் குருதேவா

7. குருபரம்பரை தொடர்ந்திடவே
சாந்தீபனியை உருவாக்கி
துறவிகள் பலரைப் பயிற்றுவித்தார்
சரணம் சரணம் குருதேவா

8. உலக மக்களின் நலன் விரும்பி
எப்போதும் கருணைமயம்
தன்னை உணர்ந்த ஞானி அவர்
சரணம் சரணம் குருதேவா

9. ஓயா உழைப்பின் சிகரமவர்
உற்சாகத்தின் ஊற்று அவர்
மக்களின் மனதைத் திருடியவர்
சரணம் சரணம் குருதேவா

10. நினைத்ததை எல்லாம் நிறைவேற்றி
காட்டிய சத்திய புருஷரவர்
தோன்றற்கரிய யுக புருஷர்
சரணம் சரணம் குருதேவா

11. சனாதன தர்மம் தழைத்தோங்க
அதனின் பெருமை உலகறிய
சளைத்திடாமல் பாடுபட்டார்
சரணம் சரணம் குருதேவா

12. வேதம் கூறும் நற்கருத்தைப்
புரிந்து ஒழுகிப் பயன்பெறவே
எளிய நடையில் கூறிவைத்தார்
சரணம் சரணம் குருதேவா

13. கீதை கூறும் நல்லுரையை
உலக மக்கள் அறிந்திடவே
வாழ்வை உவந்து அர்ப்பணித்தார்
சரணம் சரணம் குருதேவா

14. உலகை மாற்ற முடியாது
உன்னை மாற்று அது மாறும்
என்று நமக்கு அறிவித்தார்
சரணம் சரணம் குருதேவா

15. இன்பம் இருப்பது உன்னிடமே
உலகில் அதனைத் தேடாதே
என்று உண்மையை உணர்த்தியவர்
சரணம் சரணம் குருதேவா

16. உலகம் மாறும் எப்போதும்
உனக்கு என்றும் மாற்றமில்லை
என்ற உண்மையை எடுத்துரைத்தார்
சரணம் சரணம் குருதேவா

17. ஓட்டை மூங்கில் நான் என்றும்
இசைப்பவன் இறைவனே என்றும்
சூட்சும உண்மையைக் கூறி வைத்தார்
சரணம் சரணம் குருதேவா

18. நான் நான் என்று ஒளிர்கின்றாய்
நீயே அதுவாய் இருக்கின்றாய்
என்றெனை எனக்கு அறிவித்தார்
சரணம் சரணம் குருதேவா

19. அவரின் போதனை அழியாது
மனதை திருத்தி உயரத்தி நிற்கும்
என்றும் நம்மை வழிநடத்தும்
சரணம் சரணம் குருதேவா

# உள்ளே...


மகான்களின் மகிமைகள்

துறவியர்களின் அருளாசிகள்

சின்மயா மிஷன் தோற்றம் - பணிகள்

குருமார்களின் ஆசிகள்

யாழ்ப்பாணத்தில் சின்மயா மிஷன்

சமயப் பெரியார்களின் வாழ்த்துக்கள்


சின்மய அணிகள்

துறைசார் பெரியார்களின் கருத்துக்கள்

சின்மய பிறந்த நூற்றாண்டு

சின்மய வாக்குறுதி

# மகான்களின் மகிமைகள்



ஹிமாலயத்தின் விபூதி தபோவன் மகராஜ்

# ஹிமாலயத்தின் விபூதி சுவாமி தபோவன் மகராஜ்

மகான்கள் என்றும் மரணிப்பதில்லை. தானே அந்தப் பிரம்மம் என்றுணர்ந்த, சகல பற்றுக் களையும் துறந்த மகான்கள் ஏனைய மக்களைப் போல் சகல செயற்பாடுகளையும் அதாவது உண்பது, உறங்குவது, சிரிப்பது, களிப்பது ஆகிய செயல்களில் ஈடுபட்டாலும் அவர்கள் ஆன்மாவிலேயே நிலைத் திருப்பார்கள்.

பகவான் கிருஷ்ணர் பகவத்கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில் 55ஆவது சுலோகத்தில் இருந்து இறுதிவரை இவர்களின் இயல்பு எப்படி இருக்கும் என்று விளக்கிக் கூறியுள்ளார்.

### சின்மயா மிஷன் எனும் பெருவிருட்சம்

அந்த வகையில் ஆலமரம் போல் உலகெங்கணும் விழுதுகள் பரப்பி பெரு விருட்சமாக நின்று, பகவத்கீதை மற்றும் உபநிஷதங்கள் ஆகிய தர்ம சாஸ்த்திரங்களில் கூறப்பட்ட தர்ம நெறிகளை உலகெங்கணும் பரப்பி "அதிகளவான மக்களுக்கு, அதிகளவான நேரம், அதிக சந்தோஷத்தை" வழங்கிக் கொண்டிருக்கும் சின்மயா மிஷனின் வித்தாகத் திகழும் பரம் பூஜ்ய குருதேவர் சுவாமி தபோவன் மகராஜ் அவர்களின் வாழ்க்கை வரலாறு எப்படி அமைந்திருந்தது என்பதைப் பார்ப்போம்.

### மகானின் மகிமைகள்

'சின்மயா மிஷன் எனும் விருட்சத்தின் மூலவேர் எனத் திகழும் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்கள் தனது குருவான பரமகுரு சுவாமி தபோவன் மகராஜ் பற்றிக் கூறுகையில்,

"மகான்கள் புத்தியால் அறியப்படக்கூடியவர்கள் அல்ல. அவர்கள் அதிலும் ஆழமானவர்கள். தபோவன் மகராஜ் பற்றி நாம் வெளியிலிருந்து பார்த்தால் பூரண சந்நியாசியாக ஒவ்வொரு நிமிடமும் வாழ்ந்தார் எனலாம். ஆனால் அவர் அதுவல்ல; அவரே அந்தப் பரப்பிரம்மம். எனக்கு அவர் அதுவே தான். உபநிடதங்கள் மற்றும் பகவத்கீதையில் எதனைப் பார்த்தேனோ அதனையே அவரிலும் பார்த்தேன். என்னால் இவற்றை எப்படி உங்களுக்கு விவரிக்க முடியும்?" என்றார்.

மேலும், சின்மயா மிஷனின் முக்கிய பணியான பகவத்கீதை மற்றும் உபநிடதங்களை எல் லோருக்கும் பரப்புவது என்பது, எல்லோர் உள்ளங்களிலும் தபோவன் மகிமையை (விபூதி) உணர வைத்தலேயாகும். இம் மகாபுருஷனே 'சின்மயா மிஷன்' எனும் நிறுவனத்தின் பரமகுரு. இங்கு என்ன நடைபெறுகின்றதோ அவற்றிற்கெல்லாம் மௌனமான சாட்சி அவரே. அவரது குடும்ப பக்தர்களாகிய நாம் அனைவரும் எமது ஆத்மாவில் மகராஜ் கலந்துள்ளார் என்பதை அவருக்கு வெளிப்படுத்தும் பெரும் பொறுப்பைக் கொண்டுள்ளோம்.

ஸ்வாமி தபோவன் மகராஜ் ஓர் ஸந்நிதானம், ஓர் ஒளி, ஓர் நறுமணம், ஓர் பிரகாசம். இந்நிலை குறித்து வார்த்தைகளால் வெளிப்படுத்துவது இயலாததாகும். இவை உணர்ந்து அனுபவிக்கப்பட

வேண்டியவையாகும் இதற்கான ஒரேவழி பகவத்கீதை என்னும் சாஸ்த்திர நூலை ஒரு குருவிடமிருந்து கற்று அதில் கூறப்பட்டபடி தா்மமான பாதையில் வாழ்வது ஆகும். இதன் மூலம் தபோவன் மகராஜ் அவா்களை உணரலாம். உபநிடதங்களைக் கற்கக்கூடிய அதிகாரியாய் (தகுதி வாய்ந்தவா்) உங்களை ஆக்கிக் கொள்ளவும் தியானத்தில் உதவவும் அவரது சக்திவாய்ந்த அருளை வேண்டி நிற்கின்றேன். உங்களால் முடிந்தால் அவரைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என குருதேவா் அடியாா்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளாா்.

அடுத்து, இன்று உலகளாவிய ரீதியில் கிளை பரப்பி நிற்கும் சின்மயா மிஷன் என்னும் பெரு விருட்சத்தின் தண்டுப் (stem) பகுதி போல் நின்று தாங்கிக்கொண்டிருக்கும் பூஜ்ய குருஜி சுவாமி தேஜோமயானந்தா் அவா்கள் தாம் இயற்றிய 'தபோவன் அஞ்சலி'யின் முதல் வரியில் 'சந்நியாசம்' தனக்கு ஓா் இருப்பிடம் தேடி, தனக்குப் பொருத்தமாக ஓரிடமும் கிடைக்காத நிலையில், எல்லோருக்கும் அவரவா் தங்குவதற்கு ஏற்ற இடமளிக்கும் இறைவனிடம் சென்று தனக்கு தங்குவதற்கு இடம் ஈந்தருளுமாறு விண்ணப்பித்ததாகவும், அதற்கு இறைவன், பாரத பூமியில் கேரளா என்னும் இடத்தில் ஓா் இளைஞன் உனக்குப் பொருத்தமான தங்குமிடமாக அமைவான் என்றும் அங்கு சென்று அவனை வணங்குமாறும், அவனே உனக்கு ஒளியூட்டக்கூடியவன் என்றும் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளாா்.

மேலும் சின்மயா மிஷன் சுவாமி ஸ்வாத்மானந்தா தனது உரை ஒன்றில் குறிப்பிடும்போது, பகவத்கீதையின் 10ஆம் அத்தியாயத்தில் பகவான் கிருஷ்ணா் தனது தெய்வீக கிருபை பலவகைகளில் வெளிப்படுவதாகவும், அவையாவன அசையாத பொருட்களில் இமயமாகவும், ஓடுகின்ற ஆறுகளில் கங்கையாகவும், சகல கல்வி கேள்விகளில் ஆன்மிக ஞானமாகவும் மேலும் பலவற்றைக் குறிப்பிட்டுள்ளாா் அதே பகவான் இக் காலத்தில் இருந்தால், சந்நியாசிகளில் தான் தபோவனம் ஆக இருக்கிறேன் என்று கூறியிருப்பாா் என்று கூறினாா்.

மகராஜ் அவா்களின் மகிமையைப் போற்றி "ஆனந்த பிரகாஷ் வித்யா பிரகாஷா" என்பவா் இயற்றிய "தபோவன் ஷட்கம்" என்ற பாடல்களில் அவா் பிரம்மனாகவே போற்றப்படுகின்றாா். அதாவது "ஸ்ரீ சௌமிய காசீச மகேஸ்வராய, தஸ்மை நம ஸ்வாமி தபோவனாய" என்று பாடியுள்ளாா்.

## மகானின் தவ வாழ்வு

பகவத்கீதையில் பகவான் மூன்று வகையான 'தவம்' (tapas) பற்றிக் குறிப்பிடுகின்றாா். அவையாவன சரீரம் சாா்ந்த தவம், மானசீக தவம், வாக் தவம் சின்மயா மிஷனின் பரமகுரு தபோவன் மகராஜ் அவா்கள், கீதா மாதாவின் ஆசியுடன் கீதா ஜெயந்தி தினத்தில் மாா்கஷீச மாதம் சுக்ல பக்ஷ ஏகாதசித் திதியில் 1989ஆம் ஆண்டு பாரதத்தின் தென்பகுதியில் உள்ள கேரளா மாநிலத்தில் அவதரித்தாா். அவா் தனது வாழ்வில் பகவான் குறிப்பிட்ட மூவகைத் தவங்களையும் மேற்கொண்டு அவற்றுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தாா்.

## சரீர தவம்

இதில் சரீர தவமானது சரீரத்தின் உதவியோடு செய்யப்படும் பூஜை வழிபாடுகள், தீா்த்த யாத்திரைகள்; ஆசிரியா், பெரியோா், குரு ஆகியோரை வழிபடுதல் ஆகியவற்றைக் குறிக்கும். சுவாமி தபோவன் மகராஜ் இவற்றில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தாா். இமயத்தில் உத்தரகாசியில் வாழ்ந்த

காலத்திலும் தினமும் கங்கையில் ஜலம் எடுத்துக்கொண்டு சௌமிய காசீஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று சிவனுக்கு அபிஷேகம் செய்து வழிபாடு செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இவ்வாறு வழிபாடு முடித்த பின்னர் ஆலய முன்றலில் இருக்கும்போது, சுவாமிஜியால் இயற்றப்பட்டு தொகுக்கப்பட்ட தோத்திரப் பாடல்களே "சௌமிய காசீச ஸ்தோத்திரம்" என்ற பெயருடன் வெளிவந்துள்ளது. இவை முற்றாக உபநிஷதங்களின் சாராம்சத்தை உள்ளடக்கியதாக உள்ளது.

கேரளாவில் தனது பெற்றோருடன் வாழ்ந்த இளமைக் காலத்திலேயே அதிகாலை 3 மணிக்கே நித்திரை விட்டெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு நடைப்பயிற்சியில் ஈடுபடுவார். தொடர்ந்து குளித்தபின் பிராணாயாமம் செய்து பின்னர் நீண்ட நேரம் சமாதியில் ஆழ்ந்துவிடுவார். பிற்காலத்தில் இமயத்தில் உத்தரகாசி மற்றும் கங்கோத்ரி ஆகிய இடங்களில் வாழ்ந்த போதும் இவ்வழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தார்.

கேரளாவில் வசதி வாய்ந்த குடும்பத்தில் பிறந்து சுப்பிரமணியம் என்ற பெயருடன் வாழ்ந்த இளமைக்காலத்திலும் தன் தந்தையாரிடம் இருந்து அடிப்படைத் தேவைகளை மட்டுமே பெற்றுக் கொண்டார். தனக்கென்று செலவழிக்க, சேமிக்க என்ற எண்ணங்கள் எதுவுமின்றி தன் வாழ்நாளைக் கடத்தினார்.

இளமையிலேயே தந்தையார் காலமாகிவிட்டார். சகோதரர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு ஏற்றுச் செவ்வனே நடாத்தினார். தனது 25ஆவது வயதளவில் தானாகவே ஒரு சஞ்சிகை வெளியிட்டார். அதற்கு தன்னை மிகவும் கவர்ந்த தேசிய விடுதலை வீரர் கோபாலகிருஷ்ண கோகேல், அவரின் பெயரின் முதல் பகுதியாகிய "கோபாலகிருஷ்ண" என்னும் பெயரை வைத்தார். இதனால் பல கல்விமான் களின் பாராட்டுக்கள் கிடைக்கப்பெற்றார். இருந்தும் இரு வருடங்களில் இதனையும் கைவிட்டார். பின்னர் ஸ்வாமி சாந்தியானந்த ஸரஸ்வதி என்பவரிடம் பல ஆன்மிக நூல்களைக் கற்றார். அப்பொழுது குரு இவரை 'சித்விலாஸ்' எனும் நாமம் சூட்டி அழைத்தார்.

## வாக் தவம்

இது பேச்சினால் செய்யப்படும் தவமாகும். கீதையில் ஒருவருடைய பேச்சு, மற்றவர்களுக்கு எவ்வித மனக்கிளர்ச்சி (மனவேதனை) யையும் ஏற்படுத்தாமல், அவர்களிடம் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாமல், உண்மையானதாகவும், இனிமையானதாகவும், நன்மை பயப்பதாகவும் இருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. சுவாமி தபோவன் மகராஜ் இதனை முற்றாகக் கடைப்பிடித்து வாழ்ந்து அவரை விமர்சித்த மனிதர்கள், அவர்களிடம் வழிப்பறி செய்யவந்த கொள்ளைக்காரர்கள் எனப் பலரையும் தனது 'வாக் தபஸ்' மூலம் எவ்வித இடர்ப்பாடுகளும் இன்றி வெற்றி கொண்டிருக்கின்றார். சாஸ்திர நூல்களைக் கற்பதும் 'வாக் தபஸ்' இல் அடங்கும். இவற்றை தபோவன் மகராஜ் தனது (Guidance from Guru) "குருவிடமிருந்தான வழிகாட்டல்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## மானசிக தவம்

கீதையில், மன அமைதி, நல்லிதயம், மௌனம், சுய கட்டுப்பாடு, இயற்கையின் தூய்மை இவை உள்ளத்தில் எளிமையை ஏற்படுத்த வல்லன என்று கூறப்படுகின்றது. தபோவன் மகராஜ்

இவற்றிற்கு உதாரணமாக விளங்கினார். மேலும் கீதையில் ஊக்கமுள்ள உற்சாகமான மனதினால் மட்டுமே நல்ல தீர்மானம் எடுக்கும் கூர்மையான புத்தியை ஏற்படுத்தமுடியும் என்று கூறப்படுகின்றது. இவற்றை கர்ம யோகத்தினாலும் பிரசாத புத்தியினாலும் அடைய முடியும்.

சுவாமி வாழ்க்கையில் பல தடைகளைச் சந்தித்திருக்கின்றார். அவற்றையெல்லாம் தனது விவேகம், வைராக்கியம் ஆகியவற்றால் வெற்றி கொண்டிருக்கின்றார். அவர் தனது "ஈஸ்வர தர்சனம்" எனும் நூலில் "மனம் ஆசைகளுக்குள்ளாகி அலைக்களிக்கப்படக் கூடியது. அதனை மாறாத உணர்ச்சி களுக்குட்படாத வேறுபாடுகளற்ற தன்மையால் வெற்றி கொள்ளவேண்டும்" என்று கூறியுள்ளார்.

## சந்யாச வாழ்வு ஆரம்பம்

பின்பு வீட்டில் உள்ள பொறுப்புக்கள் அனைத்தையும் தனது சகோதரனிடம் ஒப்படைத்து அவரை நல்வழிப்படுத்திவிட்டு வீட்டைத் துறந்து 'நர்மதை' ஆற்றங்கரையை அடைந்தார். அங்கு தானே வித்வத் ஸந்நியாசம் மேற்கொண்டார். தனது பெயரையும் "தியாகானந்தா" என்று மாற்றிக் கொண்டார். வித்வத் சந்நியாஸம் என்று கூறப்படுவது, ஸந்நியாசம் எடுப்பவருக்கு மேலான ஆன்மிக அறிவு உள்ளவர் எவரும் உலகில் இல்லாத பட்சத்தில் மட்டும் தானாகவே எடுத்துக்கொள்வதாகும். இத்தகைய உயர்ந்த அறிவு, அவரது பூரண துறவின் மூலம் கிடைக்கப்பெறுகின்றது. இவ் வைராக்கியத் தின் மூலம் பூரண ஞானம் கிட்டுகின்றது.

அதன்பின் 'ரிஷிகேஷ்' சென்று அங்கு கங்கைக் கரையில் அநேக ஸந்நியாசிகள் மற்றும் சாதுக்கள் தங்கும் இடமான ஜாடியில் (Jhadi) தங்கியிருந்தார். அக்காலப்பகுதியில் அங்குள்ள கைலாஸ் ஆச்சிரமத்தில் ஆன்மிக அருளுரைகள் இடம்பெறுவதை அறிந்து அங்கு அவற்றைச் செவிமடுக்கச் சென்றிருந்தார். அங்கு அருளுரை வழங்கிய ஆசானின் விசாரணைகளின் போது, தான் வித்வத் சந்நியாசம் பெற்றுக்கொண்டமை பற்றியும் ஸ்வாமி தியாகானந்தா என்பது தானே தனக்குச் சூட்டிய பெயர் என்றும் தெரிவித்தார்.

அதனைச் செவிமடுத்த ஆசான் மகராஜிடம், அவரது துறவு நிலை மூலம் பூரண ஞானத்தைப் பெற்றிருந்தாலும் "கர்ம ஸந்நியாசம்" எடுக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். அத்துடன் வேறு சில மகான்களும் இதனை வலியுறுத்திக் கூறினர். அதனால் தபோவன் மகராஜ் ரிஷகேஷ் இல் அமைந் துள்ள கைலாஸ் ஆச்சிரமத்தின் அன்றைய தலைவரும், இரண்டாவது "மகாமண்டலேஸ்வரர்" உம் ஆகிய ஸ்வாமி ஜனார்த்தனகிரி மகராஜ் என்பவரிடத்தில் ஸந்நியாச தீட்சை பெற்றுக்கொண்டார். அவரால் வழங்கப்பட்ட தீட்ஷா நாமமே 'தபோவனம்' ஆகும்.

அதனைத் தொடர்ந்து சிறிதுகாலம் ஸ்வாமி ஜனார்த்தனகிரி அவர்களிடம் ஆன்மிகக் கல்வியைக் கற்றார். பின்பு தபோவன் மகராஜ் உடன் வேறு சில மகான்கள் சேர்ந்து அந்நாளில் அடர்ந்த காடுகளாய் இருந்த பாதைகளூடாக 'உத்தரகாசி' (இமயமலையின் ஓர் இடம்) என்னும் இடத்தைச் சென்றடைந்தனர்.

1935ஆம் ஆண்டில் உத்தரகாசியில் 'கங்கா சங்கர்' என்பவரால் அருகருகே இரு குடில்கள் அமைக்கப்பட்டன. அதில் பெரிய குடிலில் தபோவன் மகராஜும், மற்றயதில் ஸ்வாமி கோவிந்த கிரி அவர்களும் தங்கித் தமது தவ வாழ்க்கையை நடாத்தினர்.

மகராஜ் அவர்கள் சமஸ்கிருதம், ஹிந்தி, ஆங்கிலம், மலையாளம், தமிழ் எனப்பல மொழிகளையும் சரளமாகப் பேசும் ஆற்றல் பெற்றிருந்தார். வேதாந்த விளக்கங்களை அவரிடம் வரும் அடியார்களுக்கு அவரவர் மொழிகளில் விளக்க வல்லவராக இருந்தார். இதனால் அவரிடம் வரும் அடியார்கள் கூட்டம் பெருகியது. ஆன்மிக ஞானத்தைப் பெற்றுக்கொள்ள வருபவர்களுடன், ஆசீர்வாதம் பெறுவதற்காகவும் அநேகர் வருகைதந்தனர். இவரது மகிமையைப்பற்றி அறிந்து பல மேற்கத்திய நாட்டவர்களும் அவரது குடிலுக்கு வந்து ஆசி பெற்றுச் சென்றுள்ளனர்.

இந் நாட்களில் 1949ஆம் ஆண்டில் ரிஷிகேஷில் சுவாமி சிவானந்தர் அவர்களிடம் சந்நியாச தீட்சைபெற்று சுவாமி சின்மயானந்தர் என நாமம் சூட்டப்பெற்ற பாலகிருஷ்ண மேனன், சுவாமி சிவானந்தரின் வழிகாட்டலில் தபோவன் மகராஜிடம் வந்து சேர்ந்தார். சின்மயானந்தரின் மனோபலத் தைப் பரீட்சிக்கும் வகையில் சில சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டபின் அவரை தனது சிஷ்யனாக ஏற்றுக்கொண்டார். அதன்பின் சில வருடங்கள் குருநாதராகிய தபோவன் மகராஜ் அவர்களுடன் சுவாமி சின்மயானந்தர் கங்கோத்ரி மற்றும் உத்தரகாசியில் காலநிலைக்கேற்ப மாறி மாறி தங்கி இருந்து பகவத்கீதை மற்றும் உபநிஷதங்களைக் கற்றார்.

அக்காலப்பகுதியில் குரு நாதருக்கான உணவு தயாரித்தல், உடைகளைத் துவைத்தல், குளிப்பதற்கான சுடுநீர் தயாரித்தல் எனப் பல சேவைகளைச் செய்து குருவின் ஆசியைப் பெற்றதுடன் ஆன்மிக விடயங்களையும் உடன் இருந்து கற்றார். இவ்வாறு ஞானம் பெற்றவரே தபோவன் மகராஜ் அவர்களின் தபோவன பிரசாதம் (Tapovan Prasad) ஆக எங்களுக்குக் கிடைத்திருக்கும் பூஜ்ய குருதேவர் ஸ்வாமி சின்மயானந்தர் அவர்கள்.

மலர்ந்த மலர் வாடுவது, முதிர்ந்த கனி உதிர்வது, மனித உடல் விடுபடுவது எல்லாமே இயற்கையின் நியதி. அந்தவகையில் தபோவன் மகராஜ் அவர்களும் 1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் திகதி அதிகாலை 4.30 மணிக்கு பூரணை தின பிரம்ம மூகூர்த்தத்தில் மகா சமாதி அடைந்தார்.

இத்தகைய மகான்களின் வாழ்க்கை வரலாறுகள் எம்மைப் புனிதப்படுத்தக்கூடியன. இவற்றைக் கற்று இதன்படி ஒழுகி நாமும் உய்தி பெறுவோமாக.

ஓம் தத் சத்.

ௐ

# பூஜ்ய குருதேவரின் பூரண வாழ்வு


இருபதாம் நூற்றாண்டில் அவதரித்து பல்லாயிரக் கணக்கான மக்களிடையே ஆன்மிகத் தேடலை உருவாக்கிய ஆன்மிக ஞானி பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்கள் ஆவார். 42 வருடங்கள் (1951 - 1993) பூரணமாக தன்னை ஆன்மிகப் பணிக்கெனவே அர்ப்பணித்த மகான். இமயத்தில் தான் பெற்ற ஞானத்தை அகிலத்தில் அனைத்து மக்களுக்கும் வழங்கி அதிகளவு மக்கள், அதிக நேரம், அதிகளவு மகிழ்வுடன் வாழ வழி வகுக்க வேண்டு மென்று அயராது உழைத்த அதி உத்தம புருஷர். அவரது இதயம் உண்மையான செய்ற்பாட்டின் 15% மட்டுமே செயற்படுகின்றது என்றும் கட்டாயம் ஓய்வெடுக்க வேண்டும் என்றும் வைத்தியர்கள் ஆலோசனை வழங்கி இருந்தும் தன் பணியைத் தொடர்ந்து செய்து வந்த கருணைக்கடல். ஆண், பெண், இனம், மதம், இளையோர், முதியோர், குலம், கோத்திரம், ஏழை, பணக்காரன் என்ற எவ்வித பேதமுமின்றி எங்கும் எவரிலும் அந்தப் பரம்பொருளையே கண்டுணர்ந்து ஏனையோரும் அந்தப் பேருண்மையை உணர வேண்டும் என்று உணர்த்திய காருண்யவாதி.

ஆதி சங்கரர் அருளிச் செய்த அத்வைத வேதாந்த சாஸ்த்திரத்தை அனைத்து மக்களுக்கும் உபதேசித்த ஆத்ம சொரூபம். அவரே பிரம்மம். பிறப்பு இறப்பு அற்ற அந்தப் பிரம்மம் குரு வடிவம் தாங்கி உலகியலில் சிக்கித் தவிக்கும் மக்களிடையே ஆன்மிக விழிபுணர்வை ஏற்படுத்துவதற்காக மனித உடல் தாங்கி உலகில் ஜனனித்து, 08.05.2016 ஆம் திகதியுடன் நூறாண்டுகள் நிறைவடைந்துள்ளது. இக்காலப் பகுதியில் அவரது உடலோடு கூடிய வாழ்க்கைப் பயணம் எப்படி அமைந்தது என்று சிந்திப்போம்.

பாரத தேசத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள கேரளா மாநிலத்தில் எர்ணாகுளம் என்னும் கிராமத்தில் உயர் குடும்பத்தில் வாழ்ந்த குட்டன் மேனன் மற்றும் பார்வதி தம்பதியர் செய்த தவப் பயனாக 08.05.1916 ஆம் திகதி முன் இரவு 7.30 மணிக்கு ஆண் குழந்தை ஜனனமாகியது. குழந்தையின் ஜாதகத்தை கணித்த ஜோஸ்யர் "குழந்தை எதிர்காலத்தில் பெரும் புகழ் பெற்று வாழ்வான்" எனக் கூறினார்.

அடுத்து, இவர்களது குடும்பத்துடன் மிகவும் நெருக்கமான மகான் சட்டம்பிச் சுவாமியார், குழந்தையைப் பார்த்து, பகவான் கிருஷ்ணரால் அருளிச் செய்யப்பட்ட பகவத் கீதையை உலகெங் கணும் பரவச் செய்யும் உத்தமனாக வர உள்ளவர் என்பதை உத்தேசித்து பால கிருஷ்ணன் என நாமம் சூட்டினார். வீட்டில் அனைவரும் பாலன் என்றே அழைத்தனர்.

குழந்தை பாலன் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்துவரும் நாளில் இரண்டு வயது நிரம்பியதும் சட்டம்பிச் சுவாமியார் மீண்டும் அவர்களது வீட்டுக்கு வந்து குழந்தை பாலனுடன் நீண்ட நேரம் ஏதோ ஒரு மொழியில் உரையாடினார். குழந்தையும் குதித்து மகிழ்ந்து குதூகலித்தது. தாயார் சாமியாரிடம் பாலனிடம் என்ன கதைக்கின்றீர்கள் என்று வினாவினார். அதற்குச்



பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர்

# பூஜ்ய குருதேவரின் இளமைப் பருவம்




பாலப்பருவத்தில் பாலன்



பாலனை ஈன்ற தாயார்



தந்தையார் மற்றும் சகோதரிகளுடன் பாலன்



சட்டம்பிச் சுவாமியார்



எர்ணாக்குளத்தில் இளமையில் பாலன் வாழ்ந்த வீடு



பள்ளிப்பருவத்தில் பாலன்




கல்லூரி மாணவனாக

## பூஜ்ய குருதேவரின் ஆன்மீகப் பாதையில்



இமயமலை யாத்திரைக்கு
ஆயத்தமாகும் பாலன்



சந்நியாச தீட்சை பெற்றதன் பின்னர் குருவுடன்...


## பூஜ்ய குருதேவரின் சாதனைகள்



சிவபூஜையில் குருதேவர்




குருவுடன் சிஷ்யர்




கங்கோத்ரியில் குருவின் குடியில்

## பூஜ்ய குருதேவருக்கு ஞானம் வழங்கிய ஞானிகள்



தீட்ஷா குரு சுவாமி சிவானந்தர்




ஞானகுரு
சுவாமி தபோவன் மகராஜ்

# பூஜ்ய குருதேவரின் புனிதப் பணிகள்




குழந்தைகளை குதூகலிக்க
வைக்கும் குருதேவர்




ஆன்மிக ஞான
போதனையில்



பாடசாலை மாணவர்களுடன்..



சேவகர்களுடன்..

சாமியாரும் "நான் கூறிய எல்லாவற்றையும் குழந்தை புரிந்துகொண்டான். நான் கூறவேண்டிய தெல்லாம் கூறியாயிற்று பயப்பட வேண்டாம்" என்று பதிலளித்தார்.

இவ்வாறான சந்தோஷமான வாழ்க்கை ஓட்டத்தில் பாலனின் 5ஆவது வயதில், தாயார் மூன்றாவது பிரசவத்தில் மரணமானார். தாயாரின் பிரிவு குழந்தையைப் பாதித்தது. அதனை நீண்ட காலம் உணர விடாமல் வீட்டில் உள்ள ஏனையோரின் அரவணைப்பு அந்த சோகத்தில் இருந்து மீள வைத்தது.

இக்குடும்ப பெண்கள், குழந்தைகள் அனைவரும் சேர்ந்து தினமும் மாலை வேளையில் சுவாமி அறையில் பூஜையில் ஈடுபடுவது வழக்கம் இது குறித்து தன் அனுபவத்தை பின்னாளில் சுவாமி சின்மயானந்தர் குறிப்பிட் டதைப் பார்ப்போம்.

"கண்கள் தூங்காமல் இருக்கச் சாமிப்படங்களில் கண்களை லயப்படுத்துவேன். சரஸ்வதியின் கைகளில் வீணை, இத் தோற்றம் என்னைக் கவர்ந்தது. நானும் கைகளில் வீணை ஏந்தியிருப்பது போல் கற்பனை செய்து அதனை மீட்டுவேன். அதில் இருந்து இனிய ஓசை எழுந்து என் காதில் விழுவது போல எண்ணி மகிழ்வேன். லட்சுமி தேவியைப் பார்ப்பேன். சமநிலை தவறாமல் இவ்வளவு காலமாகக் கம்பீரமாகத் தாமரைப் பூவில் எப்படி நிற்க முடிகிறது? என் மனம் ஆச்சரியப்படும். குழலூதும் கண்ணன் எவ்வளவு கொள்ளை அழகு! குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும் அகன்ற நெற்றியும், தலையில் சடையும் அதில் பிறைச் சந்திரனும் கங்கையுமாகக் காட்சி தரும் சிவபெருமானின் தோற்றம் என்னைப் பெரிதும் கவர்ந்தது. கண்களை மூடி விழித்துப் பார்க்கிற போதெல்லாம் அத் தோற்றம் என் முன் காட்சியளிக்கும் அளவுக்குப் பயிற்சியை வளர்த்துக் கொண்டேன்." ஓம் நமசிவாய, ஓம் நமசிவாய."

மேலும் அந்நாளைய பூஜை அறை பழக்கம் பின்னாளில் தனது மன ஒடுக்கத்துக்கு பெரிதும் உதவியதாக குருதேவர் பல இடங்களில் குறிப் பிட்டுள்ளார்.

பள்ளிப் பருவத்தில் தாயை இழந்த குழந்தை மீது ஏனையோர் காட்டும் அதீத பரிவு பாசம் ஆகியன பாலனை குறும்புத்தனமான பிள்ளையாக மாற்றி பாடசாலையில் குறும்புகள் செய்வதுடன், கிண்டல் கேலிகள் முதலியவற்றில் ஈடுபட வைத்தாலும் இயல்பாக மாணவர்களிடையே பரிவு, பாசம் என்னும் பண்புகளிலும் சிறந்து விளங்கினான்.

வாழ்கையின் பொருள் என்ன? என்பதை அறியவேண்டும் என்ற ஆவல் மிகுந்திருந்தாலும், பார்க்கும் சாதுக்களை எல்லாம் வணங்குதல், ஏன் எதற்கு என ஆராயாமல் இயந்திரத்தனமாய் ஆலயம் சென்று வருதல் போன்றவற்றை கேலி செய்யவும் தவறுவதில்லை. இவ்வாறு வெளித் தோற்றத்திற்கு இறை நம்பிக்கையற்றவன் போல், காட்சி தந்தாலும் தினமும் 'ஓம் நமசிவாய' ஜபம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆம், வீட்டுச் சூழல் அவ் இளைஞனை அந் நிலைக்குக் கொண்டு சென்றது. இந் நிலையில் பாலன் மேற்படிப்புக்காக லக்னோ பல்கலைக்கழகம் செல்லும் நோக்குடன் வீட்டை விட்டுப் பிரிய நேர்ந்தது.

கல்லூரிப் படிப்புக்காகச் சென்ற பாலகிருஷ்ண மேனனை அக்காலத்தில் தீவிரமாக நடை பெற்றுக்கொண்டிருந்த இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் கவர்ந்தது. கல்லூரியை விட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டான். தீவிர நடவடிக்கைகளின் விளைவாக அவனைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. இதனால் தலைமறைவாக காஷ்மீர் பகுதியில் வாழ்ந்து வந்தார். இக்காலத்தில் மீண்டும் டில்லிக்கு வந்து போராட்டத்தில் செயற்பட நினைந்தபோது கைது செய்யப்பட்டு டில்லி சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் கொடிய நோய் பரவி பலர் இறக்க நேரிட்டது. சிறைக்காவலாளிகள் இறக்கும் தருவாயில் இருந்த பாலனை வீதியில் வீசி விட்டார்கள். வீதியில் வந்த பெண்ணொருவர் அவனை வீட்டுக்கு எடுத்துச் சென்று தகுந்த வைத்தியம் செய்ததால் உடல் தேறினான். உடல் நலம் தேறியதும் தன்னைக் காப்பாற்றிய அந்தப் பெண்ணிடம் நன்றி கூறி விடைபெற்றுக் கொண்டு மேலும் தன் உடலைத் தேற்றுவதற்காக தனது நண்பர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்தார்.

அக்காலத்தில் ஒரு பத்திரிகையாளனாக எழுத்துத்துறையில் தனது ஆர்வத்தை செலுத்தினார். இக்காலகட்டத்தில் இமயத்தில் வாழும் துறவிகள் (சந்நியாசிகள்) பற்றிய ஒரு தொடர் கட்டுரையை வாசித் தார். இது அவரது வாழ்க்கையில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. இதிலிருந்தே ரிஷிகேசத்தில் ஆனந்தக் குடிலில் இருந்து ஆன்மிகப் பணியாற்றிய சுவாமி சிவானந்தா அவர்களைப் பற்றியும் அறிந்து கொண்டார். பத்திரிகைத் துறையில், ஆங்கில மொழியில் முதுகலைப்பட்டம் பெற்ற பாலகிருஷ்ண மேனனுக்கு பல மேல்தட்டு மக்களின் வாழ்க்கைமுறை, அவர்களின், எல்லாம் இருந்தும் மன நின்மதியற்ற நிலை, இவைகளைப் புரிந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. இதனால் வாழ்க்கையின் அர்த்தம் என்ன? சதா துயரக் கடலில் மூழ்கி இருப்பது தானா? இதனை விட சதா இன்பத்தில் திளைக்கக் கூடிய வழி இருக்கின்றதா? என்பது குறித்து சிந்திக்கத் தொடங்கினார். இதனை மேலும் தெளிவு படுத்த விரும்பிய பாலன் இந்தியாவின் பல இடங்களுக்கும் பிரயாணம் செய்தான். அப்போது ரமண மகரிஷியின் ஆசி பெறும் வாய்ப்பும் கிட்டியது.

இதனைத் தொடர்ந்து இமயத்தில் வாழும் சந்நியாசிகள் என்ன செய்கிறார்கள் என அறிய விரும்பிய பாலன் பூர்வ ஜன்ம கர்மாவால் ரிஷி கேசத்தில் தங்கியிருக்கும் துறவிகளை, குறிப்பாக சுவாமி சிவானந்தரைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். மேலை நாடுகளில் டாக்டர் சிவானந்தர் வைத்தியத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர், அதனைத் துறந்துவிட்டு ரிஷிகேசத்தில் கங்கைக் கரையில், 'ஆனந்தக்குடில்' எனும் ஆச்சிரம் அமைத்து அதிலிருந்து ஆத்ம போதனை செய்து கொண்டிருந்தார். அத்துடன் அங்கு வாழும் துறவிகள், மக்கள் அனைவருக்கும் எவ்வித வேறுபாடுமின்றி தனது செலவிலேயே வைத்திய சேவை செய்து வருவதைக் கண்டு வியந்தான். சில நாட்கள் ஆச்சிரமத்தில் தங்கச் சென்ற பாலன் மூன்று மாதங்கள் ஆனந்தக் குடிலில் சுவாமிகளின் தொண்டனாக இருந்து அவரது நல்லாசியைப் பெற்றான்.

மீண்டும் தனது தொழிலை மேற்கொள்ளச் சென்ற மேனனால் அதில் முழுமையாக ஈடுபட முடியவில்லை. இக்காலகட்டத்தில் அவனது நெருங்கிய நண்பர் ஒருவர் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். குடும்பம் தவித்தது. இது இன்னும் மேனனின் மனதில் வாழ்க்கையின் நிலையாமை பற்றிய நினைவைத் தீவிரப்படுத்தியது. இனிமேல் தான் முன்னைய ஆடம்பர வாழ்க்கைக்கு திரும்புவதில்லை யென்றும் ஆன்மிக சாஸ்திரங்களைக் கற்று இவ்வாறெல்லாம் நடைபெறுவதற்கான மூலகாரணம் என்ன? யார் இதை நடத்துகிறார்? என்பதை அறிய வேண்டும் என்றும் கூறி சுவாமி சிவானந்தரிடம் தான்

துறவு மேற்கொள்ளல் வேண்டும் என்று தெரிவித்தார். இது திடீரென எடுக்கக் கூடிய முடிவல்ல என்றும் நன்றாகச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என்றும் கூறி காலத்தைத் தள்ளிப்போட்டார். இத்தகைய உயர்ந்த நோக்குடன் ஆனந்தக் குடிலிலேயே தங்கிய மேனன் இமயத்தின் விஷேச யாத்திரைத் தலங்களான ஜமுனோத்திரி, கங்கோத்திரி, பத்திரிநாத், கேதார்நாத் ஆகிய தலங்களுக்கு கால்நடையாகவே யாத்திரிகர்களுடன் இணைந்து யாத்திரை மேற்கொண்டான்.

யாத்திரையின்போது கங்கோத்திரி சென்று மீண்டும் வரும்போது உத்தரகாசியில் தவ வாழ்வு மேற்கொண்டு வாழ்ந்த மகான் சுவாமி தபோவனம் அவர்களை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். யாத்திரையின் போது பெற்ற அனுபவங்களும் மேனனுக்கு தீவிர வைராக்கியத்தை ஏற்படுத்தியது. யாத்திரை முடிந்து ரிஷிகேசம் திரும்பியதும் சுவாமி சிவானந்தர் மேனனை நோக்கி சந்நியாசம் பெறுவதற்கு பெற்றோரின் அனுமதி வேண்டும், என்றும் அதனைக் கடிதமூலம் பெறுமாறும் பணித்தார். மேனனும் மனமகிழ்வுடன் தந்தையாருக்கு கடிதம் எழுதினார். கடிதத்தைப் பார்த்து தந்தையார் தன் மகன் உலகியலில் ஊதாரியாகத் திரிவதிலும் இது எவ்வளவு மேல் என்றுணர்ந்து தனது சம்மதக் கடிதத்தை அனுப்பினார்.

25.02.1949இல் புனிதமான சிவராத்திரி தினத்தில் மேனனுக்கு தெய்வீகமான துறவு வாழ்வு - சந்நியாச தீட்சை சுவாமி சிவானந்தரால் அளிக்கப்பட்டது. சந்நியாசம் பெறுவதற்கான சடங்குகள் நடாத்தப் பெற்று, இதுவரை பாலகிருஷ்ணமேனன் எனும் நாமத்துடன் வாழ்ந்த இளைஞன் சுவாமி சின்ம யானந்த சரஸ்வதி என்ற பெயருடன் ஆன்மிக ஞானியாகப் பரிணமித்தார்.

சுவாமி சின்மயானந்தர், சனாதன தர்மத்தைக் காத்து வரும் சாஸ்திர நூல்களான பகவத் கீதை, உப நிஷத்துக்கள் இவற்றை முற்றாகக் கற்றுத் தேர்ச்சி பெறுவதே நோக்கமாகக் கொண்டிருந்தார். அவரது நோக்கத்திற்கு ஏதுவாக சுவாமி சிவானந்தரும் அவரை சுவாமி தபோவனம் அவர்களிடம் சென்று ஞானத்தை பெற்றுக்கொள்ளுமாறு பணித்தார்.

ரிஷிகேசத்தில் இருந்து உத்தரகாசிக்கு கால்நடையாகச் சென்ற சின்மயானந்தர் சுவாமி தபோவனம் அவர்களால் பல சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். சுவாமி சிவானந்தரால் "இமயத்தின் புகழ்" என்று போற்றப்பட்ட சுவாமி தபோவன் மகராஜ் சீடர்களிடம் சீரிய ஒழுக்க நெறிகளையும், ஒருமுகப்பட்ட கவனம் உயர்ந்த பண்புகள் ஆகியவற்றை எதிர்பார்க்கும் கண்டிப்புடன் கூடியவராக இருந்தார். சின்மயானந்தர் சுவாமி தபோவன் மகராஜ் அவர்களுடன் ரிஷிகேசம், உத்தரகாசி, கங்கோத்ரி ஆகிய இடங்களில் சீதோஷ்ண நிலை களுக்கு ஏற்ப தங்கி படித்து வந்தார்.

இவ்வாறு கல்வி ஞானத்தைப்பெற்ற சின்மயானந்தர் பகவத் கீதையை பகவான் எச்சந்தர்ப்பத் தில் யாருக்கு உபதேசித்தார் என்பதை ஆழ்ந்து சிந்தித்து "போர்க்களத்தில் சாதாரண ஷத்திரியனான (ஞானியோ அல்லது துறவியோ அல்ல) அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. ஆதலால் இதுவே இன்று வசதி வாய்ப்புகளுக்கு மத்தியிலும் சதா தொல்லைகள் துயரங்களுடன் போராடும் மக்களுக்கு உகந்த சாஸ்த்திரம் இதனை நாம் மக்களுக்கு உபதேசிக்க வேண்டும்" என்று தீர்மானித்தார். இது குறித்து

குருவின் விருப்பத்தை அறிய விரும்பினார். குரு, ஞானத்தை அடைய விரும்புபவர்கள் தேடி வர வேண்டும். நாம் தேடிச்சென்று கொடுக்க வேண்டியதில்லை என்று கூறினார். குருதேவர் மனப் போராட்டத்துடன் மலையிலிருந்து ஓடி வரும் கங்கா மாதாவின் அழகை ரசித்தபடி சிந்தித்துக் கொண்டிருந்தார். அப்போது கங்கா மாதா ஏதோவொரு செய்தியைக் கூறுவதுபோல் உணர்ந்தார். "மகனே என்னைப் பார்த்தாயா? இமயத்தில் உற்பத்தியாகி, சமவெளிகளில் பாய்ந்து, செல்லும் வழி யெல்லாம் மக்களுக்கு உதவுகின்றேன். நாம் பெற்றிருப்பதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதில் தான் நிறைவு ஏற்படுகின்றது" என்பதே அந்தச் செய்தி எனச் சிந்தித்தார்.

இவையெல்லாவற்றையும்விட "உயர்ந்த இமயத்தில் தனது தனிப்பட்ட ஆன்மிக நிறைவை விட மக்கள் வாழ்வில் ஓர் புதிய பார்வையை ஏற்படுத்தி ஒளிபெறச் செய்வதே உயர்ந்தது. மிகவும் முக்கியமானது" என எண்ணினார். சின்மயானந்தரின் தீவிர நாட்டத்தை உணர்ந்த குரு தபோவன் மகராஜ் முதலில் சந்நியாச யாத்திரை ஒன்றை மேற்கொள்ளுமாறு பணித்தார்.

சுவாமி சின்மயானந்தா சந்நியாசியாக (துறவியாக) சமூகத்தில் வாழும்போது ஏற்படும் சவால்களை சந்திப்பதற்கு 1951மே மாதம் தயாரானார். இதன்போது தங்குமிடம் உணவு ஆகியவற் றாலும், இவரை உணர்ந்து கொள்ள மறுக்கும் மக்களாலும் பல பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டி இருந்தாலும், தனது நோக்கத்தில் உறுதியாக இருந்தார்.

குரு தபோவன் மகாராஜ் அவர்களினதும், தீட்சா குரு சுவாமி சிவானந்தரின் "செல், விவேகானந்தரைப்போல் முழங்கு" என்ற ஆசிச் செய்திகளுடன் தனது முதலாவது "ஞான யக்ஞம்" கேனோபநிஷத், புனே நகரில் ஹரி ஹர பஜன் சமாஜ விநாயகர் ஆலயத்தில் நூறு நாட்கள் நடைபெற்றது முதல் நாள் ஏழுபேர் மட்டுமே வருகை தந்திருந்தாலும், செய்தி நாளடைவில் பரவி 100வது நாளில் பல நூற்றுக் கணக்கான அடியார்கள் பங்குபற்றி வேத கோஷங்களுடன் கூடிய ஒரு ஹோமத்துடன் நிறைவேறியது. ஞான யக்ஞத்தின் ஆரம்ப நிகழ்வில் "நாம் இந்துக்களாக இருப்போம்" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். இதன் தொகுப்பு கீழே தரப்படுகிறது.

## இந்துக்களாக இருப்போம்

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் இந்துக்களுக்கு விடுக்கும் அறை கூவல்கள் "நாம் இந்துக்களாக இருப்போம்" என்பது இது குருதேவரின் முதலாவது பிரசார உரை.

## நாம் இந்துக்களாக இருப்போம்

ஓர் இந்துக் கோவிலில், இந்துக்கள் நிறைந்த சபையில் இந்து மத சுவாமிஜி பேசுவதற்கு எடுத்துக் கொண்ட தலைப்பு 'நாம் இந்துக்களாக இருப்போம்' என்பதாகும். விந்தையாயில்லையா? பொருத்தமற்ற, முரண்பாடான எதிர்மறையான ஒன்றாகத் தோன்றுகின்றதல்லவா? இந்தச் சாதுவின் வரம்பு மீறிய துணிச்சலைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவதை என்னால் உணர முடிகிறது.

மதத்தைப்பற்றிப் பேசும் போதெல்லாம் படித்த இந்துக்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டு ஏளனச் சிரிப்பை சிந்துவதென்பது நாகரிகமாகிவிட்டது. நமது மதத்தை விமர்சிக்கும் இவர்கள் மீது எனக்கு

அனுதாபம் உண்டாகிறது. ஆனால் நமது புராதனமான, புனிதமான மதத்தை ஒதுக்கி வைத்து விட்டு வாழ்ந்தால்தான் சமூகத்திலும் நாட்டிலும் பல பயன்கள் அடைந்து நல்வாழ்வு வாழமுடியும் என இந்த சிந்தனைகளற்ற கூட்டம் ஆர்ப்பரிக்கும் போது நான் எனது நிலையை மறுபரிசீலனை செய்ய வேண்டி யுள்ளது.

தற்சமயம் நாட்டில் மலிந்துள்ள ஒழுங்கீனம், தவறான நெறிமுறைகள், கலாசாரச் சீர்கேடு ஆகியவற்றின் நடுவே மதத்தை முழுவதுமாக ஒதுக்கிவிட்டு வாழ நினைப்பது என்பது அழிவை நோக்கி நாமே வேகமாகச் செல்வதற்கு ஒப்பாகும். நமது மதம் தனது அருமை பெருமைகளை தற்போது சற்று இழந்திருப்பதாகத் தோன்றினாலும், எதையும் பின்பற்றாமல் வாழ்வதை விட, மதத்தைப் பின்பற்றி வாழ்தல் மேலானதாகும்.

நாம் அனைவரும் பெருமுயற்சி செய்து, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய் நிரூபிக்கப்பட்ட உண்மைகளையும், பெருமைகளையும் கொண்ட இந்து மதத்திற்கு ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்க வேண்டும். அதன் மூலம் நாமும், கலாசாரம் நாகரிகத்தின் உச்சத்தில் இருந்த அந்த பொற்கால வாழ்க்கையை வாழ முயல்வதே அறிவார்ந்த செயலாகும் என நான் எண்ணுகிறேன்.

இன்றைய இந்தியாவில் இந்துத்வம் என்பதும் புனிதமான மூடத்தனங்களின் மூட்டை என்பது போலவும், உண்பது, உடுத்துவது, பேசுவது என்பது போலவும் பொருள் கொண்டதாகிவிட்டது என்பதில் சிறிதும் ஐயமில்லை. நாம் பெறவிரும்பும் "பர்மிட" முதலியவைகளுக்கு அதிகார வர்க்கத்தின் காலடியில் இலஞ்சம் கொடுத்துப் பெறுவது போல, மதபோதகர்களிடமும், அர்ச்சகர்களிடமும் தட்சிணையைச் சமர்ப்பித்து விரும்பிய அனைத்தையும் பெற்றுக்கொண்டு விடலாம் என்று எண்ணும் அளவிற்கு நமது கடவுள்களின் நிலையை தாழ்த்திவிட்டோம்.

இந்நிலை திடீரென ஏற்பட்ட சரித்திர மாற்றத்தாலோ, எதிர்பாராத விபத்து போன்றோ நிகழ்ந்ததல்ல. இந்துமதம் கடந்த இருநூறு ஆண்டுகால ஆட்சியாளர்களால் வேண்டப்படாத அநாதைகள் போல நடத்தப்பட்டதாலும், மிகப்பெரும் செல்வந்தர்களின் மிகக்குறைந்த ஊக்கத்தாலும் இந்த நிலைக்கு இறங்கிவிட்டது. முற்காலத்தில் சிறந்த, கற்றறிந்த தத்துவஞானிகள் ஆட்சியாளர்களை வழிநடத்தி ஆலோசனைகள் வழங்கி வந்தனர். காலப்போக்கில் அந்த ஆலோசகர்களின் தகுதிகளும், ஆட்சியாளர்களின் தகுதிகளும் சீர்கெட்டு தரம்தாழ்ந்து விட்டது. மெல்ல, மெல்ல அவர்கள் நம்மை இன்று நாம் காணும் வருந்தத்தக்க நிலைக்கு கொண்டுவந்து விட்டனர். படித்த வர்க்கத்தினரின் பொதுவான கோஷம் "மதம் தேவையில்லை" என்பதாகும். தீர்க்க சிந்தனையற்றவர்களும் விஷயம் புரியாமல் இருப்பவர்களும் மட்டுமே இதை இந்துத்வம் என்கின்றனர்.

இந்துமதம் நம்மை இதயமற்ற வியாபாரியாக, இலஞ்ச லாவண்யங்களுக்கு ஆட்பட்ட வர்களாக, கோழைகளாக, இரக்கமற்ற முதலாளிகளாக, நம்பிக்கையில்லாத ஊழியர்களாக, சமூக வாழ்வில் சகோதர மனிதரைக் கைவிடுபவராக, வறுமை, பட்னியை மட்டுமே அளிப்பதாக, கொள்ளையை ஊக்குவிப்பதாக, சகிப்புத்தன்மையை அழிப்பதாக, மதவெறியைத் தூண்டுவதாக, இரும்பு இதயமும் கொடூர எண்ணமும் கொண்டவராகவும் மாற்றுவதாக மாற்றிவிடுமானால் - நானும் உங்களுடன் சேர்ந்துகொண்டு "இந்து மதம் ஒழிக" என கோஷம் போடத்தயார்.

நமது நாட்டில் இந்துக்கள் தாங்களாகவே மதம் வீழ்ச்சியடைய அனுமதித்து விட்ட ஓர் அவல நிலையை மேலே சொன்னவைகள் காட்டுகின்றன. மிகப்புராதனமான, மகத்துவம் நிறைந்த இந்து மதத்தின் இன்றைய வீழ்ச்சியின் அறிகுறிகளே இவைகள். நம் அன்றாட வாழ்வில் மேம்போக்காகக் காணப்படும் சாதாரண நிகழ்வுகளை உள்ளடக்கியதல்ல இந்துமதம். இது நமது பலவிதமான ஒழுக்கநெறிகளைக் கொண்ட முழு நிறைவடைந்த விஞ்ஞானமாகும். ஒவ்வொரு தனிமனித, சமூக, உள்நாட்டு மற்றும் சர்வதேசத்தின் பிரச்சனைகளுக்கும் இதில் தீர்வுகள் உள்ளது. துரதிஷ்டவசமாக இன்று நாம் பின்பற்றி வருவது அந்த உண்மையான மகத்தான இந்துமதம் அல்ல. இந்நிலை - தன்னலமான, கர்வம் மிகுந்த, அதிகார மமதை கொண்ட பிரிவினரால், நம்மை அடிமைகளாக்கி, அவர்களின் இச்சைகளுக்கும் திட்டங்களுக்கும் நம்மை உபயோகித்து, நம்பிக்கைத் துரோகங்களின் மூலம் நம் மீது திணிக்கப்பட்டதால் ஏற்பட்டதாகும்.

இன்றைய இந்து, அறிவிலியாக, நமது மதத்திற்குக் கெடுதல் புரிந்தவர்களின் துயரகரமான வெற்றிக்கு துணை செய்பவனாக இருக்கின்றான். அத்தகையோரால் நமது பெருமைகள் மிகுந்த சாஸ்திரங்கள் கூறும் அடிப்படையான, இந்து மதத்தின் ஆணிவேரான உண்மைத் தத்துவங்களை அறிந்து கொள்ளாமலே வாழ்ந்து விட்டோம். உண்மையான இந்து மதம் என்பது "சனாதன தர்மம்" - உபநிடதங்களின் நிலையான மாற்றமடையாத உண்மைகளைக் கொண்டதாகும்.

மனிதன் தனது சாதனைகளின் உச்சத்தில் தெய்வமாகவே ஆகிவிடுகின்றான் என உபநிடதங்கள் அறுதியிட்டு, தெள்ளத் தெளிவாக, பிழைகள் இன்றிப் பறைசாற்றுகிறது. மனிதன் ஒவ்வொரு நொடியிலும், அன்றாட வாழ்வின் நிகழ்வுகளில் ஓர் ஒழுங்கு முறையுடனும், விழிப்புணர் வுடன், பழக்கத்தால் கெட்டிப்பட்டுவிட்ட ஒழுங்கின்மையிலிருந்து விடுபட்டு அவனுள்ளே மறைந்து கிடக்கும் அழகிய, நிலையான, தெய்வத் தன்மையுடன் வாழ அவனை அறிவுறுத்துகிறது.

ஒரு மனிதன் தன்னை முழுமையான உணர்வுகளுடன் தூய்மையானவனாக மாற்றிக் கொண்டு சொந்த முயற்சிகளால் எழுச்சியடைந்து, அவனது உண்மைத் தன்மையைத் திரும்பவும் அடையமுடியும் என்ற வழிமுறைகளைக் கொண்டதே இந்துமதம். இது மிகப்பெரிய அரங்கில் பாதுகாக் கப்பட்டு, வழிப்பட்டு, புராணங்களிலும் சாஸ்திரங்களிலும் உள்ள உண்மைத் தத்துவங்களுக்கு, ஆயிரக் கணக்கான குழப்பமான விளக்கங்கள் அளிக்கப்பட்டு வந்துள்ளது.

இந்த இழிநிலைக்கு காரணம், புராதனமான, புனிதமான சத்தியம் எனும் அந்த ஆலயத்தின் அழகையும், மேன்மையையும், சமஸ்கிருத மொழியையும் அதன் எழுத்து நடையையும் சரியாகப் புரிந்து கொள்ளாத, படித்த ஆனால் ஞானமில்லாதவர்களால் அவ்வாலயம், மாலைகளாலும் தோரணங் களாலும் மறைக்கப்பட்டு விட்டதே ஆகும்.

இந்து சமய சாஸ்திரங்கள் நமக்குச் சொல்வது என்ன? அது நம்முடைய அன்றாட வாழ்வில் சந்திக்கும் பல பிரச்சனைகளை எதிர்கொள்ள எவ்விதம் உதவுகிறது? ஆகியவற்றை ஆராய்ந்து தெளிவு பெறுவதே இனிவரும் 100 நாட்கள் நடைபெறவுள்ள இந்த உபநிஷத ஞான யக்ஞத்தின் குறிக் கோளாகும்.

மதக்கோட்பாடுகளை நாடிச் சென்று அதை சரிவரக் கடைப்பிடித்து வாழ்வதற்கு தயாராக இல்லாவிட்டால் மதம் அதன் செயலிழந்து அழிந்து விடுகிறது. மதம் போதிக்கும் சீரிய கொள்கைகளை நாம் நமது அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்காவிட்டால் - அரசியல், சமூக பொருளாதார, கலாசார தத்துவங்கள் நமது நிச்சயமான வெற்றிக்கு உதவுமா? முற்காலத்தில் நம் கலாசாரம் எத்துணை மகத்தானதாக இருக்கிறது என்பதை இன்றைய சரித்திரப் புத்தகங்கள் எடுத்துக் காட்டும். அதன் இழந்து போன பெருமை நமக்கு இன்றைய சோதனைகளை எதிர்கொள்ள உதவாது.

எளிதில் காணமுடியாத கானகங்களில் பழங்கால மனிதன் - நாகரிகமான பண்புகளை உடையவனாக மாறிய பெரும் புரட்சி, வெறும் உப தேசங்களாலும், நவயுக காலத்தின் புத்தகங்களை ஆழ்ந்து படித்து அறிந்து கொண்டதாலும் அடைந்த தல்ல. நாகரிக வாழ்வின் முறைகளை அறிந்து அதனைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் மட்டுமே சாத்திய மாயிருக்கும். வெறுமனே அதைத் தெரிந்து கொண்டிருந்தால் மட்டுமே அது அவர்களுக்கு உதவியிருக் காது. அக்கொள்கைகளுடன் வாழ்ந்தால் மட்டுமே அவர்கள் அதை அடைந்திருக்க முடியும்.

அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த நாகரீகமற்ற வாழ்க்கை முறைகளையும் சிந்தனைகளை யும் முழுவதும் துறந்தால் தான் நாகரிக மனிதனாக மாறி வாழ இயலும், உண்மையில் - எதையும் துறக் காமல், எந்த விதமான முன்னேற்றமும் சாத்தியமில்லை. குழந்தைப் பருவ விளையாட்டுக்களையும், உணர்ச்சிகளையும், துறந்தால் தான் செயல் துடிப்பான வாலிபனாக மாறாலாம். இளைஞனின் வாலிப வாழ்வைத் துறந்தால் தான் முதுமைக்குரிய மரியாதையான வாழ்வைப் பெறமுடியும்.

இன்றைய பொருள் உலகில் தரம் தாழ்ந்த மிருக வாழ்வின், தீய குணங்களைத் துறந்தால் அன்றி, நாம் மேலான மனித வாழ்வின் பெருமையை அடைய முடியாது. சமயற்கலை பற்றிய புத்தகங்களை எத்தனை முறை படித்தாலும் அது நம் பசியைத் தீர்க்காது. அது போல ஒரு மருந்தின் பெயரை எப்போதும் தியானம் செய்து கொண்டிருந்தாலும் அதை உட்கொள்ளாமல் வியாதி குணமடையாது. மதம் வகுத்துத் தந்திருக்கும் மேன்மையான நெறிமுறைகளை கடைப்பிடிக்காமல் நாம் அதன் ஆசிகளைப் பெற்று, உயரந்த வாழ்வை வாழ இயலாது. நாம் கடைப்பிடிக்காத மதத்தை கண்டனம் செய்வது என்பது - குகை மனிதர்கள் திறந்த வெளியில் தீயைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு. பண்பட்ட நாகரிகத்தை இகழ்வதற்கு ஒப்பானது.

இனிவரும் 100 நாள் உபநிஷத் ஞான யக்ஞத்தில் அனைத்து மதங்களின் சாரமான நிலையான ஆனந்தத்தையம் பேரின்பத்தையம் கண்டுபிடிக்க முயற்சி செய்வோம். உபநிஷதங்கள் அருளிய சத்தியமான கொள்கைகளை - தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்வியல் விஞ்ஞானத்தை தெரிந்து கொள்ள இந்த 100 நாட்களில் முயல்வோம். இந்து மதத்தின் சாரமான முழுமையான சீர்பெற்ற விஞ்ஞானத்தைக் கண்டு பிடிப்போம்.

இந்து மதம் என்பது என்ன? என்பதை புரிந்து கொள்வோம். புராதனமான, புனிதமான இந்து மத்ததின் மேன்மைகளையும் உண்மைகளையும் அறிந்து கொண்டு அதில் முழுத்திருப்தியடைந்த வுடன் நமக்காக மட்டும் இல்லாமல் அகில உலக நன்மைக்காகவும், அது காட்டும் வழியில் கொள்கை

மாறாமல் அதைப் பின்பற்றி எந்த அளவிற்கு நம்மால் வாழ முடியுமோ அப்படி வாழ நாம் உறுதி மேற்கொள்வோம்.

நாம் இந்துக்களாக இருந்து அதன் மூலம் ஆயிரக்கணக்கான சங்கரர்கள், நூற்றாண்டுக்கான பக்தர்கள், எண்ணற்ற விவேகானந்தர்கள் நிறைந்த இந்துஸ்தான (இந்துக்களின் வீடு) உருவாக்கு வோம்!.

## அன்பின் வலிமை

சண்டைக்கும் சச்சரவுக்கும் இரண்டு பேர் தேவைப்படுகின்றனர். அதே போல , சமாதானம் செய்து கொண்டு ஒத்துப் போகவும், இருவர் தேவை. அன்பெனும் சுடரைத் தூண்டிவிட்டாலொழிய இது சாத்தியமில்லை. உங்கள் உள்ளம் முழுவதும் அன்பு வெள்ளம் பாய்ந்து நிறையட்டும். உங்களுடன் சண்டை போட்டவரின் கண்களை உற்றுப் பாருங்கள். அங்கே உங்களுடைய அன்பு மயமான பிம்பத்தை கண்டு தழுவிக் கொள்ளுங்கள்.

அந்த நேரத்தில் நீங்கள் பேசிக் கொள்ளத்தேவையில்லை. உங்கள் இருவருடைய கண்களிலும் நிறைந்து நிற்கும் ஆனந்தக் கண்ணீர் உங்களுடைய சச்சரவுக்கு ஆதாரமான வேற்றுமைகளை கழுவி நீக்கிவிடும். அந்த நேரத்தில் உங்கள் இருவருடைய மனமும் ஒன்றிவிடும். இப்படி ஒவ்வொரு முறையும் அன்பின் மலர்ச்சியை நீங்கள் உண்மையாகவே காண்பீர்கள். இது தான் அன்பின் இணைப்பு இதுவே அதன் முழு வலிமையும் கூட. அன்பின் இணைப்பு பலவீனமாக மெலிந்து விட்டால் குற்றங்குறைகள் பெருகித் தோன்றுகின்றன. நம்மை அன்பு வெள்ளம் சூழ்ந்து கொண்டு அலைமோதும் போது, அதன் நயத்தை நாம் மீண்டும் கண்டு உணரும் வேளையில் குற்றங்களும், குறைகளும் கரைந்து அழிந்து விடுகின்றன. அங்கே அழகின் தரிசனம் கிடைக்கின்றது. இது தான் அன்பு செய்யும சதவாதம். இதுவே அது செய்து காட்டும் அதிசயம்.

உள்ளம் முழுவதும் அன்பு மலர்ந்து நிறையும் போது வாழ்க்கையே ஓர் அழகும் ஆனந்தமும் படர்ந்த சமவெளியாகத் தோன்றுகிறது. அங்கே தெய்வபக்தியும் மானுடக் காதலும் கைகோர்த்து நடனமிடுகின்றன.

## தன்னம்பிக்கை

தொடர்ந்து முயலுங்கள்! மனம் சோராமல் குன்றாமல், நீங்கள் அடையவிரும்பும் வெற்றிக் கம்பத்தை நோக்கிச் செல்லுங்கள். அப்படி வாழ்கையில் குறிக்கோளை வைத்துக் கொண்டு முயலா விட்டால்? உங்களுடைய திறமை முழுவதும் சிறப்பாக வெளிவர வழி கிடைக்காது. அப்படி நீங்கள் முயன்று பார்க்கும் போது கடவுள் உங்கள் வழியில் சோதனைகளை வைத்து உங்களைச் சோதிக் கிறார். பார்வைக்கு அவை கடக்க முடியாத தடைகளாகத் தோன்றுகின்றன.

உற்சாகம் குறையாமல், அச்சத்துக்கு இடந்தராமல் அந்தத் தடைகளைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து முழுத் தன்னம்பிக்கையுடன். முயற்சிகளில் ஈடுபட்டு முன்னேறுங்கள். அந்தத் தடைகள், நிழல் போல் மறைந்துவிடும். அதுதான் கடவுளின் அருள்!

நீங்கள் செவி கொடுத்துக் கேட்டால் இறைவன் உங்கள் விடாமுயற்சியை, தன்னம்பிக்கையை, அச்சத்தை வென்ற துணிவை, பாராட்டிச் சிரிப்பது உங்கள் காதில் ஒலிக்கும்.

வாழ்க்கையில் நாம் அடையும் பொருள், நமக்குப் புகழைத் தருவதில்லை. அதற்கான முயற்சி தான் புகழை அளிக்கிறது. நாம் பந்தயத்தின் முடிவில் அடையும் கோப்பையை யாரும் வெற்றி என்று பாராட்டுவதில்லை. ஓடி அடைந்த வேகத்தை வெல்ல முயன்ற மனத் துணிவைத்தான் மெச்சுகிறார்கள்.

## தனிமை உங்களை நெருங்காதிருக்க...

உங்கள் வேலைக்கு ஒரு திட்டம் போட்டுக் கொள்ளுங்கள். திட்டப்படி ஒவ்வொரு வேலை யையும் செய்து முடிப்பதில் அலட்சியமாக இருக்காதீர்கள். திட்டமிடப்படாத வேலை வீண் விரயமாக முடியும். திட்டப்படி ஒவ்வொரு வேலையும் செய்யாவிட்டால் குழப்பம்தான் மிஞ்சும்; உருப்படியாகக் காரியங் கள் கைகூடாது. இந்த இரண்டையும் முழு ஈடுபாட்டுடன் கருத்தாகக் கவனித்தால், இடையில் எவ்வளவு சங்கடங்கள் குறுக்கிட்டாலும் முடிவில் வெற்றிகிடைக்கும். அதுவும் பளிச்சென்று மெருகுடன் மின்னும்.

இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். வாழ்க்கையில் வசதிகளும் செல்வமும் குறைவாக இருப்பவர்கள் மட்டுமே எப்போதும் வறுமையில் வாடித் தவிப்பதில்லை. தேவைகள் அதிகமாக இருப்பவர்களும்தான் இப்படி நிச்சயமாகத் தவிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு முழு சாம்ராஜ்யமே சொந்தமாக இருந்தாலும்கூடப் போதாது.

'தான்' என்ற அகம்பாவத்தை மையமாக வைத்துக்கொண்டு, உங்களை ஆணவத்துடன் வளர்த்துக்கொண்டுவிட்டால், நீங்கள் சுயநலம் படைத்த ஒருவராக ஓங்கி விடுவீர்கள். மற்ற எல்லோரும் உங்களிடமிருந்து கத்தரித்துக்கொண்டு போய்விடுவார்கள். ஆண்டுகள் செல்லச் செல்ல நீங்கள் தனிமையில் ஒதுக்கிவிடப்படுவீர்கள். வாழ்க்கையில் அந்தத் தனிமை தரும் வெறுமை உங்களைச் சூழ்ந்து கொள்ளும். உங்களுடைய சுயநலத்தில், உங்களைச் சுற்றி ஒரு பெரிய சுவரை எழுப்பி உங்களை மறைத்துக்கொண்டு விட்டீர்கள்; உங்களை மற்றவர்களுடன் இணைக்கும் பாலங்களை அல்லவோ நீங்கள் கட்டி இருக்க வேண்டும் பிறரிடம் இனிமையாகப் பழகி நட்புக் கொள்ளுதல், தாராளமாக வழங்கும் பண்பு, பிறருடைய இன்ப துன்பங்களுக்காக அன்பர்களிடம் பரிவுகொண்டு அக்கறை கொள்ளுதல், இவற்றைப் பழக்கத்தில் வளர்த்துக்கொள்ளுங்கள். அதன் பிறகு தனிமை உங்களை எக்காலத்திலும், எந்த இடத்திலும் நெருங்கவே நெருங்காது. இவ்வாறு தனது முதல் நாள் பேச்சை நிறைவு செய்தார்.

பின் சென்னையில் தனது பணிகளை ஆரம்பித்தார். பல வித எதிர்ப்புகளுடன் ஆரம்பித்த பணிகள் நாளடைவில் பல்லாயிரக் கணக்கானோரின் ஆதரவைப்பெற்று பெருகியது. சுவாமிஜியின் புகழ் நாடு முழுவதும் வளர்ந்து வரும் வேளையில் 1953ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அடியார்கள் சின்மயா மிஷன் என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்க சுவாமியிடம் அனுமதி கேட்டனர்.

இயக்கத்தை ஆதரித்த சுவாமிஜி பெயர் சின்மயா மிஷன், என்பதை எதிர்த்தார். அடியார்கள் 'சின்மயா' என்றால் 'ஞானமயம்' என வாதிட்டதன் பேரில் தனது கண்டிப்பைத் தளர்த்தினார். இயக்கம்

ஆரம்பித்தவேளையில் "இந்த மிஷன் ஒரே குடும்பம். ஒரே எண்ணத்துடன் செயலாற்றுங்கள்" இதையே மறக்காமல் குறிக்கோளாகக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டார். அதுவே இற்றை வரை கொள்கையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

குருதேவரின் ஆன்மிக உரைகள் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கவர்ந்தது. இக் காலகட்டத்தில் 1957இல் சுவாமி தபோவன் மகராஜ் உடல் பல வீனமடைந்தார். அவரைப் பார்க்கச்சென்ற சின்மயானந்தர் மனம் நெகிழ்ந்து அழுதபொழுது தபோவன் மகராஜ் ஆதரவாக "சின்மயா... எப்போது நாம் பிறக்கிறேமோ அப்போதே இறப்பும் நம்முடன் பிறந்து விடுகின்றது. இங்கு எத்தனை அமைதியுடன் வாழ்ந்தேன். அதே அமைதியுடன் கங்கா மாதாவின் தெய்வீக ஒலியைக் கேட்டுக்கொண்டே என்னால் உயிர் துறக்க முடியாதா? அழாதே நீ சென்று உன் பணிகளைத் தொடர்ந்து செய் என்று கூறினார்.

குரு மஹா சமாதி அடைந்த செய்தி அறிந்தவுடன் அவரது கண்கள் குளமாகின. மகான்களும் மனித உணர்வு களுக்கு அப்பாற்பட்டவர் கள் அல்ல என்பதை உணரத்தும் செய்தி இது.

ஒரு குருவிற்கும் அவரது சீடருக்கும் இடையே உள்ள அன்பு தன்னலமின்மையையும், தூய்மையையும் மேம்படுத்தக்கூடியதாகும். அது தடைகளற்ற, நான் எனும் தன்மையற்ற எந்த எதிர்பார்ப்புகளும் அற்ற தெய்வீக அன்பாகும். சுவாமிஜி பெரும் இழப்புடன் தனிமையில் ஆன்மிக சாதனையை மேம்படுத்திக் கொள்ள ரிஷிகேசத்தில் சில நாட்கள் தங்குவதற்காகச் சென்றார்.

## பணிகள்

குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பணிகள் நாடாளவிய ரீதியில், உலகளாவிய ரீதியில் எனப் பல்கிப் பெருகின. சகல மக்களிடமும் ஆன்மிக ஞானம் பரவவேண்டும் எனும் நோக்குடன் வெவ்வேறு பிரிவுக்குழுக்களை உருவாக்கினார் சமூகசேவை, ஆன்மிகம் ஆகியவற்றை பெண்கள் கற்க 'தேவிகுருப்'. சிறுவர்களுக்கு கலாசாரத்தைக் கற்பிக்க 'பாலவிஹார்' இளைஞர்களை சரியானபடி உருவாக்கவும் ஆன்மிகப் படிப்பையும், கலாசார நிகழ்ச்சிகள் சமூக சேவைத்திட்டங்களை நிறை வேற்றவும் கருத்தரங்குகள் மூலம் மேம்படுத்தவும் 'யுவகேந்திரா' என அணிகளை உருவாக்கினார்.

குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பணிகள் 'சின்மயா மிஷன்' எனும் நாமத்துடன் நாடளாவிய, உலகளாவிய ரீதியில் பல்கிப்பெருகின. பகவான் கிருஷ்ணர், பார்த்தனுக்குப் போர்க் களத்தில் உபதேசித்த பகவத் கீதையை ஆங்கில மொழி மூலம் உலகின் பல பாகங்களிலும் உயர் பதவி மற்றும் வாழ்க்கை வசதிகள் வாய்ந்திருந்தும் மன அமைதி கிட்டாமல் தவித்துக் கொண்டிருந்த மக்களிடையே பரப்பி அவர்களது நல்வாழ்வுக்கு வழிகாட்டி வளப்படுத்திய பெருமை 'சிம்மக்குரலோன் சின்மயானந்தர்' அவர்களையே சாரும்.

இவ்வாறு பணிகள் வளர்ந்து செல்லச் செல்ல குருதேவர் அவர்களின் உடல்நிலை இயற்கையின் நியதியோ அன்றி தன் உடல் ஆரோக்கியத்தைப் பற்றிய கவனமின்மை காரணமாகவோ பாதிப்படைந்து வந்தது. பல அறுவைச் சிகிச்சைகளுக்கு உள்ளாக வேண்டிய நிலையேற்பட்டது எது

எப்படியிருந்தாலும் சற்றுத் தேறியவுடன் வைத்தியர்களின் ஆலோசனைகளையும் மீறி தன்பணிகளைத் தொடர்ந்தவாறிருந்தார்.

குரு தேவரின் 43 வருடகால ஆன் மிகப் பணிக்காலத்தில் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன தினசரி அவர் 4 மணித்தியாலங்கள் மட்டுமே தூங்குவதற்கு செலவிட்டார். மீதி நேரமெல்லாம் மக்களுக்கான பணி செய்வதிலேயே செலவிட்டார் எந்தவொரு செயலும் குறித்த நேரத்தில் செய்யவேண்டும் என்பதில் மிகுந்த கவனமாக இருந்தார் அவர் தானும் நேரம் தவறுவதில்லை; ஏனையோர் நேரம் தவறி நடப்பதையும் அனுமதிக்க மாட்டார்.

அவரிடமிருந்து நாம் கற்கவேண்டிய பாடங்கள் அநேகம். அன்பு, நேர்மை, துணிவு, எதற்கும் அஞ்சாமை, பரோபகார சிந்தை சகல ஜீவன்களையும் சமமாக நோக்கும் தயாள சிந்தை ஆகிய பண்புகளைால் அனைவரையும் தன்பால் ஈர்க்கும் சக்தி படைத்திருந்தார். குழந்தைகள் முதல் முதியோர்வரை அனைவரிடமும் அவரவர் நிலைக்கு தானும் இறங்கி வந்து அவர்களுடன் அளவளாவி அவர்களது துன்ப துயரங்கள் பிரச்சினைகளைக் கேட்டறிந்து ஏற்ற வகையில் தீர்த்துவைப்பதில் அவருக்கு நிகர் யாருமில்லை

இத்தகைய பெருங்குணப் படைத்த மகான் 1993 ஆண்டு ஆவணிமாதத்தில் அமெரிக்காவில் சர்வமதப் பேரவைக்குத் தலைமை ஏற்று நடாத்துவதற்காக அழைக்கப்பட்டிருந்தார். அதன் முன்னரே 1993 ஆகஸ்ட் 3ஆம் திகதி தனக்கு உரிய அழைப்பு வந்து விட்டதாகக் கூறி உடலை விட்டு அகன்று விட்டார்.

அவரது உடல் இந்தியாவிற்கு எடுத்து வரப்பட்டு பல இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடாத்தப் பட்டு சித்த பாரியில் பல்லாயிக்கணக்கான அடியார்கள் கூடிப் பிரார்த்தனை செய்ய சமாதி வைக்கப்பட்டது.

சுவாமியின் உடல் தான் பிரிந்தது. அவரது ஆத்மா என்றும் பரப்பிரம்மமாய் ஒளிர்ந்து கொண்டிருந்து எல்லாவற்றையும் இயக்கும் சக்தியாய் இயக்கிக் கொண்டே இருக்கின்றது

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

# வெற்றி ரகசியம்

சுவாமி சின்மயானந்தர்

கல்வியின் உணவு எது? அறிவூட்டும் நூல்கள், சேர்க்கை, பயிற்சி.

பண்பின் உணவு எது? பண்பாட்டைப்பற்றிய நூல்கள் பண்பட்டவர்களோடு பழக்கம். பண்பாட்டிலே பயிற்சி. இவை போலவே சாத்திரங்களைக் கூர்ந்து மதியுடன் படிப்பதும், நல்லவர்களோடு கூடுவதும், தியான வாழ்க்கையை முழு மனத்தோடு வாழ முயல்வதும் தியானத்தில் வெற்றியை வரவழைத்துக்கொடுக்கும்.

இந்தத் துறையிலும் குறுக்கு வழி இருக்கும் என்று எதிர்பார்க்கும் சாதகர்கள் உண்டு. துரதிர்ஷ்ட வசமாக குறுக்குவழியொன்றும் கிடையாது. மதத்தை வியாபாரமாகக் கொண்டவர்களும், ஆன்மிகத் தைக் கள்ளச் சந்தையாக மாற்றியவர்களும், தங்களிடம் யார் வந்து தகுந்த விலை கொடுத்தாலும் வாராந்தர திட்டப்படி ஆன்மிகத்திலும் வளர்ச்சி உண்டாக்கிக் காட்டுவதாகக் கூவியழைத்த போதிலும், குறுக்கு வழியென்பது கிடையாது. இத்தகைய விளம்பரங்கள் வெட்கமின்றி அச்சடிக்கப்பட்டு நமது நாட்டிலே வெளியிடப்படுகின்றன. சாத்திரமறியாத பாமரமக்கள் பலியாகிறார்கள். ஏமாந்தவர்களிடம் நாம் அனுதாபம் காட்டவேண்டியது தான். ஆயினும் மோசடிக்காரர்களை நாம் கண்டிக்கக்கூடாது. ஏனெனில் நம்மிடம் குறைபாடு இருக்கும் காரணத்தால் தானே நமது அறியாமையை அவர்கள் வியாபாரப் பொருளாக்கி விட்டார்கள்? நமது குறைபாடுகளை நாமே விமரிசனம் செய்வோம்.

நாம் கேட்கிறோம், அவர்கள் கொடுக்கிறார்கள். அவ்வளவு தான். செல்வம், குழந்தை, அந்தஸ்து, பதவி, அதிசய மருந்து, ரகசிய மூலிகை, தாயத்து, இவை போன்றவற்றைத்தான் நாம் மகாத் மாக்களிடம் கோருகிறோம். ஏன், பம்பாயையே எடுத்துக்கொள்ளுங்களேன். சாது ஒருவர் விக்டோரியா டெர்மினஸை அடைய வேண்டியது தானே; லாலாக்களும் சேட்டுக்களும், வியாபாரிகளும் குமாஸ் தாக்களும், மிட்டாய் லாலாக்களும் வண்டியோட்டிகளும் ஒரு பெருங்கூட்டமாகத் திரண்டு விடுகிறார்கள். இடித்துத் தள்ளிக்கொண்டு கவலையோடு அவர் பின்னால் ஓடி வரும் அந்தக் கும்பலில் இருக்கும் ஒவ்வொருவரும் இரண்டில் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ளத் துடித்துக் கொண்டிருப்பார்கள். ஒன்று, அன்றிரவு காட்டன் எக்சேஞ்சில் என்ன எண் வரும் என்பது, அல்லது அடுத்த பந்தயத்திலே எந்தக் குதிரை ஜெயிக்கும் என்பது.

பொதுவாக மகாத்மாக்களிடமிருந்து சமூகம் எதிர்பார்ப்பது இதுதான் என்றால், சாமர்த்தியமுள்ள இளைஞர்கள் காவியை அணிந்துகொண்டு இந்த முட்டாள்களிடம் ஓர் எண்ணைக் கொடுத்து, கணிசமான தொகையைத் தட்சிணையாகப் பெற்றுக்கொண்டு இரவோடு இரவாக மறைந்து விடுவதைத் தொழிலாக ஏற்றுக்கொண்டிருப்பதில் என்ன ஆச்சரியம்! அத்தகைய மோசக்காரர்கள் அதிகம் பேர் இல்லாததற்கு நமது நாட்டின் பழம்பெருமையும் முனிவர்களால் தரப்பட்ட அதன் பண்புமே காரணம். இந்தச் சந்தர்ப்பம் அமெரிக்காவில் கிடைத்திருக்குமானால் அமெரிக்கர்களில் பாதிப்பேர் இந்நேரம் சன்னியாசிகளாக மாறி, மற்றப்பாதியை ஏமாற்றிச் சுகமாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

## பயிற்சியே குறுக்கு வழி

ஆன்மிகத்தில் குறுக்கு வழியைக் கோருவது போலிகளின் வலையில் வீழ்வதாகும். இந்த உண்மையை உங்களுக்கு எடுத்துரைத்துவிட்டால் எனது நோக்கம் நிறைவேறிவிட்டது என்று

கொள்வேன். எந்த உண்மையான குருவும் குறுக்கு வழியைக் காட்டுவதாக வாக்களிக்கமாட்டார். அகங்காரத்தைப் பிளந்து அதனுள்ளிருக்கும் சத்திய சாம்ராஜ்யத்துக்குச் சுரங்கம் அமைப்பது ஒன்றே குறுக்குவழி!

முறைப்படி பயிற்சியை இடைவிடாமல் செய்தால் பாதையில் குறுக்கிடக்கூடிய எல்லா இடையூறுகளுமே விலகிவிடும். ஆன்மிக சாதகன் இப்போது செய்யவேண்டியது பயிற்சிதான். மருந்து எவ்வளவுதான் உயர்தரமானதாக இருந்தாலும் அதைப் பருகாதவரை நோய் தீராது. மருந்தை வாங்கி விட்டால் மட்டும் போதுமா? ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு நோயாளி அதைச் சிறுக சிறுக உட்கொள்ள வேண்டும். அது உடலில் சேர அவகாசம் தரவேண்டும். ரத்தத்தோடு ரத்தமாக அது கலந்துவிட வேண்டும். அதுபோலவே பொய்யைத் துறக்கவும் ஆயத்தமாயிருந்தாலொழிய குணக் கோளாறுகளால் எழும் நோய்களினின்று நாம் மீளமுடியாது. எத்தனைதான் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் வழிமுறைகளையும் கற்ற போதிலும் அந்தக் கல்வி மட்டுமே நம் நோயைத் தீர்த்துவிட முடியாது.

ஆக இவ்வளவும் சொன்னபிறகு நம்மால் செய்யக்கூடியது, தினந்தோறும் இடைவிடாமல் பயிற்சி பண்ணுவது தான். முழு மனத்தோடு பயிற்சியில் ஈடுபடுங்கள். இருபத்துநாலு மணி நேரமும் தெய்வீக உணர்விலே வாழுங்கள். அழியாத, உன்னதமான உண்மையைத் தொடர்ந்து உணருங்கள். வாழ்க்கையென்னும் மேடையிலே உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பாகத்தை ஒழுங்காக நடியுங்கள். ஆனால் வாழ்க்கையில் அடைவதற்கு மகத்தானதொரு லட்சியம் உண்டு என்பதை மறவாதீர்கள். நாடகக்குழுவின் நிர்வாகியும் வசனகர்த்தாவுமான ஆண்டவன் உங்கள் பாகத்தை எப்படி நடிக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ அதுபோலவே கச்சிதமாகப் பிழையின்றி நடியுங்கள். அவருடைய நோக்கங்கள் தர்ம சாத்திரங்களிலே தொகுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. வாழும் முறை அந்தந்தத் திருநூல்களிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. நன்றாக வாழுங்கள். கருணையிலும், பெருந் தன்மையிலும் அன்பிலும் ஆழ்ந்து வாழுங்கள்.

## தியானம் இன்றேல்

இடைவிடாத பயிற்சியின் மூலமாகவும் வாழ்க்கையின் உன்னத லட்சியங்களை அடைய முழு மனத்துடன் முயல்வதன் மூலமாகவும் மேலும் மேலும் நாம் உயர்வடைவோமாக! சீரிய சிறந்த வாழ்க்கை மீது நமக்குப் பற்று உண்டாகட்டும். கீழான கேவலமான வாழ்க்கையின்று நாம் எந்த அளவுக்கு விடுபடுகிறோமோ அதே அளவுக்கு உயர்ந்த வாழ்வின் மீது நமக்குப் பற்று உண்டாகும். இதைவிட அங்கே ஒட்டுதல் ஏற்படும். தியாகம் இன்றேல் முன்னேற்றம் சாத்தியமில்லை.

நீங்கள் முன்னேற விரும்பினால் தற்காலத்தை உதறிவிட்டு எதிர்காலத்தை நோக்கி நடை போட வேண்டும். வாழ்க்கை, பிறவியிலிருந்து மரணத்துக்கும், ஒரு வினாடியிலிருந்து மற்றொரு வினாடிக்கும் நகரும் ஒரு முன்னேற்றம் தானே? வருகிற வினாடியில் நாம் வாழும் பொருட்டு, இப் போதுள்ள வினாடியைத் தியாகம் செய்கிறோம். எடுத்து வைத்திருக்கும் அடியைவிட்டு அகன்றால் அன்றி அடுத்து அடியை எவ்வாறு வைக்கமுடியும்? ஏணியில் ஏறுவதற்கு ஒரே வழி கீழ்ப்படியைவிட்டு மேல் படியில் கால் வைப்பதுதான். மேலே ஒரு படி உயரும் பொருட்டு, கீழிருக்கும் ஒரு படியைத் தியாகம் செய்தே ஆக வேண்டும். ஆன்மிக முன்னேற்றத்திலும் இப்படியே.

தன்னலம், அகங்காரம், பேராசை, காமம், கோபம் ஆகிய கீழான குணங்களைத் தியாகம் செய்து அவற்றுக்கு எதிராகவுள்ள நற்குணங்களைச் சம்பாதித்துக் கொண்டு நாம் பரிபூரண

வாழ்க்கையை நோக்கி முன்னேறுவோம். எவனொருவன் உழைத்துப் பயிற்சி செய்கிறானோ, அவனுக்கு உடனடியாக முன்னேற்றம் கிட்டும். வியக்கத்தக்க வகையில் விரைவாகக் கிட்டும். ஆன்மிகத்தில் ஏதும் தடைகள் இருக்குமானால் அவை நமக்கெதிராக நம்மாலேயே எழுப்பப்பட்டவை யாக இருக்கும். நமது குறிக்கோளை அடைவதற்கு நேர்வழி தியானம். அதன் தன்மையைச் செவ்வனே புரிந்துகொண்டால் நமக்குச் சீக்கிரத்தில் வெற்றிகிடைக்கும்.

கீழான குணங்கள் நமது இயல்பிலே இணைந்துவிட்டதன் காரணம் என்ன? உலகம் நிலை யானது, உண்மையானது என்ற தவறான எண்ணம் தான். இன்று இல்லாவிட்டால் நாளை, புலன்களின் மூலம் பேரின்பத்தை அடையலாம் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறோம். இதைவிட அசட்டுத்தனம் வேறென்ன இருக்கமுடியும்? உலகப் பொருள்கள் நமக்கு இன்பம் பயக்கும் என்று நம்புவது கனவில் நம்பிக்கை வைப்பது போன்ற தல்லவோ? உண்மையை நாம் உணர உணர உலகப் பொருள்களிடம் நாம் வைக்கும் பற்று அவிழும். அவற்றின் கவர்ச்சி போலியானது என்பதை அறிய அறிய அவற்றின் பிடியிலிருந்து விடுபடுவோம். புறவுலகத்திலிருந்து விடுதலை பெறப் பெற உள்ளுலகத்திலே பற்று வலுக்கும்.

தியானத்தின் வெற்றி ரகசியம் என்ன? உள் வாழ்க்கையைத் தூய்மையாக வாழ்வதே வழி. உயர்ந்த குணங்களைச் சாதகன் எவ்வளவுக்கெவ்வளவு நுகர்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு தியானத்தில் வெற்றி காண்பான். ஒழுங்கான வாழ்க்கை வாழ்வது எப்படி என்ற முழுத் திட்டம் உபநிடதங்களில் விளக்கப்பட்டிருக்கிறது. மற்றெந்த நூலைக் காட்டிலும் தெளிவாகக் கடோபநிடதத்தில், உடலை ரதத்துக்கு உவமை சொல்லும் கட்டத்தில், இது விவரிக்கப்பட்டிருக்கிறது.

## அவசர முடிவு

ஏட்டுப்படிப்பின் மூலமாகவே சாத்திரங்களைப் புரிந்துகொள்ள முயலும் பல ஐந்தாம் தர ஆன்மிக சாதகர்கள், தியானம் அவர்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படாது என்ற அவசர முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். எந்த மனிதன் தொடர்ந்து தியானம் செய்கிறானோ அவன் நிச்சயமாக வாழ்க்கையில் தோல்வியடைவான் என்று நிரூபிக்க பார்க்கும் ஓரிருவரையும் நான் சந்தித்திருக்கிறேன். இத்தகைய அவநம்பிக்கையின் மடமை தான் இந்து மதம் அழியக் காரணமாக இருந்திருக்கிறது. வாழ்க் கையைச் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடத்த உதவும் வீறு நிறைந்த தத்துவமன்றோ இந்து மதம்! வாழ்க்கையை உதறித்தள்ளும் பெருமூச்சுக் கொள்கையல்ல வேதாந்தம் மனிதனும் மனித சமூகமும் இன்புற்றுவாழ நல்லதொரு திட்டம் தீட்டுவதே அதன் நோக்கம். இகத்தை மறுத்து, அது பரத்தைச் சிபாரிசு செய்யவில்லை. இகத்திலும் இகத்தின் மூலமாகவும் பரத்தைச் சுட்டிக்காட்டுகிறது வேதாந்தம். உலக வாழ்க்கையை ஒதுக்கித் தள்ளுவதாகக் குற்றம் சுமத்துவது சிறுபிள்ளைத்தனமான உளறலாகும். மனம், புத்தி - இவற்றினால் மட்டுமே அதன் தத்துவத்தைப் புரிந்துகொள்ள முயன்று அதன் விளைவாகக் குழப்பமுற்ற அசடர்களின் கூற்று அது.

தினசரி வாழ்க்கையை எடுத்துக்கொள்வோம். மனத்தைக் குவிக்கும் சக்தி எவனிடம் அதிகமாக இருக்கிறதோ அவனுக்கு வெற்றியில் கிடைக்கும் பங்கும் அதிகமாக இருக்கும். சரியான முறையில் தியானம் செய்யத் துவங்குவபவன் மனத்தை ஒரு முகப்படுத்தும் கலையில் பெருமளவுக்கு முன்னேறா மல் இருக்கமுடியாது. அதுமட்டுமா? தியானத்தில் முதிர்ச்சி ஏற்பட்டதும் வாழ்க்கை சீர்படுகிறது. ஆண்ட வனிடத்தில் பக்தி பழுத்து அவரது திருவடிகளில் சரண்புகும் காரணத்தால் மூளையிலே நிதானமும், மனத்திலே அமைதியும் வருகின்றன. செம்மையான தியானத்தின் விளைவாகத் தெளிவான புத்தியும்

சலனமற்ற மனமும் நடத்தையில் ஒழுக்கமும் ஒருங்கே பெற்ற ஒரு மனிதன். உலக வாழ்க்கையில் எத்துறையில் ஈடுபட்ட போதிலும் சாதாரண மனிதன் கனவுகூடக் காணமுடியாத அளவுக்கு வெற்றி காண்பான் என்பதில் ஐயமென்ன! இந்தக் குணங்கள் மேதைகளின் முத்திரை. எந்த நாட்டில் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் பெருமக்களுக்கெல்லாம் இந்தக் குணங்கள் பொதுவானவை.

## ரகசிய ஆயத்தம்

இப்படிப் பார்க்கையிலே தியானமே உண்மையான கல்வி. நிலையற்ற சூழ்நிலையும், மின்னலை நிகர்த்த பெருமைகளும் அடங்கிய இந்த உலகத்தை எதிர்நோக்கி தியானம் நம்மை ரகசியமாக - ஆயத்தப்படுத்துகிறது. சாதாரண மனிதனின்று ஓர் ஒப்பற்ற மேதையை உருவாக்கும் சக்தி உண்மையான தியானத்திற்கு உண்டு. மாமுனிவர்களின் வரலாறுகள். அவர்கள் உலகின் எந்தப் பகுதியில் பிறந்திருந்தாலும் சரி-நமக்கு என்ன தெரிவிக்கின்றன? இன்றுள்ள தரப்படி கணக்கிட்டால், அவர்களுக்குப் பொதுக் கல்வி அதிகம் கிடையாது. சாதனைகள் புரிவதற்குரிய சந்தர்ப்பங்கள் அவர்களில் பலருக்கு வாய்க்கவில்லை. ஆயினும் வெறும் தியானத்தின் மூலம் அவர்கள் எத்தனை உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுவிட்டார்கள்! பேரறிவும் மிகுந்த சக்தியும் பெரும் புகழும் நிறைந்த அமரர்களாக அன்றோ ஆகிவிட்டார்கள். மனிதனை அழுத்தும் குறைபாடுகளினின்று மீண்டும், தன்னைத் தானே உயர்த்திக்கொள்ள ஒரு மகானாலோ முனிவராலோ முன்காலத்தில் சாத்தியமாக இருந்திருக்கு மேயானால், வழி வழியாக வந்த அந்தப் புனிதமான உரிமையை நாமும் ஏன் பகிர்ந்து கொள்ளலாகாது? தியானியுங்கள். உயர்வடையுங்கள்.

சுகாசனமிட்டு அமருங்கள்... முதுகுத் தண்டை நிமிர்த்திக்கொள்ளுங்கள்... தலைமுதல் கால் வரை மனத்தால் பிடித்து விட்டுக் கொள்ளுங்கள்... தளர்த்திக்கொள்ளுங்கள்... தளர்த்திக் கொள்ளுங் கள்... தளர்த்திக்கொள்ளுங்கள் ஓங்காரத்தை உச்சரியுங்கள்... ஓம்... ஓம்... ஓம்... இப்போது மானசீக ஜபத்தில் உட்கார்ந்திருக்கிறோம் என்பதை மறக்க வேண்டாம்... மனம், ஜபித்துக்கொண்டே யிருக்கட்டும்.

ஜபித்துக்கொண்டேயிருங்கள்... நிறுத்துங்கள்...!

அஸங்கோஹம்... அஸங்கோஹம்... அஸங்கோஹம் புன: புன... ஸச்சிதானந்த ரூபோஹம்... அஹமே... வாஹமவ்யய... நித்ய சுத்த விமுக்தோஹ... அஹமேவாஹமவ்யய.

அழியாததாய், எப்போதும் தூய்மையுள்ளதாய், என்றும் விடுதலை பெற்றதாய் இருப்பது நான்... அருவமே என் உருவம் இயல்பிலே நான் எங்கும் நிறைந்த பேரின்பத் தொகுதி எதைச் சுருக்க முடியாதோ, எதற்கு அழிவில்லையோ, எது முடிவற்றதோ அதுவே நான்: நானே அது.

# பூஜ்ய குருஜியின் வாழ்க்கைப் பயணத்தில்

வேதங்கள், ஆரம்பகாலத்தில் குரு சிஷ்ய பரம்பரையாக செவி வழியாகவே பேணப்பட்டு வந்தன. சிஷ்யர்கள் குருவுடன் இருந்து அவரின் தேவைகளைப் பூர்த்தி செய்து, பணிவிடைகள் செய்தே இவற்றைச் செவி வழி கேட்டு கிரகித்து மனனம் செய்து பின்னர் நிதித்யாசனம் செய்து இந்த ஞானத்தைப் பெற்றுக்கொண்டு பின்பு தமது சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்தனர். இவ்வாறு ஆன்ம ஞானத்தைப் பெறுவது உபதேசிப்பது என தொன்று தொட்டே குரு சிஷ்ய பரம்பரை இருந்து வந்துள்ளது.


இன்று காலங்கள் மாறி விஞ்ஞான வளர்ச்சியில் இவ் வேத உபநிஷதங்கள் யாவும் நூல் வடிவிலும் இலத்திரனியல் சாதனங்கள் மூலமும் பேணப்பட்டாலும் இவற்றை உபதேசம் செய்வது கற்றுக் கொள்வது அவற்றை நிதித்யாசனம் செய்வது ஆகிய செயற்பாடுகளில் குரு சிஷ்ய பாரம்பரியம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அந்த வகையில் இன்று சுவாமி சின்மயானந்தரால் உருவாக்கப்பட்ட சின்மயா மிஷனில் ஆன்மீக ஞானத்தை வழங்கும் ஆச்சாரியர்கள் அவற்றைப் பெற்று ஆத்ம பலம் பெறும் சிஷ்யர்கள் எனப் பலர் இணைந்து பயன்பெற வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இவ்வகையில் குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களுடனான சந்திப்பால், அவர் பால் ஈர்க்கப்பட்டு தனது குடும்ப உறவுகள், கல்வி, சகலத்தையும் துறந்து 20வது வயதிலேயே குருவிடம் சரணடைந்த சுதாகர் கைற்வடே (Sudhakar Kaitwade) இன்று சின்மயா மிஷனின் உலகளாவிய தலைவர் பூஜ்ய குருஜி சுவாமி தேஜோ மயானந்தர் அவர்களும் ஒருவர். 1993இல் பூஜ்ய குருதேவர் சமாதி அடைந்ததன் பின்னர் சின்மயா மிஷனின் பூரண பொறுப்பை ஏற்று குருதேவர் காட்டிய பாதையில் வழி நடாத்திச் செல்கின்றார்.

மேலும் குருதேவரின் தூர நோக்கங்கள் பல இன்று நிறைவேற்றப்படுவதுடன் மிஷனின் பணிகள் மேலும் பல்கிப் பெருகி வளர்ந்து கொண்டே வருகின்றன. "குருவுக்கு நாம் செய்யும் கைமாறு பூரண அர்ப்பணிப்புடன் அவரது இலக்குகளை அடைவதே" எனும் குறிக்கோளுடன் பணியாற்றி வரும் பூஜ்ய குருஜி தேஜோ மயானந்தர் அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீட்டுப் பார்ப்போம்.

இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் மகாராஷ்டிர மாநிலத்தில் கார்போன் எனும் கிராமத்தில் 1950ம் ஆண்டு யூன் மாதம் 30ம் திகதி மாலை 5.30 மணிக்கு, சதாசிவ் கைற்வடே பார்வதி தம்பதியினர்க்கு கடைசிப் புத்திரனாகப் பிறந்தார். இவரது தந்தையார் மிகவும் மென்மையான குணம் படைத்த சட்டத்தரணி (Advocate) ஆவார். சுதாகர் 16ஆவது வயதை அடைந்த நிலையில் தந்தையாரைப் பிரிய நேர்ந்தது. அதனால் தாயாருடன் மிகுந்த அன்பு வைத்திருந்தார். தனது ஆரம்பக் கல்வியை கார்கோன் கிராமத்தில் பெற்று கல்லூரிப் படிப்பிற்காக போபால் நகருக்குச் சென்றார்.

கல்லூரியில் பௌதீகவியலில் பட்டம் பெற்ற சுதாகரின் வாழ்க்கையில் முதலில் சுவாமி ராமதாஸ், சுவாமி விவேகானந்தர், ஆகியோரிடம் ஈடுபாடு கொண்டிருந்தார். அத்துடன் இறுதியில் சுவாமி சின்மயானந்தர் அவர்களுடனான ஈடுபாடு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. 1970ஆம்



பூஜ்ய குருஜி சுவாமி தேஜோமயானந்தர்

ஆண்டில் தாயாரின் அனுமதியுடன் சுவாமி சின்மயானந்தரின் வழிகாட்டலில் சாந்தீபனி சாதனாலயா வில் வேதாந்தக் கல்வியைப் பயின்று 1973 ஆம் ஆண்டில் பிரம்மச்சாரி விவேக் சைதன்யாவாக மாறி புனர் ஜன்மம் எடுத்தார். 1983 ஆம் ஆண்டில் சுவாமி சின்மயானந்தரால் சந்நியாச தீட்சை வழங்கப் பெற்று சுவாமி தேஜோமயானந்தர் ஆனார். 1973 இல் பிரம்மச்சாரி விவேக் சைதன்யா போபால் மற்றும் கான்பூர் சின்மயா மிஷன் நியைங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார். பின்பு சாந்தீபனி சித்தபாரி ஆச்சிரமத்தில் இந்தி மொழியில் நடைபெற்ற வேதாந்தப் பயிற்சி நெறிக்கு தலைமை ஆச்சாரியார் ஆக நியமிக்கப்பட்டார்.

1983ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி சந்நியாச தீட்சை வழங்கப்பட்டு பம்பாய் சாந்தீபனி சாதனாலயாவின் தலைமை ஆச்சாரியாராக நியமிக்கப்ட்டார். இங்கு ஆங்கிலத்தில் இரண்டு பயிற்சி நெறிகளுக்குப் பொறுப்பாக இருந்து நடாத்தினார். அவரது மாணவர்கள் பலர் இன்று வேதாந்த ஆச்சார்யார்களாக உருவாகியுள்ளார்கள்.

1989 இல் வட அமெரிக்காவில் சின்மயா மிஷன் ஆச்சாரியராக பொறுப்பேற்று அங்குள்ள மிஷனின் செயற்பாடுகளைக் கவனித்துவந்தார். 1993 ஆகஸ்ட் 3ஆம் திகதி பூஜ்ய குருதேவர் மகா சமாதி அடைந்த பின்னர் இந்தியாவுக்குத் திரும்பிய பூஜ்ய குருஜி தேஜோ மயானந்தர் சின்மயா மிஷனின் தலைமைப் பதவியை ஏற்றுச் செயற்பட்டார். குருதேவர் காட்டிய வழியில் அவரது இலக்குகளை நோக்கித் தனது செயற்பாடுகளை நகர்த்தி வெற்றி கண்டார்.

1993இல் சின்மயா மிஷனில் பணிகளைப் பொறுப்பேற்கும் போது அவர் "வேறு ஒரு குருதேவர் உருவாக முடியாது. யாரும் அந்த இடத்திற்கு பொருத்தமாகவோ வரவோ அன்றி நிரப்பவோ முடியாது" என்றார். மேலும் ஸ்ரீ ஹனுமான் ஸ்ரீராம் பிரானுக்கு சேவை செய்தது போல் ஒரு தாசன் ஆக மட்டுமே சேவையாற்ற முடியும் என்று கூறினார்.

குருஜி அவர்கள் வேதாந்த அறிவிற் சிறந்தவராக அமைந்திருந்ததுடன் நல்ல நிர்வாகியாகவும், எளிமையானவராகவும் எவருடனும் அன்புடன் பழகிடும் ஆற்றல் கொண்டவராகவும் உள்ளார். சிறு வயது முதலே இசையில் ஆர்வம் கொண்டவராகவும், தானே சமஸ்கிருதத்தில பாடல்களை இயற்றி இசையமைத்து பாடும் வல்லமையுடையவராகவுமுள்ளார். ஆங்கிலம், ஹிந்தி. மராட்டி ஆகிய மும் மொழிகளிலும் புலமை படைத்தவர். அநேக விளக்கவுரைகளை மும்மொழிகளிலும் இயற்றியுள்ளார்.

சின்மயா மிஷனின் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு 50க்கு மேற்பட்ட குரு தேவரால் உருவாக்கபட்ட சுவாமிமார்களும் (சந்நிதியாசிகள்) அதன் மும்மடங்குக்கு மேற்பட்ட பிரம்மச்சாரிகளும் குருஜியுடன் என்றும் துணை நிற்கின்றனர். இவர்கள் மூலம் குருதேவரின் தூரநோக்கு இலக்குகள் நிறைவேற்றப்படுகின்றன.

குருஜியின் சேவையைப் பாராட்டி இந்திய அரசாங்கம் அவருக்கு அண்மையில் பத்ம பூஷன் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. எல்லாப் புகழும் குருதேவருக்கே என்று அமைதியாக அதனை ஏற்றுக் கொண்டார் எம் குருஜி. மேலும் அவ்விருதினை ஏற்று உரையாற்றுகையில், இவ்விருது சின்மயா மிஷனின் பணிகளுக்கு அதாவது சின்மய குடும்பத்திற்கு கிடைத்த விருது என்று தெரிவித்துள்ளார்.

பூஜ்ய குருஜியின் பணிகள் தொடர சின்மயா மிஷனின் பணிகள் சிறக்க வேண்டி பூஜ்ய குருதேவரின் பாதம் பணிவோம்.

# பூஜ்ய குருஜியின் ஆசி

## SWAMI TEJOMAYANANDA

ॐ



2 May 2016

### MESSAGE

I am very pleased to know that Chinmaya Mission Jaffna is celebrating Chinmaya week from May 1st to May 8th on the occasion of Pujya Gurudev's Birth Centenary Celebrations.

Pujya Gurudev's life, work and teachings are great inspiration for all. Pujya Gurudev was Brahma of Upanishads and for all the seekers, he was a Jeevan Mukta Purusha as described in Srimad Bhagawad Geeta. He was also a great visionary who provided to seekers from different walks of life, the right atmosphere to study the scriptures and to serve humanity. The centenary celebrations are to express our gratitude to him and to grow in Jnana, Bhakti and Seva through all our experiences and expressions.

"Unto Him Our Best" means re-dedicating our life with greater inspiration for the same cause for which Pujya Gurudev worked tirelessly.


I invoke God's grace and Pujya Gurudev's blessings on one and all.

With Prem & Om,

Tejomayananda

CENTRAL CHINMAYA MISSION TRUST, SANDEEPANY SADHANALAYA, SAKI VIHAR ROAD, MUMBAI – 400072, INDIA.
Tel: 91-22-2857 2367 ● Fax: 91-22-2857 3065 ● Email:ccmt@chinmayamission.com ● Website: www.chinmayamission.com

இந்திய அரசால் "பத்மபூஷண்" விருது பெறும் பூஜ்ய குருஜி



# துறவியர்களின் அருளாசிகள்

# BLESSING MESSAGE



**Shaastram** - samyak sthiram itishastram, means, that which is firm and clear. On what? In its declarations.

Shastram gives all guidelines in the form of rules to all varnas and ashrams, like Brahmacharya,Grihastha, Vanaprastha and Sanyasa. In short, to all human beings.

Can we understand such shastra?

Yes, of course, such a shastra can be understood only if a person lives like a Shastra – firm in conviction, and clear in thinking. Those who have these qualities can establish shastra (Udharanam) and keep it alive for ever.

And how does one do this? By the sheer conviction of sharing with all.

If you take Sri Adi Sankara, He has all these qualities with Mission of Vision. If you take Sri Ramanuja, He also has these qualities, so also Madhavacharya, and such other greats.

Now in last few centuries, Swami Sivananda, Swami TapovanMaharaj and Our Gurudev,...... all had these qualities of firm self-conviction, clear thinking (shastrodharaka).

If Swami Tapovan Maharaj is moolavar (main deity) in the temple of shastra, our Gurudev is Utsavar of that temple, who moves around everywhere and blessed with this knowledge (shastra) to establish shastra wherever he goes - Sashastrodharaka.

Note: (every temple has a deity in the sanctum sanctorum (moolavar) as well as an utsavamurti, one that is worshipped and taken around the town or village as some customs require. Both the moolavar or main deity and the utsava murti are equal in importance and considered as non-different)

We can see this play out in the work and life of so many of our great mahatmas --

- Adi Sankara wrote commentaries.
- He shared with many Mahatmas.
- Faced all controversies
- Debated with many scholars and established Advaita philosophy.
- He walked from place to place and himself taught to spread the knowledge and thus keep the shastra alive for longer period to do Shastrodharana, and He established Mutts with a vision.

If you take our Gurudev, he went further and beyond – How? He learnt from his Master and with firm conviction and clarity brought this knowledge of shastra to us from the Himalayas to the plains.

- Wrote Commentaries on Srimath Bhagavad Gita, Upanishads and other great texts
- He, too faced lots of problems in establishing Shastra- because he communicated in the English language
- To keep this shastra alive he established Sandeepany Sadhanalyas and gave more than 500 Acharyas to the world, who would in turn protect and uplift the shastra forever- ( Shastrodharaka). Also to keep this going, he established Missions around the world, Mission Centers with vision to continue this sharing and spreading of shastra to all, irrespective of caste, creed, religion - Shastrodharaka.
- Above all Gurudev lived like Sri Sankara who established himself in "Brahman as Brahman."

How can you say that Gurudev is Shastrodharaka just because of these? A simple example from everyday life will confirm: In cricket, if a player strikes a square cut and if somebody wants to comment on it, he must be a master in it. Only then he can comment on it.

SriGundappa Vishwanath alone is the authentic person to comment on a square cut as he was adept at it. Likewise ........ The highest credit and Blessing showered on Chinmaya Mission and Beloved Gurudev comes from Param Pujya HH Sri Bharathi Thirthar Swamiji of Sri Sringeri Sarada Peetam.

I would like to share a real experience at Chinmaya Kaivalya Salem.

In the year 2013, His Holiness Sri Bharathi Thirthar Swamiji of Sri Sringeri Sarada Peetam, blessed Chinmaya Kaivalya and performed a puja to our Beloved Brahma Krishna. After that, Swamiji blessed us with His Anugrahabhashanam (benedictory discourse). In that, He mentioned that, the one person who brought Srimath Bhagavad Gita and Upanishad to every nook and corner of this country and shared it irrespective of people [caste, religion, colour etc] and protected the shastra, is none other than Swami Chimayananda and He requested all people assembled there to study in Chinmaya Mission without fail. So Gurudev is the person who really did the seva of Shastrodharaka and he is the fit person to be worshipped with our prostrations to Him as Om Shastrodharakaya Namah!

My Sashtang namaskars at feet of beloved Gurudevas Shastrodharaka. Narayanaya!

**SWAMI KRISHNATHMANANDA**
**ACHARYA**
**CHINMAYA MISSION**
**SALEM.**





உ
சிவமயம்
குருபாதம்





# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

முதலாவது குருமஹா சந்நிதானம்

ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

05/05/2016



## அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்க்கு

சின்மயா மிஷனை ஆரம்பித்த சின்மயானந்தர் அவர்களின் பிறந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். மனிதப் பிறவியினை மகத்தானதாக்குவதற்காக ஞானிகளையும் அறிஞர்களை யும் இறைவன் தோற்றுவிக்கின்றான்.

இவ்வரிசையில் சுவாமி சின்மயானந்தரை இறைவன் சமய சமூகப் பணிக்காக தோற்றுவித்து, மிஷன் ஆரம்பிக்கப்பட்டு பல நாடுகளில் வாழுகின்ற மக்களின் ஆன்மிகப் பணிகளை நெறிப்படுத்தும் வகையில் பணியாற்றிக் கொண்டிருப்பது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இதனடிப்படையில் யாழ்ப்பாணத்திலும் சின்மயா மிஷன் ஆரம்பிக்கப்பட்டு இன்று சமூகத்தினுடைய நல்ல பணிகளை செயற்படுத்துவது பாராட்டுக்குரியது. இன்று மக்களது நவீன கால சூழ்நிலைக்கேற்ப அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது சமய நிறுவனங்களைச் சாரும்.

அமைதியாக வாழ்வதற்கும் இறை சிந்தனையுடன் வாழ்க்கையை நடைமுறைப் படுத்துவதற்கும் பயிற்சிகள் மூலமாக பணிகளை தொடர வேண்டிய தேவைகள் ஏற்பட்டுள்ளன. அவற்றை நெறிப்படுத்து வது அனைவரது பொறுப்பாகும்.

பூஜ்ய குருதேவரின் 100வது பிறந்தநாள் விழா மிகவும் சிறப்பாக நடைபெற இறைஅருளை சிந்திக்கின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



**Thavathiru**
**Vadivel Swamy**

Srimath Ganesanantha
Mahadeva Swamigal,
Mahadeva Ashramam,
Jeyanthinagar,
Kilinochchi (Sri Lanka)
Bank of Ceylon
A/C No. : 70192774
Kilinochchi.

மகாதேவாய நம
அசத்தெல்லாம் சத்தாக அஞ்ஞான இருள்
ஞான ஒளியதாக கொடிய அழிவெனும் சக்தி
அமுதமாக அருள்வாய் அவனிக்கெல்லாம்
அமைதி! அமைதி! அமைதி!

**மகாதேவ ஆச்சிரமம்**
**MAHADEVA ASHRAMAM**
Regd. No: SVP 104/44 of 29.10.1976
☎ 024 3243443



**Srimath Ganeshanantha**
**Mahadeva Swamy**

ஸ்ரீமத்
கணேசானந்த மகாதேவ சுவாமிகள்
மகாதேவ ஆச்சிரமம்,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.
இலங்கை.

15/05/2016

# ஆசியுரை



வணக்கம்.

சின்மயா மிஷனைப் பற்றி நாம் அறியாத விடயங்கள் அதிகம் உள்ளது. முதன் முதலில் யான் சின்மயா மிஷனைப்பற்றி அறிந்து கொள்ளும் பொருட்டு பல வருடங்களுக்கு முன் ரம்பொடையில் மலையைக் குடைந்து அமைக்கப் பெற்ற ஆஞ்சனேயர் கோவிலும் அதனோடு இணைந்த தியான மண்டபத்திற்கு நேரடியாக சென்று தரிசித்தோம். இக் கோவில் அமைவிடத்தை தெரிவு செய்த சுவாமி சின்மயானந்தருக்கு எனது மனமார்ந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றேன். தியானம் மூலமே மனம் அமைதியடையும் என்பதில் மாற்றுக் கருத்திற்கிடமில்லை.

அண்மைக்கால வன்னி யுத்தம் காரணமாக பலர் இடம்பெயர்ந்து சொல்லெணா துன்பங்களை அனுபவித்த போது இரு லொறிகளில் பலகோடி பெறுமதியான உதவிப் பொருட்களை இரு தடவைகள் கொழும்பு இராமகிருஷ்ண மிஷனூடாக வவுனியா செட்டிக்குள இடம்பெயாந்தோர் முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டதனை யான் நேரடியாக கண்டேன். இது ஓர் சிறந்த மனிதநேயப் பணியாகும்.

இலங்கையில் சின்மயா மிஷன் நிலையங்கள் ஆங்காங்கே நற்போதனைகள் ஏற்றி ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. இருப்பினும் போதிய வாகனவசதி ஏனைய வசதிகள் மிக மிக குறைவாக இருந்தபோதிலும் கஷ்டப் பிரதேசங்களில் மாபெரும் சேவையாற்றி வருகின்றனர். இவ்வாறு பல்வேறு இடங்களில் பல்வேறு ஆன்மீக வகுப்புக்கள் பட்டறைகள் போன்றவற்றை நடாத்தி எம்முள் இருக்கும் இறைவனை மனம், வாக்கு, காயம் மூலம் உணர் வதற்கான வழிகாட்டி வருகின்றமை பாராட்டிற்குரியதே.

ஸ்ரீமத் பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் வாக்கிற்கமைய பலனை எதிர்நோக்காது மாபெரும் தன்னலமற்ற சேவையாற்றிய சுவாமி சின்மயானந்தரின் பிறந்தநாள் நூற்றாண்டினை முன்னிட்டு வெளியிடவிருக்கும் மலருக்கு எனது மனமார்ந்த ஆசியினையும் அந்த மலரை அனைவரும் படித்து இப்பூமியில் பிறந்த பயனை அடைய வேண்டும் என வாழ்த்தியும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி யினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இறைபணியில்**
**கணேசானந்த மகாதேவ சுவாமிகள்**

உ
ஓம் தத்சத்
# ஸ்ரீ சிவகுருநாத குருபீடம்
மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமம், வேதாந்தமடம்
பதிவு இலக்கம் HA/4/J/11

தொலைபேசி இல: 021 221 9781
vethantha.madam@gmail.com

ஸ்ரீமத் வேதவித்தியாசாகரர் சுவாமிகள்.
(குருபீடாதிபதி.)

18, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
03.05.2016

# பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களின் பிறந்த நூற்றாண்டு விழா



இந்து சமயத்தை நெறிப்படுத்த வந்த மகான்கள் வரிசையில் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களின் பணி உன்னதமானதும் உலக ஆன்மிக நாட்டமுடையவர்களாலும் மறக்க முடியாததுமாகும். ஆன்மிக இன்பம் பெற்றவர்கள் அதிலேயே திளைத்திருக்கும் நிலையிலும் கங்கை நதி மக்களை நோக்கி மக்களுக்குப் பயன் வழங்க கீழ் இறங்குவதைக் கண்ணுற்ற சுவாமிகள் தாமும் அதே போல மக்களை நித்திய ஆனந்தர்களாக மாற்ற வேண்டும் என திடசங்கற்பத்துடன் செயலாற்றினார்.

வேதங்கள், உபநிடதங்கள், பகவத் கீதை போன்றவற்றை தமது தெரிவாகக் கொண்டு தமிழ், ஆங்கிலம் மற்றும் இதர மொழிகளிலும் உலக மக்கள் மத்தியில் சொற்பொழிவுகள் மூலம் கொண்டு சென்ற பெருமை சுவாமிகளையே சாரும். சுமார் 35 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கும் வருகை தந்து கீதைப் பேருரைகளை நிகழ்த்தி எமது மக்களிடம் ஆன்மிக மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். உலகளாவிய ரீதியில் பல சீடர்கள் சின்மயா மிஷன் ஊடாக பணி செய்துவருகின்றார்கள் இலங்கையிலும் ஆறு ஆச்சாரியர்கள் உள்ளனர். பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்கள் குருதேவரின் பணியை மேம்படச் செய்து வருகின்றார்கள். வடமாகாணம் முழுவதும் அறநெறிப் பாடசாலை ஆசியர்கள், இந்து சமய பாட ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள், ஆலயங்கள் தோறும் அருளுரைகள், பாலவிஹார், யுவகேந்திரா, வாசகர் வட்டம், உபநிடதம், கீதை வகுப்புக்கள் என பெரும்பணி செய்து மக்கள் மத்தியில் ஆன்மிக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றார்.

பூஜ்ய குருதேவரின் பிறந்த நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற "சின்மயம்" எனும் மலர் சிறப்புறவும் சின்மயாமிஷனினால் மேற்கொள்ளப்படும் பணிகள் இன்னும் மேம்பட்டு விளங்கவும் மக்கள் பெரும்பயன் அடையவும் என் குருமார்களின் நல்லாசியை வேண்டிப் பணிகின்றோம்.

**இறைபணியில்**
**ஸ்ரீமத் வேதவித்தியாசாகரர் சுவாமிகள்**
**குரு பீடாதிபதி**

# CHINMAYA MISSION OF SRI LANKA

(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, 10th Lane, Off Schofield Place, Colombo 03, 00300, Sri Lanka
Phone: +94-11-2591344 Email: info@chinmayalanka.org




2016-05-11

ஹரி ஓம் ! வணக்கம் !

இலங்கை சின்மயா மிஷனின் யாழ்ப்பாணக் கிளை, குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் ஜயந்தி நூற்றாண்டுக் கொண்டாட்டத்தையொட்டி நினைவுமலர் ஒன்றை வெளியிடுவது மகிழ்ச்சிக்குரிய விடயம். இலங்கை சின்மயா மிஷனின் யாழ்ப்பாணக் கிளையின் சின்மய ஜயந்தி கொண்டாட்டங்கள் மூலமாகவும் இந்த நினைவு மலரின் மூலமாகவும் குருதேவரின் மஹிமையை அனைவரும் அறிந்திடவும் அவரின் அருளாலும் போதனைகளாலும் அனைவரதும் வாழ்க்கை சிறந்திடவும் எனது பிரார்த்தனைகள்.

இலங்கை சின்மயா மிஷனின் யாழ்ப்பாணக் கிளையின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் அதன் அங்கத்தவர்களுக்கும், அதனது நலன் விரும்பிகளுக்கும் மனநிறைவு, உடல் ஆரோக்கியம் மற்றும் உற்சாகம் என்பவற்றை இறைவன் அருளவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

இறை சேவையில்

பிரம்மச்சாரி தர்ஷன் சைதன்யா
**இலங்கை சின்மயா மிஷன்**


**Acharyas**
Br Darshan Chaitanya, Br Jagrat Chaitanya, Brni Mahima Chaitanya, Br Kartik Chaitanya, Br Shivendra Chaitanya, Brni Thivyawadhani
**Executive Committee**
Mr S Mahenthiran (President), Mr S Balasubramaniam (Vice President), Mr Lasantha S Salgado (Secretary), Mr Shanker Somasunderam (Treasurer)
Mr T Someswaran, Mr P Vimalendran, Mr S Rajendran, Mr K Nadesan, Ms S Sivagnanasunderam, Mrs M Mody, Mrs S Duraiswamy, Mr C Rajadurai, Mr Ketheeswaran, , Mr Athithan Subramaniam, Mr Arun Jeyaprakash, Mr T Parthiban, Ms Sumathy Subramaniam, Ms K Amirthalingam, Mr K Pirabakaran

# CHINMAYA MISSION OF SRI LANKA

(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344
SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org



சின்மயா மிஷன்,
சின்மய ஞானவேல்
இல 9, செட்டித்தெரு ஒழுங்கை
நல்லூர்.




## ஆசிச் செய்தி

ஹரி ஓம், வணக்கம்

20ஆம் நூற்றாண்டின் ஞான தீபமாக ஒளிர்ந்து மறுமலர்ச்சியை உலகெங்கும் ஏற்படுத்திய மகான் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் ஆவார். பூஜ்ய குருதேவரால் ஸ்தாபிக்கப்பட்ட "சின்மயா இயக்கம்" இன்று உலகமெல்லாம் வேதாந்த ஞானத்தை அனைத்து மக்களுக்கும் அளிக்கின்ற அற்புதமான பணியில் ஈடுபட்டு வருகின்றது. அந்த வகையில் "சிவபூமி" என்றழைக்கப்படும் ஈழநாட்டின் வடபுலமாம் யாழ்ப்பாண மண்ணில் கடந்த 5 வருடங்களாக "சின்மயம்" ஒளிர்ந்து வருவது குருவருளேயாகும்.

அந்த குரு சிம்மக் குரலோன் சின்மயானந்தர் இப்புவியில் அவதரித்து 100 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி யாழ் சின்மயா மிஷன், சின்மய பிறந்த நூற்றாண்டு விழாவை, "சின்மயம்" நூற்றாண்டு மலர் வெளியீட்டுடன் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியதே இந்நூற்றாண்டு மலர் சிறப்பாக வெளிவரவும், நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெறவும் ஆசிவேண்டி எல்லாம் வல்ல இறைவனையும், பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

**இறைபணியில்**

**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா**
**வதிவிட ஆச்சார்யார்**
**சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.**


**Resident Acharyas:** Br. Darshan Chaitanya, Br. Jagrat Chaitanya and Bramacharini Mahima Chaitanya
**Committee:** Mr. S. Mahenthiran (President), Mr. S. Balasubramaniam (Vice President), Mr. Lasantha Salgado (Secretary) Mr. M. Gopalakrishnan (Treasurer), Mr. T. Someswaran, Mr. P. Vimalendran, Mrs. M. Mody, Mrs. S. Duraiswamy, Mr. C. Rajadurai, Mr. S. Rajendran, Mr. K. Nadesan, Mr. S. Selvarajah, Ms. S. Sivagnanasunderam, Mr. T. Parthiban, Mr. K. Ketheeswaran, Ms. Sumathy Subramaniyam, Mr. Arun Jeyaprakash, Mr. K. Pirabakaran, Ms. Kala Amirthalingam

# CHINMAYA MISSION OF SRI LANKA

(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, 10th Lane, Off Schofield Place, Colombo 03, 00300, Sri Lanka
Phone: +94-11-2591344 Email: info@chinmayalanka.org


## ஆசிச் செய்தி



இந்து மதம் தன்னகத்தே கொண்டுள்ள அழகிய பண்புகளில் ஒன்று உள்வாங்கும் தன்மை. காலத்தின் தேவைக்கேற்ப தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தன்மை. அதே பாணியில் சுவாமி சின்மயானந்தர் அவர்கள் புதுமை புனைவதில் கைதேர்ந்தவர். ஏட்டில் என்றோ எழுதப்பட்டு இமயமலை சிகரத்திலே முற்றும் துறந்த மகான்கள் மத்தியிலே முடங்கிப் போயிருந்த உபநிடத உண்மைகளைப் புதுமை புகுத்தி எமக்குப் புரிய வைத்தவர்.

எம் அகமாற்றத்திற்கு வழிவகுத்தவர். தன்வாழ்நாளில் 42 வருடங்களை அர்ப்பணித்தவர் எதற்காக குருதேவர் பிறந்த தின நிகழ்வு? "நாம் பிறப்பு இறப்பு அற்ற ஆத்ம ஸ்வரூபம்" என்பதை எமக்கு தெரிவித்த எங்கள் குருநாதருக்கு எதற்காக இந்தப் பிறந்த தின நிகழ்வுகள்? ஆம், இது வெறுமனே அவர் பிறந்த தினத்தைக் குறித்து நிற்கவில்லை.

உண்மையில் நாம் அந்த அகமலர்ச்சியை, அகமாற்றத்தைக் கொண்டாடுகின்றோம்.

- ஒரு நாத்திகவாதியிலிருந்து வேதாந்தி
- அரசியல் புரட்சியாளரிலிருந்து ஆன்மிக மறுமலர்ச்சியாளர்
- சிந்திக்கும் பத்திரிகையாளரிலிருந்து ஒரு இந்து போதனையாளர்
- தனிநபரிலிருந்து சர்வதேசப் பிரதிநிதி

தெளிந்த சிந்தனை, உறுதியான பேச்சு, அளவிட முடியாத அன்பு, கருணை மற்றும் அயராத உழைப்பு ஆகியவற்றின் மூலம் எம் அகமாற்றத்திற்கு வித்திட்ட, தொடர்ந்துவரும் தலை முறையினருக்கு வித்திட்டுக் கொண்டிருக்கும் எங்கள் குருதேவ் சுவாமி சின்மயானந்தர் அவர்களின் நூற்றாண்டு தின நிகழ்வின் ஒரு அம்சமாக இலங்கை சின்மயா மிஷன் யாழ்ப்பாணம் நூற்றாண்டு விழா மலர் ஒன்றை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

இம்மலர் சிறந்த முறையில் வெளிவர யக்ஞ பாவத்தோடு உழைத்த அனைத்து உள்ளங்களையும் வாழ்த்தி நிற்கின்றோம்.

"அவருடைய கருணையும் நல்லாசியும் நம்மூலமாக நம்மைச் சுற்றியுள்ள இந்த உலகிற்குப் பரவட்டும்".

– சுவாமி சின்மயானந்தர் –

**இறைபணியில்**
**பிரம்மச்சாரிணி மஹிமா சைதன்யா**
**ஆச்சாரியார், இலங்கை சின்மயா மிஷன்**
**திருக்கோணமலை**


**Acharyas**
Br Darshan Chaitanya, Br Jagrat Chaitanya, Brni Mahima Chaitanya, Br Kartik Chaitanya, Br Shivendra Chaitanya, Brni Thivyawadhani
**Executive Committee**
Mr S Mahenthiran (President), Mr S Balasubramaniam (Vice President), Mr Lasantha S Salgado (Secretary), Mr Shanker Somasunderam (Treasurer)
Mr T Someswaran, Mr P Vimalendran, Mr S Rajendran, Mr K Nadesan, Ms S Sivagnanasunderam, Mrs M Mody, Mrs S Duraiswamy, Mr C Rajadurai, Mr Ketheeswaran, , Mr Athithan Subramaniam, Mr Arun Jeyaprakash, Mr T Parthiban, Ms Sumathy Subramaniam, Ms K Amirthalingam, Mr K Pirabakaran

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344
SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org

# Dwells In The Hearts Of Millions



Loving adorations of PujyaGurudev Swami Chinmayanadaji and all Great Sages of Wisdom and illuminated Seers and Saints of the world.

PujyaGurudev Swami Chinmayanadaji was born one hundred years ago of very wealthy parents in South India. His father was a very big landlord; but he is today the lord of people in many lands and he dwells in the hearts of millions today. PujyaGurudev expected us to disseminate the knowledge we imbibed from him to others in every possible way. And for this he himself was the role model. Not only did he teach the scriptures from the dais, every word and action of his day-to-day life carried a message to those who were alert and open to learn.
Contemplating on his myriad qualities, we offer our humble homage to our Master Mentor.


Hari Om

Loving Pranams
Brahmachari Shivendra Chaitanya
Acharya
Chinmaya Mission Kilinochchi

Resident Acharyas: Br. Darshan Chaitanya, Br. Jagrat Chaitanya and Bramacharini Mahima Chaitanya
Committee: Mr. S. Mahenthiran (President), Mr. S. Balasubramaniam (Vice President), Mr. Lasantha Salgado (Secretary) Mr. M. Gopalakrishnan (Treasurer), Mr. T. Someswaran, Mr. P. Vimalendran, Mrs. M. Mody, Mrs. S. Duraiswamy, Mr. C. Rajadurai, Mr. S. Rajendran, Mr. K. Nadesan, Mr. S. Selvarajah, Ms. S. Sivagnanasunderam, Mr. T. Parthiban, Mr. K. Ketheeswaran, Ms. Sumathy Subramaniyam, Mr. Arun Jeyaprakash, Mr. K. Pirabakaran, Ms. Kala Amirthalingam

# சின்மயா மிஷன்
# தோற்றம் – பணிகள்

பூஜ்ய குருதேவரின் புனித நோக்கு



# ௐ சின்மயா மிஷனின் தோற்றமும், அதன் பணிகளும்

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர், இமயத்தில் சுவாமி தபோவன் மகராஜ் அவர்களிடம் தான் பெற்ற ஞானத்தை, உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் வழங்கி அவர்களையும் நித்திய இன்பத்தை பெறும் மார்க்கத்துக்கு தயாராக்க வேண்டும் என்னும் பெரு நோக்குடன் தனது ஞான குரு மற்றும் தீட்சா குரு இருவரினதும் பூரண ஆசியுடன் தனது முதல் ஞான யக்ஞத்தைப் "புனே" நகரில் உள்ள ஹரிஹர பஜன் சமாஜ விநாயகர் ஆலயத்தில் 1951 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்பித்தார்.

இந்துக்களாக இருப்போம் (Let us be Hindus) என்னும் தலைப்பைக் கொண்டு இஞ்ஞான யக்ஞம் நடாத்தப்பட்டது. பிறப்பில் இந்துக்களாகப்பிறந்து நாளடைவில் நாகரிக மோகத்தில் சிக்குண்டு இந்துக் கலாசாரத்தையே மறந்து தம்மைத் தாமே அழித்துக் கொள்ளும், ஆங்கிலம் படித்து தம்மை உயர் மட்டத்தினர் என்று காட்டிக் கொள்ளும் அறியாமை மிகுந்த கும்பலின் அறியாமையைப் போக்குவதே குருதேவரின் குறியாக இருந்தது. மலையாளம், ஹிந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளிலும் தனது கருத்துக்களை வெளியிடும் வல்லமை படைத்திருந்தும், ஆங்கில மொழியைப் பயன்படுத்தியதன் காரணம் இதுவே "ஞான யக்ஞம்" என்பது ஓமாக்கினியில் அறியாமை இருளைப் பொசுக்கி ஞான ஒளியை வெளிப்படச் செய்வது என்பதாகும்.

ஞான யக்ஞத்தின் முதல் நாள் நிகழ்வுக்கு ஏழு பேர் மட்டும் வந்திருந்தனர். நாட்கள் செல்லச் செல்ல பங்கு பற்றுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வந்து இறுதிநாள் (100 ஆவது நாள்) பல நூற்றுக்கணக்கானோர் பங்கு பற்றி ஞான யக்ஞம் ஹோமத்துடன் நிறைவேறியது. மக்கள் மனதிலும் திருப்பங்கள் ஏற்படலாயின.

தொடர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் தொடர் ஞான யக்ஞங்கள் (சொற்பொழிவுகள்) ஆன்மிக அருளுரைகள் ஆற்றி மக்களின் மனங்களில் மறைந்து கிடந்த ஆன்மிக உணர்வை தட்டி எழுப்பினார். எந்த ஒரு செயற்பாட்டிற்கும் எதிர்ப்புக்கள் இருந்தால் அச் செயற்பாடு சிறப்புற வாய்ப்புண்டு அந்த வகையில் குரு தேவரின் இந்த சீரிய செயற்பாடுகளுக்கும், "வேதமோதும் வேதியர்களால் ஓதப்படும், வேத மந்திரங்களை சகலரும் ஓதுவதா?, தேவ பாஷையான சமஸ்கிருதத்தில் உள்ள வேத சாஸ்த்திரங் களை அந்நிய பாஷையான ஆங்கில மொழியில் கற்பதா? இவை அபச்சாரம்" என எதிர்ப்புக் குரல்கள் எழத்தான் செய்தன. "எந்தவொரு செயலும் நல்ல நோக்கத்தோடு, நான் செய்கிறேன் என்ற எண்ண மின்றி பலனை எதிர்பாராமல் செய்யப்படும் போது அது சிறப்பாக நிறைவேறும்". இது பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணர் பார்த்தனுக்கு உரைத்தது. அந்த வகையில் குருதேவரின் நல்நோக்கு நலமாகவே நிறைவேறியது. அடியார்களின் ஆதரவு பெருகிற்று. பக்தர்களின் எண்ணிக்கை பல மடங்காயிற்று.

1953 அம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சென்னையில் உள்ள அடியார்கள் பலர் சேர்ந்து சுவாமிகள் தனியாக இப்பணிகளை முன்னெடுப்பதிலும் பார்க்க ஓர் இயக்கமாக ஆரம்பித்து

செயற்பாடுகளை தொடர்ந்ததால் அநேக பணிகளைச் செய்யலாம் என்று சிந்தித்து "சின்மயா இயக்கம்" என்று ஆரம்பிப்போம். என குருதேவரிடம் ஆலோசனைகளை கேட்டனர். இயக்கம் ஆரம்பிப்பதை அனுமதித்த குருதேவர் சின்மயா எனத் தனது பெயரை ஆரம்பமாக கொள்வதை மறுத்தார்.

அதற்கு அடியவர்கள் சின்மயம், அவரது பெயர் மட்டுமல்ல சித்+மயம் என்பது அறிவு (ஞான) மயம் என்று அன்புடன் வாதிட்டு அதற்கான ஆசியைப் பெற்றனர்.

இவ்வாறு சின்மயா மிஷன் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் சின்மயா மிஷனின் பணிகள், பல பரிமாணங்களில் விஸ்தரிக்கப்பட்டன. மக்களுக்கு ஞானத்தை வழங்குவதே அடிப்படை நோக்கமாகக் கொண்டிருந்தாலும் நாளடைவில் மிஷன் விஸ்தரிக்கப்படும் பொழுது பணிகளும் சமயம் மற்றும் சமூகம் சார்ந்த முன்னேற்றப்பணிகளை முன்னெடுத்து விஸ்தரிக்கபபட்டன.

இவ்விதம் உதயமான "சின்மயா மிஷன்" "ஒரே எண்ணத்துடன் ஒரே குடும்பமாக இயங்கவேண்டும். என சுவாமி ஆசி கூறினார். அன்று முதல் சின்மய வாக்குறுதியில் முதல் வசனமாக "நாம் ஒரு குடும்பமாக இருப்போம்" எனும் வாக்கியமே அமைந்துள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் சின்மயா மிஷன் "நிலையங்களை உருவாக்கி ஆங்காங்கே ஞானத்தைப் பரப்பும் வகையில் ஞான யக்ஞங்கள் நடாத்தப்பட்டதுடன் வகுப்புக்களும் நடாத்தப்பட்டன. பகவத் கீதை, உபநிடதங்கள், ஆதிசங்கரரின் பிரகண கிரந்தங்களான ஆத்ம போதம், தத்வபோதம், பஜகோவிந்தம், விவேகசூடாமணி என்னும் நூல்கள் இவ்வகுப்புக்களில் கற்பிக்கப்பட்டன.

பாடசாலை மட்டங்களில் சமய போதனைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பல சின்மய வித்தியாலயங்களும் உருவாக்கப்பட்டன. மேலும் குழந்தைகளுக்கு ஆன்மிக அறிவைப் புகட்டும் முகமாக சின்மய பாலவிஹார் எனும் பிரிவை உருவாக்கினார்.

இளைஞர்களை ஆன்மிக வழியில் வழி நடத்தி அவர்களின் ஆளுமையை மேம்படுத்த சின்மய யுவகேந்திரா எனும் பிரிவு உருவாக்கப்பட்டது. மற்றும் வீட்டில் இருக்கும் பெண்கள் ஓய்வு நேரத்தை ஆன்மிக சிந்தனையில் செலவழிப்பதற்கு "தேவி குரூப்" எனும் பிரிவு உருவாக்கப்பட்டது.

வயது வந்தோர்கள் ஆச்சாரியர்களின் உதவியுடன் தமது ஆன்மிகம் சார் சந்தேகங்களைத் தீர்ப்பதுடன் கலந்துரையாடல் மூலம் ஆன்மிக நூல்களைக் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக வாசகர் வட்டம் மற்றும் தேவியர் வட்டம் ஆகிய குழுக்களும் உருவாக்கப்பட்டன. மேலும் ஆன்மிக முகாம்கள் நடாத்துதல் சத்சங்கங்கள் நடாத்துதல் ஆகியனவும் நடாத்தப்படுகின்றன.

இவ்விதம் தனி ஒருவராகவே இப்பணிகளை 12 வருடங்கள் மேற்கொண்ட குருதேவர் தன்னைப் போல் பணி செய்யக் கூடிய துறவிகள் படையணியை உருவாக்கும் நோக்கில் 1963ஆம் ஆண்டு மும்பாயில் "சாந்தீபனி சாதனாலயா" எனும் துறவிகளுக்கான குருகுலக் கல்வியை வழங்கும் நிலையத்தை உருவாக்கினார்.

இங்கு ஆங்கில மொழியில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (சாந்தீபனி என்பது கிருஷ்ண பகவானின் குருவின் பெயர்). இதனைத் தொடர்ந்து சித்த பாடியில் ஹிந்தி மொழியிலும் கோயம்புத்தூரில் தமிழிலும் மேலும் வெவ்வேறு மொழிகளிலும் இக் கிரந்தத்திற்கு வழங்கப்படுகின்றது. இதன் பயனாக உலகெங்கிலும் 30க்கு மேற்பட்ட நாடுகளில் 400ற்கு மேற்பட்ட சின்மயா மிஷன் ஆச்சிரமங்களில் ஆச்சாரியார்கள் இச் செயற்பாடுகளைத் தொடர்ந்து நடாத்தி வருகின்றனர்.

மேலும் குருதேவர் தனது ஆன்மிகப் பணியின் வரிசையில் பல நூல்களை எழுதி வெளியிடப்பட்டுள்ளார். பகவத் கீதை எனும் கிரத்தத்திற்கு பகவான் ஆதி சங்கரர் சமஸ்கிருதத்தில் எழுதிய பாஷ்யத்தைத் தழுவி ஆங்கில மொழியில் விளக்கவுரை எழுதியுள்ளார். தற்பொழுது இவை தமிழிலும் வேறு சில மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன. அத்துடன் CD க்கள் DVDக்கள் மூலம் ஆன்மிகப் பாடல்கள் சொற்பொழிவுகள் வெளிவந்துள்ளன.

இவற்றுடன் சின்மய கிராமிய அபிவிருத்தி நிறுவனம் CORD ஒன்று ஆரம்பிக்கப்பட்டு பல கிராமங்களில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வசதிகளின்றி வாடும் மக்களை நாடிச் சென்று அவர்களுக்கான வாழ்வாதாரம் சிறார்களுக்கான கல்வி வசதிகள் ஊனமுற்றவர்களுக்கான உதவிகள், பயிற்சிகள் எனப் பல பரிமாணங்களில் சேவைகள் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் யுத்தம், வெள்ளம், இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண உதவிகளை வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

சின்மய மிஷனின் பணிகள் பாரதத்துடன் மட்டுப்படுத்தப்பட்டு நின்று விடாது பல்வேறு நாடுகளிலும் பரவச் செய்யும் முகமாக வெளிநாடுகளில் வாழும் அன்பர்களின் வேண்டு கோளிற்கிணங்க 1965ம் ஆண்டு சுவாமி சின்மயானந்தர் 12 நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள மக்களுடன் கலந்து பேசி அவர்களின் மன இயல்புகள் அவர்களின் எதிர்பார்ப்புக்கள் எத்தகையன என அறிந்து திறமையாகச் செயற்பட்டார் இதனால் வேறு இன, மத, மக்களும் வேதாந்த ஞானத்தை விரும்பிக் கற்க முன் வந்தனர்.

வேதாந்தம் இனம், மதம், மொழி ஆகியவற்றைக் கடந்தது. அவரவர் மதத்தை அவரவர் சரியாகக் கடைப்பிடிக்க வலியுறுத்துவதே வேதாந்தம்" எந்த வித வேறுபாடும் இன்றி எங்கும் எதிலும் எவரிலும் அந்தப் பரம்பொருளைக் காண வேண்டும் என உணர்த்துவதே வேதாந்தக் கொள்கை சுய முன்னேற்றமடைவதற்குச் சிறந்த வழி.

இத்தகைய உண்மைகளை அனைவரிடமும் அன்பாகப் பேசி உணர வைத்தார் குருதேவர் அதன் பயனாக இன்று உலகெங்கணும் சின்மயா மிஷன் ஆச்சிரமங்கள் நிறுவப்பட்டு ஆங்காங்கே ஆச்சாரியார்கள் நியமிக்கப்பட்டு ஆன்மிக மற்றும் சமய, சமூகப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் பணிகள் சிறக்க பிரார்த்திப்போமாக.

# இலங்கையில் சின்மயா மிஷன் பணிகள்

இலங்கை வாழ் மக்கள் செய்த தவப் பயனாய் ஓர் ஆன்மிக ஞானி இலங்கைக்கு வந்து அருள் உரை வழங்கி மக்களை ஆற்றுப்படுத்தும் சந்தர்ப்பம் கிட்டியது. 1979, 1980, 1981, 1982 ஆகிய வருடங்களில், ஆண்டுக்கு ஒருமுறை பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்கள் இலங்கைக்கு வருகைதந்து கீதை மற்றும் உபநிடதப் பேருரைகளை வழங்கியுள்ளார். இக்கால கட்டத்தில் அடியார்களின் விருப்பத்திற்கிணங்க இலங்கையில் சின்மயாமிஷன் கிளை ஆரம்பிக்க சம்மதம் தெரிவித்து ஆசி வழங்கினார்.

இதன் பிரகாரம் அடியார்கள் பலர் சேர்ந்து 1980ஆம் ஆண்டு யூன் மாதம் 25ஆம் திகதி கூட்டத்தைக் கூட்டி செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. 1981ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் 18ஆவது சட்டத்தின் மூலமாக இவ் அமைப்பு அரச அங்கீகாரத்தைப் பெற்றது. 1981ஆம் ஆண்டு குருதேவர் இலங்கைக்கு வருகைதந்த போது இலங்கையிலும் "சாந்தீபனி சாதனாலயா" நிலையம் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்று விரும்பினார். அதற்கு இராமாயணத்துடன் தொடர்பு கொண்ட இடங்கள் அமைந்திருக்கும் நுவரெலியா மாவட்டத்தில் நிறுவுவது நல்லது என்று கருதி அங்கு சென்ற குருதேவர் பல இடங்களையும் பார்த்து இறுதியில் வெவண்டன் மலையில் தற்பொழுது ஆஞ்சனேயர் ஆலயம் அமைந்திருக்கும் இடத்தை தெரிவுசெய்தார். அதில் 10 ஏக்கர் காணி அரசிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டது. அக்காணிக்கு குருதேவர் 'ராம்போத' என நாமம் சூட்டினார்.

தொடர்ந்து 1983 இனக் கலவரங்களால் சின்மயா மிஷனின் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. 1989இல் மீண்டும் பணிகள் ஆரம்பித்தன. இந்தியாவில் இருந்து சின்மயா மிஷன் ஆச்சார்யார்கள் வந்து ஆன்மிகப் பேருரைகள் கலந்துரையாடல்கள், வகுப்புக்கள் எனப் பல வகையில் ஆன்மிக ஞானத்தை வழங்கியுள்ளனர். 1996ஆம் ஆண்டு தற்போதய சின்மயா மிஷனின் தலைவர் பூஜ்ய குருஜி சுவாமி தேஜோமயானந்தர் அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

இக்காலப்பகுதியில் ராம்போதவில் ஆஞ்சநேயர் ஆலயக் கட்டடப் பணிகளும் நடைபெற ஆசீர்வதித்தார். 2001ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட 16அடி உயரமான ஆஞ்சநேயர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஆலயம் சின்மயா மிஷனால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. தொடர்ந்து அன்னபூரணி உணவகம், தங்குமிடவசதி மற்றும் 400வரையானோர் ஒரே நேரத்தில் கூடி இருக்கக்கூடிய மண்டபத்துடன் கூடிய கட்டடத்தொகுதி புதிதாக அமைக்கப்பட்டு 2014 டிசம்பர் மாதத்தில் பூஜ்ய குருஜி தேஜோமயானந்தர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஆஞ்சநேயர் ஆலயம் உட்பட இக்கட்டடத் தொகுதிக்கு 'சின்மய கோவில்' எனும் நாமம் பூஜ்ய குருஜியால் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியில் விரைவில் 'சாந்திபனி சாதனாலாயா' - குருதேவரின் தூரநோக்குக்கமைய அமைக்கப்பட்டு வேதாந்தப்பயிற்சி ஆரம்பிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. 2000ஆம் ஆண்டுக்கு பின் பிரம்மச்சாரி ரமணச் சைதன்யா அவர்கள் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் இருந்து தனது பணிகளை ஆற்றி வந்தார். அக்காலப்பகுதியில் பணிகள், வகுப்புக்கள் விஸ்தரிக்கப்பட்டு ரம்பொட, கண்டி, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலும் சில

செயற்பாடுகளை நடாத்தினர். இக்காலப்பகுதிகளில் பூஜ்ய குருதேவர் மீதும் அவரது போதனைகளிலும் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் சிலர் தம்மைப் பூரணமாக சின்மயா மிஷனுடன் இணைத்துக்கொள்ள முன்வந்து "சாந்தீபனி சாதனாலயா" வில் வேதாந்தப் பயிற்சி நெறியில் இணைந்து கொண்டனர். இரு வருடங்கள் குருகுல வாசம் செய்து வேதாந்தப் பயிற்சியை முடித்து பிரம்மச்சாரி தர்ஷன் சைதன்யா மற்றும் பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா ஆகிய இருவருக்கும் தீட்சா நாமம் சூட்டப்பட்டு பிரம்மசரிய தீட்சை வழங்கப்பட்டு 2008ஆம் ஆண்டுப் பகுதிகளில் இலங்கை சின்மயா மிஷனில் பணியாற்ற அனுப்பிவைக்கப்பட்டனர்.

இவர்கள் ஆரம்பத்தில் கொழும்பிலும் ரம்பொடவிலும் பணியாற்றினர். பின்னர் யாழ்ப்பாணத் தில் குறிப்பாக வட மாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களுக்குப் பணியாற்றும் வகையில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்கள் 2011ஆண்டு ஜனவரி மாதம் முதல் யாழ்ப்பாணத் தில் பணியாற்ற குருஜியால் நியமிக்கப்பட்டார். தொடர்ந்து பிரம்மச்சாரிணி மகிமா சைதன்யா பயிற்சி முடித்து தீட்சை பெற்று வந்து திருகோணமலையில் பணியாற்றுகின்றார். 2013ஆம் ஆண்டில் பிரம்மச்சாரி சிவேந்திர சைதன்யா, பிரம்மச்சாரி கார்திக் சைதன்யா மற்றும் பிரம்மச்சாரிணி திவ்விய வதனி ஆகிய மூவர் பயிற்சிநெறியை முடித்துவந்து சின்மயாமிஷன் பணிகளை முறையே கிளிநொச்சி, கண்டி, ரம்பொட ஆகிய பகுதிகளில் மேற்கொண்டு வருகின்றனர்.

தற்பொழுது இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, கிளிநொச்சி, கண்டி, ரம்பொட ஆகிய நிலையங்களில் ஆறு ஆச்சார்யார்களால் சின்மயா மிஷனின் பணிகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

அத்துடன் சின்மயா மிஷனின் சேவைப் பிரிவான சின்மய கிராமிய அபிவிருத்தி நிறுவனமும் (CORD) யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு குடும்பத் தலைவனை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் பெற்றோரை இழந்த பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்குச் சில ஊக்குவிப்புப் பணிகளை வழங்கி வருகின்றது.

இவ்வாறு இலங்கையில் சின்மயாமிஷனின் பணிகள் விஸ்தரிக்கப்பட்டு குருதேவரின் இலக்கான ஞானத்தை வழங்குவதோடு சமய சமூகப் பணிகளையும் ஆற்றிவருகின்றது.

**பணிகள் சிறக்க பணிவோம் குருதேவரை**

# குருமார்களின் ஆசிகள்





Sivasri 'Sivaakamagana Baaskaran'
**T.MAHADEVA KURUKKAL**
Dharmasāsta Gurukulam
*GAYATRI PEEDAM*
*Inuvil, Chunnakam*
*TelePhone:* 021 224 1560

'சிவாகமஞான பாஸ்கரன்'
**சிவஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள்**
அதிபர், தர்மசாஸ்தா குருகுலம், காயத்ரீ பீடம்
ஸ்ரீ கண்ணகாபரமேஸ்வரி தேவ்யாலயம்
இணுவில், சுன்னாகம்.

திகதி..............................................

# ஆசிச் செய்தி

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களின் பிறந்த நூற்றாண்டை யாழ் சின்மயா மிஷன் பெருவிழாவாக கொண்டாட உள்ளது. யாழ் சின்மயா மிஷனின் பணிகள் 2011 தை மாதம் ஆரம்பித்து தொடர்ந்து பல ஆத்மீக கைங்கர்யங்களை நடாத்தி வருவது நாமெல்லோரும் அறிந்ததே. இதன் வதிவிட ஆசார்யராக விளங்கி வரும் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்கள் மிகப் பிரமிக்கத்தக்க வகையில் யாழ் சின்மயா மிஷனை போற்றி வளர்த்து வருகிறார் எப்போதும் சிரித்த முகத்தோடு கூடிய அவர் யாழ் சின்மயா மிஷனில் பல கைங்கர்யங்களை நடாத்தி வருவது பெருமைக்குரியது. வதிவிடத்தில் மஹா கணபதி ஹோமம் நடாத்தி விநாயகர் பிரதிஷ்டையை ஸ்தாபித்தது பெருமைப்படக்கூடிய ஒன்றாகும். சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர்கள் என்று வயதுக்கு ஏற்றவாறு வகுப்புகள் இங்கே நடைபெறு கின்றன. பகவத்கீதை உபநிஷத்துக்களின் கல்வி விரிவான செயற்றிட்டமாக அமைகிறது. முக்கியமாக ஆசிரியர்கள் மாணவர்கட்கான பயிற்சிப்பட்டறைகள் உயர்ந்து நிற்கின்றன.

சின்மயநாதம் காலாண்டிதழ் வெளியீடும் மிஷனுக்கு உயர்வைத் தருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக "இந்துவாக வாழ்வோம்" எனும் மந்திரத்தை தாரக மந்திரமாகக் கொண்டு செயற்றிட்டங்களை விரிவாக நடாத்தி கொண்டிருப்பது மிஷனுக்கு சிகரம் வைத்தாற் போல் பிரகாசிக்கிறது. நல்லையம்பதி உத்சவகாலங்களில் பஜனைகளை நடாத்தி வருவதும் போற்றக் கூடியது. சுவாமி பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்கட்கு நல்லையம்பதி முருகனின் திருவருள் பரிபூர்ணமாக கிடைக்க பிரார்த்திக்கிறேன்.

**சிவஸ்ரீ.தா.மகாதேவக்குருக்கள்**

# ஆசிச் செய்தி



தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

எனத் திருமூலர் திருமந்திரத்தில் குருவின் பெருமையைப் போற்றியதற்கமைவாக யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு 29.05.2016 அன்று நூற்றாண்டு விழாவினைப் பக்தி பூர்வமாக நடாத்த விருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். இவ்விழா தொடர்பாக யாழ் சின்மயா மிஷன், நூற்றாண்டு விழா மலரொன்றினையும் வெளியிடவிருப்பது குருதேவருக்குச் செலுத்தும் உன்னதமான நன்றியாகவும் கௌரவமாகவும் அர்ப்பணிப்பாகவும் அமைவது குறிப்பிடற்பாலது. இத்தகைய நற்பணியாற்றும் யாழ் சின்மயா மிஷன் சார்ந்த வதிவிட ஆச்சாரியர்களுக்கும் விழாக் குழுவினர்க்கும் மலர்க் குழுவினர்க்கும் எமது நல்லாசிகளும் பாராட்டுக்களும் உரித்தாகும்.

பூஜ்ய குருதேவர் சுமாமி சின்மயானந்தர் அவர்கள் உருவாக்கிய சின்மயா மிஷன் உலகளாவிய நிலையில் சமயம் மற்றும் சமூகம் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. சிறப்பாக அத்வைத வேதாந்தத்தை உலகளாவிய நிலையில் மிளிரச் செய்யும் பணியை முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்டது. உன்னதமான ஆத்மீக நிறுவனமாகிய சின்மயா மிஷன் வேதங்களில் கூறப்படும் தன்னையாளும் அறிவினை விருத்தியடையச் செய்வதை முக்கிய பணியாகக் கொண்டது. தமது குருதேவர் உபநிடதங்கள் மற்றும் பகவத்கீதை சார்ந்த சிந்தனைகளை மக்கள் ஆத்மீக நலம்பெற எவ்வகையில் தெளிவாகத் தமது சத்சங்கங்கள் வழியாக எடுத்துக் கூறி வந்தாரோ அதனையே தமது இலட்சியமாகக் கொண்டு குருதேவரின் சீடர்கள் செயற்படுவது குரு தேவரின் உன்னதமான வழி காட்டலுக்குக் கிடைத்த கௌரவமாகும். பகவத்கீதையின் உயர்ந்த சிந்தனைகளைப் பரப்புவதில் சின்மயா மிஷன் தனக்கேயுரிய சிறப்பினைக் கொண்டது. நாளாந்த வாழ்வில் இச் சிந்தனைகள் மக்களுக்குப் பயன் படவேண்டும் என்பதையே தமது குறிக்கோளாகக் கொண்டது.

ஆத்மீக மறுமலர்ச்சியின் கருவாக விளங்கும் சின்மயா மிஷன் பரந்த அளவில் ஆத்மீகக் கல்வியை இளந்தலை முறையினரிடையே வளர்த்து வருகின்றது. சத்சங்கம், மாணவர்களின் அறிவூட்டலுக்கான வகுப்புகள் சமய நிகழ்ச்சிகள், நூல் வெளியீடு போன்ற பணிகள் அர்ப்பணிப்புடன் குருதேவரின் வழியில் முன்னெடுக்கப்படுவது குறிப்பிடற்பாலது. மற்றும் பஜன்கள், சின்மயா மிஷன் மருத்துவ சேவைகள், சின்மய பாலவிஹார் போன்றவைகள் மூலம் ஐக்கிய அமெரிக்கா, பெரிய பிரித்தானியா, இந்தியா போன்ற பிற நாடுகளில் குருதேவரின் சீடர்கள் தூய்மையுடன் செயற்பட்டு வருவது தமது குருதேவருக்கு அவர்கள் செலுத்தும் குரு பத்தியின் வெளிப்பாடாகும். இந்தியாவில் 300க்கும் மேற்பட்ட சின்மயா மிஷன் கிளைகள் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தில் சின்மயா மிஷனின் மகுட வாசகம் பற்றி சிந்திப்பதும் பொருத்தமாகும். To give Maximum happiness to the maximum Number for the Maximun time இதற்கமைய அன்பு, மனிதநேயம், சிரசு நெஞ்சுசார்ந்த சமநிலை, சுயநலமற்ற சேவை, தியானம் இவையே பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் உருவாக்கிய சின்மயா மிஷனின் ஆத்மீகப் பயிற்சிக்குரிய அடித்தளம் இவற்றைப் போற்றும் வகையில் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டு விழா நடைபெறவுள்ளமை பாராட்டிற்குரியது.

யாழ் சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் சுவாமி ஜாக்ரத சைதன்யா அவர்கள் தமது குருநாதரின் வழிகாட்டல்களைச் சிரமேற்கொண்டு எளிமை, அர்ப்பணிப்பு, அன்பு ஆகிய விழுமியங்களுடன் உணர்வு பூர்வமாகப் பணியாற்றி வருவதோடு மிஷனுக்குப் பெருமை சேர்த்து வருபவர். நல்லூரில் யாழ் சின்மயா மிஷனின் அலுவலகத்தை அமைத்து தமது நிர்வாகச் செயற்குழுவினரினதும், ஏனைய வதிவிட ஆச்சார்யார்களினதும் அனுசரணையுடன் பணியாற்றி வருவது குறிப்பிடற்பாலது. இளந்தலை முறையினரிடையே ஒழுக்கம், ஆன்மீகக் கல்வி, பெரியாரைப் போற்றி மதிக்கும் பண்பு, பெற்றோரைப் போற்றும் பண்பு, குரு பக்தி, இறைவழிபாடு, சமய விழுமியங்களைப் போற்றுதல் போன்றவற்றைத் தமது பிரசங்கங்கள் மூலமும் சொற்பொழிவுகள் மூலமும் தெளிவுபடுத்தி வருவது பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தருக்கு யாழ் சின்மயா மிஷன் செலுத்தும் உயர் கௌரவமாகும். சிறப்பாக யாழ் சின்மயா மிஷன் சார்பில் சுவாமி ஜாக்ரத சைதன்யா அவர்கள் நல்லூர்க் கந்தனின் மகோற்சவ காலங்களில் இறை நாம பஜனை மற்றும் சமயஞ் சார்ந்த அரும் பொருட்காட்சி ஆகியவற்றை இளந்தலைமுறையினர் நன்மைக்காக சிறப்பாக நடாத்தி வருவது அனைவரது பாராட்டிற்குமுரிய நற்பணியாகும்.

இவ்வகையில் சிறப்புறப் பணியாற்றும் யாழ் சின்மயா மிஷன் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தருக்கு எடுக்கும் பிறந்த நூற்றாண்டு விழா மேன்மேலும் குருநாதரின் ஆத்மீக சிந்தனைகள் உலகளாவிய நிலையில் பரவிப் பயன்பெற வழி சமைக்கும் என்பதில் ஐயமில்லை. பூஜ்ய குருதேவர் சின்மயானந்த சுவாமிகளின் பிறந்த நூற்றாண்டு விழா சிறப்புறவும் நூற்றாண்டு விழா மலர் சிறப்புற அமைந்து வெளியீடு வெற்றி பெறவும் எமது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் யாழ் சின்மயா மிஷனுக்குத் தெரிவிப்பதோடு பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் குருவருள் அனைவருக்கும் கிடைத்து சகல வளங்களுடனும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதன் மூலம், உலகில் சாந்தி சமாதானம், அன்பு அகிம்சை சமூக நல்லிணக்கம் மேலோங்கி ஆத்மீக நலனும் வாழ்வும் மேம்படுவதாகும்.

குரூர் ப்ரஹ்மா குரூர் விஷ்ணுர் குரு தேவோ மஹேச்வர:!
குரு சாகடிாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம:!!

**ப.கோபாலகிருஷ்ண ஐயர்**
**இலக்கிய கலாநிதி**
**வாழ்நாட் பேராசிரியர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாணம்.**
**05.05.2016**

உ
சிவமயம்

கிரியா க்ரம ஜோதி, கிரியா கலாப முக்தாமணி
பிரம்மஸ்ரீ
ப. மனோகரக் குருக்கள்
பிரதமகுரு
வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி
தேவஸ்தானம்
வல்வெட்டித்துறை.
☎ 021-2263337

'Kriya Krama Jothy', 'Kriya Kalapa Mukthamani'
BRAHMASRI
P. MANOHARA KURUKKAL
CHIEF PRIEST
VALAMBIGA SAMETHA
VAITHEESWARA SWAMI TEMPLE
VALVEDDITHURAI.

05.05. 2006.

# இந்து மத குருமார் ஒன்றிய தலைவரின் ஆசிச் செய்தி



யாழ் சின்மயா மிஷன், சுவாமி சின்மயானந்தர் அவர்களின் பிறந்த நூற்றாண்டு விழா நடாத்துவது என்பது காலத்தின் தேவையாகும். சுவாமிகள் செய்த அளப்பரிய சேவைகளை என்றும் மக்கள் மனதில் பதிய வைப்பதற்காக நூற்றாண்டு விழா மலர் வெளிவருவது சிறப்பு மிக்க நிகழ்வாகும். மலருக்கான ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மல்லிகை மணம் போல் நீடித்து புகழ் பரவவும் மலரின் சிறப்புகளிற்கு நல்ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

நன்றி

**சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்**

President
International Hindu Religious
Priests' Organization
Sri Lanka

உ
ஓம் நமசிவாய

# வீணாகான குருபீட ஆசிச்செய்தி



சித்தர்களும் ஞானிகளும் அவ்வப்போது பூமியில் அவதரித்து மக்களது ஆன்ம ஈடேற்றத்திற்கு அருள்வழி நின்றதோடு மட்டுமன்றி மக்களது உலகியல் வாழ்வின் மேம்பாட்டிற்கும் நல்வழிகாட்டி வந்திருக்கின்றார்கள். அந்த வகையில் ஆன்மீகத்திற் கும் உலகியலுக்கும் வரப்பிரசாதமாக கிடைத்தவர் தான் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்கள் ஆவார். சுவாமிகளுடைய பிறந்த நூற்றாண்டு விழா எதிர்வரும் மே 29ம் திகதி வருவதையிட்டு நாம் மகிழ்வடையும் வேளையில் சுவாமிஜி அவர்களுடைய விழாவினை பக்தியுடனும் அறநெறி சிறக்கவும் யாழ் சின்மயா மிஷன் விழா எடுப்பது மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது. எனக்கு பூஜ்ய சுவாமிகள் பற்றியதான அற்புதங்கள் அருள் செறிவுகள் பற்றி தெரியாது இருந்தாலும் கூட அவர்களுடைய காத்திரமான பக்தி அருள் சிறப்பினை அவரது சிஷ்யர்களில் ஒருவராக திகழ்ந்துகொண்டிருப்பவரான யாழ் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்யா சுவாமிகளுடைய பணிகள் மூலமாகவும் அருள்நெறிப்படுத்தல் மூலமாகவும் நான் உணர்ந்திருக்கின்றேன். 2011 ஆம் ஆண்டு சைதன்யா சுவாமிகள் யாழ் வதிவிடஆச்சாரியராக பொறுப்பேற்றிருக்கின்றார். அன்று முதல் இன்று வரையிலான காலத்தில் நான் சைதன்யா சுவாமிகளுடன் மிக நெருக்கமாக பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கின்றது. குறுகிய காலத்தில் மக்கள் மயப்படுத்தப்பட்ட சமய ஆன்மிக சமூக அறநெறி நிறுவனமாக மிகப்பெரிய அளவில் வளர்ச்சியின் சிகரத்தில் இன்று சின்மயா மிஷன் திகழுகின்றது என்றால் அது மிகையாகாது. அத்தனை சிறப்பிற்கும் பூஜ்ய சுாமிகளது அருள் சிறப்பும் சைதன்யா சுவாமிகளது அயராத ஆன்மீகப்பணியும் தான் காரணமாகும். நான் பல சந்தர்ப்பங்களில் மிஷன் சுவாமிகளுடன் இணைந்து சமய சமூகப்பணிகள் ஆற்றியிருக்கின்றேன். அவை எனக்கு கிடைத்த மிகப்பெரிய ஆன்மீக அனுபவம் ஆகும். யாழ்ப்பாணத்தில் சிறார்கள் முதல் பெரியவர்கள் வரை அரச உத்தியோகத்தர்கள் முதல் பாமர மக்கள் வரை அனைவரையும் தனது ஆற்றல் மிக்க உபன்நியாசத்தினாலும் அனைவரையும் தன்வசப்படுத்தி அருள் ஆட்சி செய்து வரும் சைதன்யா சுவாமிகளுடைய கீர்த்தி மிகப் பெரியதாகும். அவாகளது தொண்டின் பெருமையால் யாழ் மண் பெருமையடைகின்றது. சமயமும் தழைத்தோங்குகின்றது. அத்தனை பெருமைகளையும் தந்த சைதன்யா சுவாமிகளுக்கு நாம் என்றும் கடமைப்பாடு உடையவர் களாவோம். சுவாமிகளை உருவாக்கி எமக்குத் தந்த பூஜ்ய குருதேவரை வணங்கி அவரது பிறந்த நூற்றாண்டு நாளில் சிஷ்யர்களது பெருமைகளால் குரு பக்தியை சிறப்படையச் செய்வோம் என கூறி அமை கின்றேன்.

ஓம் நமசிவாய

**வித்தியாசாகரம் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்**
**(சிவன்தேவஸ்தானம் சித்தன்கேணி)**
**சந்நிதாச்சாரியார்**
**வீணாகானகுருபீடம் குருமார் சந்நிதானம்**
**யாழ்ப்பாணம்.**

வித்யாபூஷணம், வித்யா ப்ரகாசனர், சாதக சிரோமணி
ப.சிவானந்த சர்மா B.A.(Hons)
(கோப்பாய் சிவம்)
இந்து மதகுரு
நிர்வாக இயக்குநர், வித்யா பவனம் – நூலகசேவை.
உரிமையாளர், ஸ்ரீவித்யா கணினி அச்சகம்.
ஆசிரியர், "விவித வித்யா"
தலைவர், சர்வானந்தமய பீடம்.
ஸ்ரீநகரம், அளவோடை வீதி,
இணுவில், சுன்னாகம், இலங்கை.

ॐ



Vidya Booshanam, Vidyaprakasana, Sathaka Siromani
P. SIVANANDA SARMA B.A.(Hons)
(KOPAY-SIVAM)
HinduPreast
MANAGING DIRECTOR - VIDHYA BHAVANAM - LIBRARY SERVICES.
PROPRITOR-SRIVIDYA COMPUTER PRESS.
EDITOR- "VIVITHA VITHYA".
PRESIDENT- SARVANANDAMAYA PEEDAM.
'SRINAGARAM', Alavodai Road,
INUVIL, CHUNNAKAM, SRILANKA.

☎ 0094 (0)21 224 1504 email: kopaysivam@gmail.com

# ஆசிச் செய்தி

ஆன்மீகப் பாதையில் மக்களை வழிநடத்துவதற்கு ஆண்டவன் எத்தனையோ வழிகளை கையாளுகின்றான். தாய்போல் தயவும், தந்தைபோல் கண்டிப்பும் உள்ள அதே நேரம் தானே குருவாயும் இருந்து வழிகாட்டுகிறான் அந்தப் பரம்பொருள். வாழ்க்கை சுவையாக நகரவேண்டிக் கர்ம வினைப்பயனையும் மறுபிறவியையும் தந்து - வாழும் வழிகளையும் சொல்லித்தந்து- வாழ்க்கைச் சுகங்களையும் அள்ளித் தந்து - உனது வழியை நீ பார்த்துக்கொள் என அவதானிக்கிறார். கைகாட்டிப் பலகை நம்மோடு வராது அது காட்டும் வழியில் நாம்தான் நடைபோடவேண்டும். ஆனால் வழிகாட்டிப் பலகையின் வேலை வழிகாட்டுவதோடு முடிந்துவிடும். ஆண்டவனோ நாம் அறியாமல் நமக்குப் பின் வந்து கொண்டேயிருப்பார். நாம் தான் அதனை அறிவதில்லை.

ஆண்டவன் அவ்வப்போது தன்னை வெளிப்படுத்தும் பல்வேறு வடிவங்களில் மிக முக்கியமானது குருதேவர் வடிவங்கள். அவரவருக்குரிய தனித்த குரு வடிவங்களை விட உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான வழிகாட்டிகளாகவும் அவ்வப்போது பல குருநாதர்களை அவர் அனுப்பி வைக்கிறார். இவர்கள் பெரும்பாலும் வாழ்க்கையைத் துறந்த தியாகிகள். தன் ஆன்ம விடுதலைக்காக துறவு பூண்பவர்கள், ஒருவகை. உலக நன்மைக்காக துறவிகளாகுவோர் இன்னொரு வகை. இந்த இரண்டாவது வகையில் தான் இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், சுவாமி சின்மயானந்தர் முதலியோர் வருகின்றனர். நமது ஆன்ம விடுதலைக்கு வழிகாட்டுபவர்களே இவர்கள் அனைவருமெனினும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தனித்துவமான வழிவகைகளைக் கையாள்கின்றனர். தத்தமது கால நேர வர்த்தமானங்களுக்கேற்ப அவர்களது செயற்பாடுகளை அமைத்துக் கொள்கின்றனர்.

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்கள் உலகிற்கு சேவை செய்து நல்லறவழியில் அனைவரையும் அழைத்துச் செல்வதற்காக ஒரு சிஷ்ய பரம்பரையை தோற்றுவித்தார். அவர்கள் உலகெங்கும் பரந்து சென்று, ஆங்காங்கே மக்களை ஒன்று திரட்டி சமய போதனைகள் செய்வதோடு மனித மேம்பாடு, மானுடநேயம், கல்வி வளர்ச்சி, இறைநம்பிக்கை என்பவற்றை வளப்படுத்துகின்றனர்.

இவ்வகையில் எமது இலங்கை நாடு செய்த தவப்பயனாக, சுவாமியின் சீடர்கள் சிலர் பிரம்மச்சாரிகளாக இங்கு வந்து தலைநகர் கொழும்பிலும், யாழ்ப்பாணம், திருகோணமலை, நும்பொட, கிளிநொச்சி கண்டி முதலிய இடங்களிலும் மடங்களை அமைத்து பணியாற்றுகின்றனர். ஆனால், மடங்களில் இருந்தாலும் அவர்கள் மடாதிபதிகளாக இல்லாமல் ஆன்மீக சேவகர்களாக - அல்லது மானுடத்தின் தோழர்களாக மக்களுக்குள் இறங்கி வந்து பணியாற்றுகின்றனர்.

யாழ்ப்பாண வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்யா அவர்கள் குறுகிய காலத்தில் யாழ்ப்பாண மக்களின் மனத்தில் இடம்பிடித்துவிட்டார். அவரது அமைதியும் அடக்கமும் மிக்க தோற்றமும் செயல்களும், அதற்கேயுரிய இனிய குரலும் காண்பவர் மனத்தில் இறைநினைவை உண்டாக்க வல்லவையாக அமைந்திருப்பது இறைவன் கொடுத்த வரமாகும்.

யாழ்ப்பாணத்தில் சின்மயா மிஷனின் பணிகளில் மிக முக்கியமாக என்னை கவர்ந்தவை இரண்டு. முதலாவது இளம் சிறார்களை மையமாகக் கொண்ட செயற்பாடு. இளைஞர்களை இலக்கு வைத்து அவர்களை தம்பால் ஈரத்து இளமனதில் அறப்பண்புகளை விதைக்கும் செயற்பாடு மிகுந்த வெற்றியைத் தருகிறது. அவ்வப்போது அவரால் மாணவர்களுக்கு நடத்தப்படுகின்ற வதிவிட பயிற்சி நெறிகள் குறிப்பிடத்தக்கன.

இரண்டாவது, ஆலய வழிபாடு, திருவிழாக்கள் முதலியவற்றினூடாகப் பொதுமக்களை அணுகி கூட்டுப் பிரார்த்தனை மற்றும் சொற்பொழிவு ஆகியவற்றினூடாக மக்களை நெறிப்படுத்துதல், யாழ்ப்பாண மக்கள் திருவிழாக் கலாசாரத்தில் ஊறியவர்கள் என்பதை நாடிபிடித்து அறிந்து அவ்வழியில் அவர்களை அணுகும் வழி சாலச் சிறந்தது. இவ்விருவகைச் செயற்பாடுகளிலும் அவ்வப்போது அடியேன் உடனிருந்து அவதானிக்கமுடிந்தது எனக்குத் திருப்தியையும் மன நிறைவையும் தருவதாக அமைகிறது.

பூஜ்ய குருதேவரின் நூற்றாண்டு விழாவும், அதனையொட்டி வெளிவரும் மலரும் சின்மயா மிஷனின் பணிகளுக்குச் சிகரம் அமைத்தாற் போல் அமைவதுடன் நமக்கெல்லாம் உற்சாகம் தருவதாக உள்ளது. மலர் வெளியீடும், விழாவும் சிறந்தோங்கவும் நம்மவரின் ஆன்மீக நலம் மேம்பாடடையவும் குருதேவர் பாதங்களைப் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகின்றேன்.

**ப.சிவானந்த சர்மா**
**(கோப்பாய் சிவம்)**




உ
சிவமயம்
ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலயம்
(சோலையம்மன்)
ශ්‍රී ඉලන්චියාරණියම් මණ්ඩුවිල් අම්මන් කෝවිල්
(සෝලෛයම්මන්)
SRI ILLANCHIYARANIYAM MANDUVIL AMMAN KOVIL
(Solaiyamman)
Reg.No. HA/JA/5/312
Temple Priest: Sivasri K. Thanapathy Kurukkal
WWW SOLAIAMMAN KOVIL.COM
Fax:- 021 227 0892
T.P:- 021 688 8366
T.P:- 077 436 8494
T.P:- 021 300 7050
TRUSTEE:
Chief Priest & Seretary
Sivasri K. Kirupanantha Kurukkal
Tressurer:-
Sri K. K. Yoganathan
Manduvil,
Chavakachcheri North,
Meesalai.


# நூற்றாண்டு விழாவினைக் காணும் சின்மயா மிஷன் இந்து ஆச்சிரமம்



கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன்தோன்றி மூத்த சமயம் இந்து சமயமாகும். அது போன்றே தமிழ்மொழியும் உலகின் மூத்த மொழியென்பதில் எதுவித ஐயமும் இல்லை. எமது சைவசமயத்தில் காலத்திற்குக் காலம் ஞானிகளும், ரிஷிகளும், சித்தர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றி மக்களின் அறிவுப் பசியைப் போக்கி ஆற்றுப்படுத்தியுள்ளனர். இந்து என்ற பெயர் ஆங்கிலேயர்களால் இடப்பட்டதாகும். சிந்து நதி, இந்து நதியென ஆற்றுக்கு இடப்பட்ட நாமம் இறுதியில் எமது சைவசமயத்திற்கே உரியதாகியது. வேதங்கள், ஆகமங்கள், ஸ்மிருதிகள், சித்தர் பாடல்கள், திருமுறைகள், புராணங்கள், இதிகாசங்கள் எனப் பலவகையானதான ஞானப் பொக்கிஷங்கள் எம் முன்னோரால் எமக்கு அளிக்கப்பட்ட முதுசச் சொத்தாக விளங்குகின்றன. இவைகள் அனைத்தும் அவ் அக்கால மொழி நடையிலேயே பாடல்களாக வும் மணிப் பிரவாள நடையிலும் உள்ளன. இவற்றைப் படித்துப் பகுத்தறிவதற்குப் பிரத்தியேகமான மொழியறிவு அவசியமானதாகும்.

இவ்வாறான ஆன்மீக அறிவு சார்ந்த கருத்துக்களைத் தெளிவான விளங்கக் கூடிய மொழிநடையில் எமக்கு வழங்குவதன் பொருட்டு பல மடங்களும், ஆதீனங்களும், ஆச்சிரமங்களும் பல ஞானியர்களால் ஸ்தாபிக்கப்பட்டுப் பாரம்பரியமாக ஆன்மீக சேவையை மக்கட்கு வழங்கி வந்துள்ளனர். இந்தவகையில் பலபல ஆச்சிரமங்கள் இருப்பினும் "இராமகிருஷ்ண மிஷன்" "சின்மயா மிஷன்" என்ற ஆச்சிரமங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். இவைகள் இந்தியாவில் தமது தலைமை நிலையத்தையும் உலகின் பல பாகங்களிலும் தமது கிளை நிலையங்களையும் கொண்டு ஆன்மீக சேவையை மக்கட்கு வழங்கி வருகின்றன.

இந்தவகையில் கடந்த 1916ல் அவதரித்த சின்மயானந்தர் என்னும் மகானால் ஸதாபிக்கப்பட்ட இந்து ஆச்சிரமமே இன்று உலகின் பல பாகங்களிலும் கிளை நிலையங்களாகக் கொண்டு பெரு விருட்சமாக வளர்ந்து மக்கள் சேவையை ஆற்றி வருகின்றது. "சின்மயா மிஷன்" ஆச்சிரமத்தினர்

ஆன்மீக தாகம் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கட்குப் போதிய பயிற்சிகளை வழங்கி அவர்கள் மூலம்" மக்கள் சேவையே மகேசன் சேவை" எனத் தியானம், யோகம், சிட்சை, உபந்நியாசம் எனப்பல வழிகளிலும் நல்ல சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றனர். அறிவைப் பயன்படுத்திப் புலன்களைக் கட்டுப்படுத்தி, வாழ்க்கை முறையைச் சீர்செய்ய மாட்டாதவர்கள் இன்னும் மிருகங்கள் போன்றே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்கட்கு உதாரணமாக அமேசன் நதிக்கரைக் காட்டு வாசிமக்களைக் கொள்ளலாம்.

இவ்வாறு மனங்களைப் பக்குவப்படுத்தி மக்களின் வாழ்க்கை முறையைச் சீரான பாதையில் செல்ல வைப்பதன் பொருட்டு தியானம், யோகப்பயிற்சி, புராண இதிகாச வரலாற்று உபந்நியாசங்களினூடாக மகத்தான சேவையைச் செய்து வரும் "சின்மயா மிஷன்" அதன் நிறுவுனரான பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களின் பிறந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு யாம் மிகவும் பெருமைப்படுவதுடன், அவர்கள் சேவை தற்கால சமூக கலாச்சாரப் பிறள்வுக்கு மிகவும் அவசியமான தாகவும் காலத்தின் கட்டாயத் தேவையாகவும் உள்ளதெனின் மிகையல்ல தெனவும் கூறுவதுடன், குறித்த ஆன்மிக சேவைகள் தொடர்ந்து மக்கட்குக் கிட்டவேண்டு மெனவும் இவற்றினூடாக மக்கள் நலம் பெற்று எதிர்காலத்தில் தபீட்சமாக வாழவும் வேண்டி எல்லாம் வல்ல இறையருளைப் பணிந்து வணங்கிப், பாராட்டி வாழ்த்தி ஆசிகூறி அமைகின்றோம்.

"ஸர்வ ஜனகா சுகினோபவந்து"

சுபம்

**சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள்**

உ
சிவமயம்

அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை
All Ceylon Saiva Gurumar Archakar Society
Reg. No.: HA/4/J/123
T. P. No.:
திருநெல்வேலி, யாழ்ப்பாணம், இலங்கை.
Thirunelvely, Jaffna, Sri Lanka.

14.05.2016

# சின்மயானந்த சுவாமிகளின் நூற்றாண்டு



## ஜெயந்தி விழாவிற்கான

## ஆசிச் செய்தி

சனாதன தர்மத்தை இவ்வுலகில் நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு பரம்பொருளான சிவபெருமானின் பரிபூரண கருணையோடு 1916ம் ஆண்டு இந்தியாவின் கேரளா மாநிலத்தில் சுப ஜனனம் எடுத்து தனது இளமைப் பருவத்தில் லௌகீக வாழ்க்கையில் ஆற்ற வேண்டிய பணிகளுக் கான சமயப் பண்பாடுகள், ஆசார ஒழுக்கங்கள், கல்வி என்பவற்றை உரிய காலத்தில் கற்று உயர் நிலைக் கல்வியைப் பெற்று ஊடகத்துறை, பொருளாதாரத்துறை, சமூகத்துறை போன்ற துறைகளில் தன்னை இணைத்துக் கொண்டார். இவரின் ஜனனத்தின் நோக்கம் கைகூட வேண்டிய காலம் கனிய ரிஷிகேசத்தில் அருளாட்சி புரியும் இறைவனின் திருவருள் கைகூட அங்கு சென்று வழிபட்டதன் பயனாக ஆன்மீகத்துறையில் அதிக ஆர்வம் கொண்டவராய் 1949 ம் ஆண்டு சிவராத்திரி நாளில் சுவாமி சிவானந்தரின் சீடனாகி சன்னியாச தீட்சை பெற்று அன்றிலிருந்து பாலகிருஷ்ணமேனன் என்ற லௌகீக பெயரை மாற்றி "சின்மயானந்தா" என்ற திருநாமத்தைப் பெற்றார். 1953ம் ஆண்டு சுவாமிகள் "சின்மயா மிஷன்" என்ற ஓர் ஆன்மீக அமைப்பை சென்னையில் நிறுவி ஆன்மீக சேவை, சமூக சேவை என்பவற் றின் மூலமாக பல கிளைகளை உலகம் முழுவதும் ஆரம்பிப்பதற்கு காரணகர்த்தாவாக விளங்கி இன்று 40 நாடுகளில் 400 இற்கும் மேற்பட்ட சின்மயா மிஷன் கிளை நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இலங்கையிலும் 1979 ம் ஆண்டு சின்மயா மிஷன் தோற்றம் பெற்று தற்போது கொழும்பு, நம்பொட, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய ஆறு இடங்களில் ஆறு ஆச்சாரியர்கள் பணியாற்றி வருகின்றமை கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது. மிஷன் செயற்பாடுகள் சனாதன தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு உலகம் முழுவதும் வேதாந்த ஞானத்தை மக்களிடையே கொண்டு செல்லுதல், சிறியோர் முதல் பெரியோர் வரை பயன்பெறும் வகையில் பல ஆன்மீக சமூக செயற்பாடாக பாலவிஹார், சின்மய யுவகேந்திரா, தேவியர் வட்டம், வாசகர் வட்டம் போன்ற பிரிவுகள் மூலம் வேதாந்த ஞானத்தையும் பகவத்கீதையின் தத்துவத்தையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்லுதல் அளப்பெரிய ஓர் செயற்பாடு ஆகும். அத்துடன் சமூகப் பணியிலும் மிஷனின் செயற்பாடு பலவாறாக விரிந்து காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இப்படியான பல சமய சமூகப் பணிகளை சிறப்பாக செய்து வருவதை நாம் அறியக் கூடியதாகவுள்ளது. இப்பணிகள் எதிர்காலத்திலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது அவசியமாக

வுள்ளது. இத்தகைய நல்ல பணிகளை மேற்கொள்கின்ற சின்மயா மிஷன் மேலும் வளர்ச்சி பெற்று சமய சமூகப் பணிகளை செவ்வனேயாற்ற இறைவனைப் பிரார்த்தித்து நல்லாசிகளை வழங்குகின்றோம்.

அத்தோடு சைவக் குருமார்களோடு இணைந்து எதிர்காலத்தில் ஆலயங்கள் மூலமாக நல்ல பிரஜைகளை உருவாக்குவதற்கு இணைந்து செயல்படுதல் இக்காலத்தில் மிக மிக முக்கியமானது. ஆகவே அப்பணியில் நாமும், முழுமையாக இணைந்து செயற்பட திடசங்கல்பம் கொண்டுள்ளோம்.

சுபம்

**சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக்குருக்கள்**
**செயலாளர்.**

# துன்பங்கள் தரும் பலம்

சந்தனமானது அதனை அரைக்கும் போது தான் அதன் நறுமனம் வெளிப்படுகின்றது.

துளசியானது கசக்கிப் பிழியப்படும் போது தான் அதன் சுயமான சுகந்தத்தின் இன்பம் வெளிப்படுகின்றது

சித்திரங்கள் செதுக்கப்பட்ட பித்தளை தகடானது நன்றாக உரோஞ்சி தேய்த்து அதன் கழிம்புகள் (ஒக்சைட்டுகள்) அகற்றப்படும் போது மட்டுமே அதில் வரையப்பட்ட சித்திரம் ஒளிர்கின்றது.

ஆபத்தான நிலைகளில் வதைக்கப்பட்டு, நொருக்கப்பட்ட நிலையிலேயே அன்பின் பலம் சோதிக்கப்படுகின்றது. துன்பங்கள், கஷ்டங்கள், ஏற்படும் போது மட்டும் தான் உண்மை நட்பு உறுதிப்படுத்தப்படுகின்றது.

சின்மயாவின் பெருமை விமர்சனப் புயல்களால் சூழ்ந்திருக்கும் போதே விளங்கியது சுவாமி அவற்றை எல்லாம் வெற்றி கொண்டார். அவற்றால் அவர் மேலும் உயர்வடைந்தார். இற்றைவரை போட்டியற்ற மகிமை என்னும் சேற்றிலும் மதிநுட்பமில்லாத மதிப்பீடுகளிலும் ஓங்கி அடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார். இவை இவை ஜனங்களை எனது சேவையில் என்னை கவனிக்க வைத்துள்ளது எல்லாம் நாராயணனின் கிருபை.

சுவாமி சின்மயானந்தர்



# யாழ்ப்பாணத்தில்
# சின்மயா மிஷன்

ௐ

# யாழ் சின்மயா மிஷனின் வளர்ச்சிப் பாதையில்

வடமாகாணம், குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதி மக்கள் 30 வருடங்கள் போர் மேகத்தால் சூழப்பட்டிருந்து 2009ஆம் ஆண்டு அதி உச்சக் கட்டத்தைச் சந்தித்து, அதன்பின்பு சற்று ஆறி இருந்தாலும், அக்காலத்தில் பெற்ற அனுபவங்களின் தாக்கங்கள் மற்றும் விபரீதங்களின் விளைவுகளில் இருந்து மீள முடியாமல் தவித்துக்கொண்டிருந்த மக்களை இந்திய நாகபட்டினம் சின்மயா மிஷன் சுவாமி இராமகிருஷ்ணானந்தா அவர்கள் இலங்கைக்கு வருகைதந்து நேரில் சென்று சந்தித்து அவர்களுடன் அளவளாவி ஆற்றுப்படுத்தினார். இதன்போது தான் பெற்ற அனுபவங்களை சின்மயாமிஷனின் உலகளாவிய தலைவர் பூஜ்ய குருஜி தேஜோமயானந்தர் அவர்களுடன் பகிர்ந்து வடமாகாணத்துக்கு நிரந்தரமாக வதிவிட ஆச்சார்யார் இருந்து பணிசெய்தால் நன்று என்பதை தெரிவித்தார்.

இதன் பிரகாரம் குருஜி அவர்கள் ரம்பொடவில் பணியாற்றிக் கொண்டிருந்த பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்களை யாழ்ப்பாணத்தில் வதிவிட ஆச்சாரியாராகப் பணியாற்றுமாறு பணித்தார். இப் பணிப்பை ஏற்று பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்கள் 2011ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாண வதிவிட ஆச்சாரியராக தனது பணியை ஆரம்பித்தார். அக்காலத்தில் யாழ் மாவட்டத்தில் வெவ்வேறு இடங்களில் தங்கியிருந்து தனது பணிகளை மேற்கொண்டார். 2011 பெப்ரவரி 16ஆம் திகதி அளவெட்டியில் தற்போது ஆச்சிரமம் அமைந்திருக்கும் இடத்தில் முதன் முதல் வாசகர் வட்ட வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து சைவ மகாசபையுடன் இணைந்து பல இடங்களில் அறநெறிப்பாடசாலைகள் ஆரம் பித்து வைக்கப்பட்டன. இக்காலத்தில் சின்மயா மிஷனின் சேவைப்பிரிவான சின்மய கிராமிய அபிவிருத்திப் பிரிவும் (CORD) தனது பணிகளைச் செய்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆச்சார்யார் அவர்கள் கல்வித் திணைக்களத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி, வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் பணியாற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்குக் கருத்தரங்குகளை நடாத்தினார்.

இக்காலத்தில் யாழ்ப்பாணத்துடன் வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா ஆகிய இடங்களுக்கும் சென்று கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. போரினால் பாதிக்கப்பட்டு நொந்திருந்த பலரை சந்தித்து ஆறுதலளிக்கவும் வாய்ப்புக்கள் கிட்டின.

இக்காலத்தில் ஆச்சாரியாரின் பணிகளை அறிந்த காரைநகர் வாரிவளவுப் பிள்ளையார் ஆலய நிர்வாகம் அவ் ஆலய மஹோற்சவ காலத்தில் தொடர் ஆன்மிக அருளுரை வழங்க அழைத்தனர். அதனை ஏற்று 10 நாட்கள் அங்கு தங்கியிருந்து அருளுரை வழங்கினார்.

2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நல்லூர் உற்சவகாலத்தில், சின்மயா மிஷன் சேலத்தைச் சேர்ந்த சுவாமி கிருஷ்ணாத்மானந்தா அவர்கள் யாழ் வருகை தந்து, நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் தொடர்ச்சியாக ஒருவாரம் ஆன்மிக அருளுரை வழங்கினார். அத்துடன் ஆச்சார்யார் ஜாக்ரத சைதன்யா அவர்களும் அருளுரை ஆற்றினார்.

2011 டிசம்பர் மாதத்தில் பூஜ்ய குருஜி சுவாமி தேஜோமயானந்தா அவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார்கள். யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் 'அமைதியற்ற உலகில் சாந்தி' (PEACE IN RESTLESS WORLD) என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் உரையாற்றினார். அவற்றை யாழ் வதிவிட ஆச்சார்யார் அவர்கள் தமிழாக்கம் செய்து வைத்தார்.

அப்பொழுது யாழ் சின்மயா மிஷன் தற்பொழுது அமைந்திருக்கும் இடம் ஆச்சிரம பாவனைக்கு வழங்கப்பட உள்ளதாக இருந்ததால் பூஜ்ய குருஜி அவர்கள் அவ்விடத்தில் விளக்கேற்றிவைத்து ஆசீர்வதித்தார். அதனைத் தொடர்ந்து சின்மயா மிஷனின் பணிகள் இவ்விடத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

முதல் நிகழ்வாக பெப்ரவரி மாதம் மகா சிவராத்திரி நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. மார்ச் மாதத்தில் தமிழ்நாட்டில் இருந்து சின்மயாமிஷன் சுவாமி சிவயோகானந்தா அவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார். நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் தொடர்ந்து நான்கு நாட்கள் 'திருமந்திரம்' விளக்கவுரை வழங்கினார்.

2011 ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி முதல் ஆச்சிரமத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பகவத்கீதை விளக்கவுரை வகுப்பு நடைபெற்று வருகின்றது. அதன் பின் குழந்தைகளுக்கான 'பாலவிஹார்' வகுப்பு, இளைஞர் யுவதிகளுக்கான 'சின்மய யுவகேந்திரா' வகுப்பு, வயது வந்தோருக் கான வாசகர் வட்ட வகுப்பு வேதாந்த வகுப்பு ஆகிய வகுப்புக்கள் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டன. இவ்வகுப்புக்களில் பகவத் கீதையுடன் தத்வபோதம் பஜகோவிந்தம், உபதேசசாரம், விவேகசூடாமணி மற்றும் வாழ்க்கை முறை ஆகிய நூல்களின் உரைகள் உப தேசிக்கப்பட்டன. மேலும் தொடர்கின்றன. அளவெட்டி, கொக்குவில் ஆகிய இடங்களிலும் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

தொடர்ந்து சின்மய பாலவிஹார் சின்மய யுவகேந்திரா அணிகளுக்கான வதிவிடப் பயிற்சி முகாம்கள், வருடந்தோறும் நடைபெற்று வருகின்றன. அத்துடன் முதியோருக்கான ஈஸாவாஸ்ய உபநிடத வதிவிடப் பயிற்சிமுகாம் ரம்பொடவில் நடைபெற்றது. இக்காலப்பகுதியில் இரு தடவைகள் ரம்பொட நுவரெலியா, சிவனொளிபாதம், கண்டி, மாத்தளை, திருகோணமலை ஆகிய இடங்களுக்கு அடியார் களுடன் ஆன்மிகச் சுற்றுலா சென்றுவந்தனர்.

2013ஆம் ஆண்டு முதல் நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு இந்துவாக வாழ்வோம் எனும் தலைப்பில் 6அம்சங்களை உள்ளடக்கிய செயற்றிட்டம் நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் மகேஸ்வரன் மணிமண்டபத்தில் ஆன்மிக அருளுரை, நல்லூர் ஆலயத்தில் பஜனை நிகழ்வு, மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கண்காட்சி, வலம்புரிப் பத்திரிகை அனுசரணையுடன் ஆன்மிக வினா விடைப்போட்டி, கந்த புராணபடனம், வீடியோப் படக்காட்சி என்பன அடங்கும்.

அத்துடன் 2013ஆம் ஆண்டு "சின்மயநாதம்" காலாண்டு சஞ்சிகையின் முதலாவது இதழ் வெளியீடும் இடம்பெற்றது. தற்போது 'சின்மயநாதம்' மூன்று ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. தொடர்ந்து 2014, 2015ஆம் ஆண்டுகளிலும் சில சில மாற்றங்கள் செய்யப்பட்டுப் புதிய பரிணாமங்களில் இந்துவாக வாழ்வோம் செயற்பாடுகள் இடம்பெற்றன. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் பலவகையிலும் இந்து மதத்தின் பாரம்பரிய செயற்பாடுகளையும் அவற்றின் சிறப்புக்களையும் அறியக் கூடியதாய் இருந்தது. மேலும் இத்திட்டங்கள் தொடர பூஜ்ய குருதேவரின் ஆசிகள் கிடைப்பதாக.

2014ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருவருட வேதாந்தப் பயிற்சியை முடித்து பிரம்மச்சரிய தீட்சைபெற்று வந்த பிரம்மச்சாரி சிவேந்திர சைதன்யா அவர்கள் யாழ் சின்மயா மிஷனில் இணைந்து சேவையாற்றினார். இக்காலத்தில் வன்னி மக்களின் தேவையையும் யாழ்ப்பாணத்தில் இருந்தே இடைக்கிடை சென்று கவனித்து வந்தனர். 2015ஜனவரியில் இருந்து பிரம்மச்சாரி சிவேந்திர சைதன்யா அவர்கள் கிளிநொச்சியில் தங்கியிருந்து தனது பணிகளைச் செய்ய ஆரம்பித்தார்.

மேலும் மிஷனின் செயற்பாடுகள் அதிகரிக்க ஆச்சார்யாரின் பணிகளும் அதிகரிக்கத் தொடங்கியது. 2014ஆம் ஆண்டு ஆச்சிரமத்தில் புதிய மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு பெப்ரவரி 7ஆம் திகதி திறப்பு விழா நடைபெற்றது.இவ்விழாவுக்கு ஆசி வழங்கிய பூஜ்ய குருஜி அவர்கள் இந் நிலையத்திற்கு 'சின்மய ஞானவேல்" எனப் பெயர் சூட்டி வாழ்த்தியுள்ளார். இதன்போது இலங்கையில் பணியாற்றும் ஆச்சார்யார்களுடன் இந்தியா சேலம் மாவட்ட சின்மயா மிஷன் சுவாமி கிருஷ்ணாத்மானந்தாஜி அவர்களும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்ததுடன் அடியார்களுக்கு ஆசிவழங்கி மகிழ்வித்தார். தொடர்ந்து சுவாமி கிருஷ்ணாத்மானந்தாஜி 4 நாட்கள் ஞானயக்ஞம் (பகவத் கீதையின் 14ஆம் அத்தியாயம்) 'அன்பின் ஆற்றல்' என்னும் பெயரில் நடாத்தினார். தினமும் பல நூற்றுக்கணக்கான அடியார்கள் கலந்து பயன்பெற்றனர்.

2014ஆண்டு மே மாதத்தில் ஆச்சார்யர் பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா யாழ் அவர்கள் அடியார்கள் 30பேரை அழைத்துக்கொண்டு வட இந்தியத் தலயாத்திரை சென்றுவந்தார். இதன்போது இமயத்தில் சுவாமி தபோவன் மகராஜ் வாழ்ந்த உத்தரகாசி, சுவாமி சிவானந்தர் அவர்களின் ஆச்சிரமம், அமைந்திருக்கும் ரிஷிகேஷ், குரு தேவரின் சமாதி அமைந்துள்ள சித்தபாடி குருதேவரின் மகிமையைக் குறிக்கும் சின்மய விபூதி ஆச்சிரமம் ஆகிய பல மிஷன் நிலையங்களையும் காசி, அயோத்தி, கோகுலம் போன்ற புண்யஷேத்திரங்களையும் தரிசித்து வந்தனர்.

2014, 2015களில் ஆச்சாரியாரின் பணிகள் பலவகையில் அதிகரித்து வந்தன கல்வித் திணைக் களம் ஆச்சாரியரை அழைத்து ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளை நடாத்துகின்றது. யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை மற்றும் மருத்துவத்துறைகள் ஆச்சார்யார் அவர்களை வருகை விரிவுரையாளராக அழைத்து மாணவர்களுக்கு அவர்களது ஆளுமையை விருத்தி செய்யக்கூடிய பாடங் களை விரிவுரை செய்யும் சந்தர்ப்பங்களை வழங்கி வருகின்றது. மற்றும் யாழ் மாவட்ட சர்வமதப் பேரவையில் செயலாளராக அங்கம் வகித்து பணியாற்றும் சந்தர்ப்பமும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆலய உற்சவங்கள் கட்டடத்திறப்பு விழாக்கள் பொது நிலையங்களில் நடைபெறும். விழாக்களில் ஆசியுரை, அருளுரை என அநேக நிகழ்வுகளில் சின்மயா மிஷன் பங்கெடுத்துக் கொள்கின்றது. மேலும் பாடசாலைகள் மற்றும் கல்வி நிலையங்களிலும் மாணவச் செல்வங்களை வழி நடாத்துவதற்கான அறிவுரைகள் வழங்கும். சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன. தற்போது ஓர் இந்து மதத்துறவியரின் பங்களிப்பு என்ற ரீதியில் யாழ் மாவட்டச் செயலகம், யாழ் மாநகரசபை மற்றும் அரசு சார் நிறுவனங்கள் தமது முக்கிய கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்து வருகின்றன.

அடுத்து இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் அநேக மனித இதயங்கள் நசுக்கப்பட்டு நொருக்கப்பட்டு சிதைவுற்ற நிலையில் ஆச்சார்யாரை அணுகி ஆலோசனை பெற்று, ஆன்மிக பலத்தால் அவற்றைத் தீர்க்கும் வழிகளைப்பெற்று வருகின்றனர்.

இவ்விதம் அநேக பணிகளில் ஈடுபட்டுவரும் ஆச்சார்யார் அவர்களுக்கு 2016ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து சில வெளிநாட்டு நிறுவனங்களால் மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை உருவாக்குதல், நாட்டில் சமாதான நடவடிக்கையை முன்னெடுத்தல் போன்ற செயற்பாடுகள் குறித்த தொடர் கருத்தமர்வுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு ஆச்சார்யார் அவர்கள் இவற்றில் பங்குகொள்ளு முகமாக ஒஸ்ரியா, தாய்லாந்து, மியன்மார் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்துள்ளார்.


**பணிகள் சிறக்க குருதேவர் ஆசீர்வதிக்கட்டும்.**

ஓம் ஸ்ரீ சின்மய சற்குரவே நமஹ

# "இந்துவாக வாழ்வோம்" நிகழ்வுகள்



நல்லூர் ஆலய
பஜனையில்
பங்குபற்றியோர்



சின்மய நாதம்
முதலாவது
இதழ் வெளியீடு



திருப்புகழ் இறுவெட்டு
வெளியீடு



ஆன்மிக வினாவிடைப்
போட்டியில்
பங்குபற்றிய மாணவர்கள்

## “இந்துவாக வாழ்வோம்” எனும் மாண்புமிகு செயற்றிட்டம்




2013 ஆரம்ப நிகழ்வு
முகப்புத் தோற்றம்



2013 ஆரம்ப நிகழ்வில்...



2014 கண்காட்சியில்



2015 கண்காட்சியில்

## அறநெறியைப் புகட்டுவதற்கு அளவெட்டியில் ஆரம்பம்
## சிறப்பான முறையிலே "சின்மயா மிஷன்" வகுப்புக்கள்




சின்மயா மிஷன்
ஆச்சிரமம்
அளவெட்டியில்



ஆச்சார்யாரை
வரவேற்றல்



பூஜையில் ஆச்சார்யார்



ஆரம்ப வகுப்பில்


## புனிதமான நிகழ்வு பூஜ்ய குருஜி வருகை
## சத்சங்கம், சாதனை பற்பல போதனை






யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில்

புனிதமான நிகழ்வு பூஜ்ய குருஜி வருகை
சத்சங்கம், சாதனை பற்பல போதனை






நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில்

நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் "திருமந்திரம்" உபதேசம்
செய்யும் சிவயோகானந்தா சுவாமிகள்






அளவெட்டி ஆச்சிரமத்தில்

## ஆன்மிக சுற்றுலாவின் போது



டன்சினன் நீர்வீழ்ச்சியில்



மக்வூட் தேயிலைத் தொழிற்சாலையில்

## யாத்திரைகள் தரிசனங்கள் யாவருமாய் சென்ற வேளை




சின்மய பிறந்த நூற்றாண்டு
ஆரம்ப நிகழ்வில்...




கலந்து கொண்டோர்



காசி யாத்திரையின் போது கங்கைக் கரையில்

## கிருஷ்ணாத்மானந்தா சுவாமிகள் விஜயமும் பணியும்





அளவெட்டியில்

# கட்டிடத் திறப்பு விழாவின் கவினுறு காட்சிகள்



விநாயகர் ஹோம
நிகழ்வில்

பாதுகை எடுத்து வரல்





கட்டிடத்திறப்பு விழா
வைபவம்

பங்குபற்றியோர்



# யாழ் சின்மயா மிஷன் பணிகள் அளவெட்டியில் ஆரம்பம்

ஆனைமுகன் ஆசியோடும் கலைவாணி கருணையோடும் குருவருளும் திருவருளும் குறைவின்றிக் கூடி நிற்க அழகாக வளர்ந்து வரும் அளவெட்டி சின்மயா மிஷனின் வரலாற்றை வார்த்தைகளில் வடிவமைக்கும் தருணமிது

யாழ்ப்பாண நன்னகரில் வலிவடக்கு நிலப்பரப்பில் ஈராயிரத்துப் பதினொன்றில் மகிழ்வான மாசி தனில் பக்குவமாய்ப் பதின்மூன்றில் சிறப்பாக மலர்ந்து அறியாமை இருள் நீக்கி அறிவினை ஒளிரச் செய்து சிந்தனையைத் தூண்டி ப்ரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஸ்வாமிகளின் வழிகாட்டலில் சிறப்பாக இயங்கி வருகிறது இந்த சின்மயா மிஷன். திங்கட்கிழமை தோறும் வாசகர் வட்ட வகுப்புக்கள் இடம் பெறுகின்றன. இங்கு பெரியவர்கள், இளைஞர்கள் பொறுப்பாக வந்தமர்ந்து ஆன்மீக கல்வி கற்று வருகின்றனர். தருமம், ப்ரம்மம் எனும் தத்துவத்தைப் போதிக்கும் குருதேவரின் பாதுகைகளுக்கு பூஜை கிரமமாய் வியாழன் தோறும் செய்து பிரார்த்தனை, பாராயணம் செய்து, குரு பூர்ணிமா, ஜன்ம தினம், விசேடதினம் என்பவற்றிலும் குறைவின்றி ஒன்று கூடி அனுஷ்டித்து ஆசி பெற்று நிற்கும் இந்த அளவெட்டி சின்மயா மிஷனுக்கு பூஜ்யஸ்வாமி க்ருஷ்ணாத்மானந்தாஜி சுவாமி ராமக்ருஷ்ணானந்தாஜி சுவாமி சிவயோகானந்தாஜி சுவாமி சர்வேஸ்வரானந்தாஜி மற்றும் ப்ரம்மச்சாரி கூடஸ்த சைதன்யா ஆகியயோர் வருகை தந்து சத்சங்கம் புரிந்து சென்றனர். இராமகிருஷ்ண மிஷன் துறவிகளும் வருகை தந்து ஆசீர்வதித்துள்ளனர். இலங்கை சின்மயா மிஷனின் வதிவிட ஆச்சாரியார்கள் அனைவரும் வருகை தந்து சத்சங்கம் புரிந்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் சின்மயா மிஷனின் முதலாவது வாகர் வட்ட வகுப்பு 2011.02.16இல் ஆரம்பிக்கப்பட்டது அளவெட்டியிலே ஆகும். சின்மயா மிஷனின் ஆன்மீக ஒளியில் அளவெட்டி கிராமம் குதூகலிக்கிறது. இக்கிராமத்தின் ஆன்மீக பின்னணி ஈண்டு சின்மயா மிஷனின் அமைவுக்கு அடித்தளமாய் இருந்தது எனலாம். 7ம் நூற்றாண்டில் கீரிமலையில் நீராடி குதிரை முகம் நீங்கப்பெற்று அழகிய மனித முகம் உருவான இளவரசி மாருதப்புரவீகவல்லி இறைவனுக்கு நன்றிக்கடனாக ஸ்தாபித்த ஏழு விநாயகர் ஆலயங்களில் நான்கை (வகுத்தலை, அழகொல்லை, கும்பழாவளை, பெருமான் கடவை ஆகிய இடங்களில்) அளவெட்டியில் நிறுவினார். மேலும், சூட்சுமமான ஆன்மிக ஞானங்களை அனுபவித்து வெளியிட்ட மௌன தவ முனி கைலாசபதி அவர்களைத் தோற்றுவித்து ஆன்ம ஞானம் பரப்பியதும் தவத்திரு யோகர் சுவாமிகளின் முக்கிய சீடரான அமெரிக்கர் சுவாமி சுப்ரமுனியர் ஆச்சிரமம் அமைத்ததும் இவ் அளவெட்டி கிரமத்திலேயே ஆகும். இத்தகைய பல சிறப்புக்களைக் கொண்ட அளவையூரில் சின்மயா மிஷன் ஆன்ம ஞானத்தைப் பரப்பி வேரூன்றி வருவதில் வியப்பொன்றுமில்லை.

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் அருளுரைகளை 1979இல் கண்டியில் செவிமடுக்கும் பாக்கியம் பெற்ற மடந்தை யசோதையின் (தற்போது திருமதி.ஸ்ரீஸ்கந்தராஜா)

சிந்தனையில் கருக்கட்டி வளர்ந்த சின்மயா மிஷன் எனும் குழந்தை 13.02.2011 அன்று அவரது அளவெட்டி இல்லத்தில் பிரசவமாகி அன்றிலிருந்து மெய்யடியார்கள் திருவளர் நாகராசா ஞான சௌந்தரி தம்பதியினரின் அர்ப்பணிப்புடனான அரவணைப்பில் சீர்சிறப்புடன் அருளொளி பரப்பி வருவது அளவையூர் மக்களின் தவப்பேறே எனலாம்.

# பிரம்ம யக்ஞம்

பஞ்ச யக்ஞங்களில் ஒன்றாகிய 'பிரம்ம யக்ஞம்' உயர்ந்த யக்ஞமாகக் கருதப்படுகிறது பிரம்மத்தை (கடவுளை)ப் பற்றிய அறிவை ஏனையவர்களுக்கு வழங்குதல், அதற்கு முன் தான் அதனை அனுபவ ரீதியாக உணர்தல் என்பன பிரம்ம யக்ஞம் ஆகும்.

எமது சனாதன தர்மத்தின் நூல்களை, சாஸ்த்திரங்களை முறைப்படி கற்றறிந்து அதன்படி வாழ்ந்து அந்த அறிவை, அனுபவத்தை, அடுத்த தலைமுறைக்கு சரியாக வழங்குதல் பிரம்ம யக்ஞம். சாஸ்திரங்கள் செவி வழியாகப் பேணப்பட்டு வந்தன. பின்னர் ஏடுகளாக, நூல்களாக, இன்று இலத்திரனியல் வடிவங்களாகப் பேணப்படுகின்றமை பெருமைக்குரிய விடயம். கருத்து மாற்றம் இல்லாமல் உண்மையை உணர்ந்து வடிவங் களை மாற்றக்கூடியவர்கள் இன்றைய காலத்தில் மிகக்குறைவு

எனவே இவற்றை உணர்ந்தவர்கள் இவற்றைப் பாதுகாக்கும் பணியை புனித யக்ஞமாக ஏற்று நடத்த வேண்டும். அதுவும் பிரம்ம யக்ஞமே.

# சமயப் பெரியார்களின்
# வாழ்த்துக்கள்



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka
T.P. No : 021-3213151
திகதி.................................

# செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை



உலகம் அமைதிபெற இறைவனால் பல மகான்கள் மண்ணில் தோற்றம் பெறுகின்றார்கள். இறையியல்பை ஆற்றுப்படுத்தி இரக்கமுள்ள சமுதாயத்தை வளர்த்தெடுப்பதற்கு அவர்கள் அயராது உழைக்கின்றார்கள். அறியாமை இருளைப் போக்குவதற்காக அவர்களின் திரகரண சுத்தியால் பல காரியங்களை அடியவர்கள் வாயிலாக நிறைவேற்றுகிறார்கள். அவ்வகையில் உலகப் புகழ் பெற்ற ஆத்ம ஞானி சுவாமி சின்மயானந்தரின் சீரிய **ஞானப்பணி** போற்று தலுக்குரியது. இம் மகானின் ஜனன நூற்றாண்டு குறித்து உலகம் முழுவதும் கொண்டாட இருப்பது பெருமைக்குரிய விடயமாகும். எங்கள் மண்ணிலும் நல்லூர் புண்ணிய பூமியில் சுவாமி சின்மயானந்தரின் நாமத்தால் உருவாகியுள்ள சின்மயா மிஷன் நூற்றாண்டு விழா குறித்து பயனுள்ள காரியங்கள் செய்ய முன் வந்துள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

**"கடவுள் நமக்கு உடம்பைக் கொடுத்தார். அதில் உள்ளத்தையும் கொடுத்தார் இரண்டுமே நமக்குப் பிறவியில் கிடைத்த சாதனங்கள் தான். ஆனால் அவற்றை வைத்துக்கொண்டு நம்மை நாமே எவ்வாறு வழி நடத்துகிறோம். சுய நலத்துக்காக எமது முயற்சி அமையுமானால் தீய எண்ணங்களையே வளர்த் துக் கொள்வோம். அதுவே பொதுநலத்துக்காக அமையும் போது நல்ல எண்ணமாகி நன்மை உண்டா கிறது. இப்படி முயற்சியை திசை திருப்பிக் கொள்ளும், நோக்கத்தை மாற்றி அமைத்துக் கொள்ளும் திறமை நம்மிடம் தான் இருக்கிறது. அதை வளர்த்து, நாம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."**

சுவாமி சின்மயானந்தர்.

மேற்குறித்த சுவாமிகள் கருத்து அற்புதமானது. சுவாமிகளின் இத்தகைய உயர் சிந்தனைகளை பரப்புவதற்காக பற்று அற்ற பிரம்மச்சாரிகள் பலர் தோன்றி சின்மயா மிஷனை பல இடங்களிலும் உருவாக்கி மக்களை ஆற்றுப்படுத்தி வருகின்றார்கள். அவ்வகையில் நல்லூரில் தோற்றம் பெற்றுள்ள சின்மயா மிஷன் அளப்பெரிய ஆன்மீக சேவையைச் செய்து வருவது பெருமைக்குரிய விடயமாகும். சுவாமி சின்மயானந்தரின் உண்மையான குறிக்கோளை நெறிப்படுத்துவதற்கு சுவாமி ஜாக்ரத சைதன்யா அவர்கள் அயராது உழைத்து வருகிறார்கள். குறிப்பாக பச்சிளம் பாலகர்களை ஆற்றுப்படுத் தும் பணி மெச்சத்தக்க பணியாக பலரும் போற்றுகிறார்கள். நல்லூர் கந்தன் உற்சவகாலத்தில் திரு வீதியில் அவரைச் சூழ்ந்து பாலகர்கள் பஜனையாடிவரும் காட்சி எதிர்கால நம்பிக்கையைத் தருகிறது

வளரும் பயிர்களை வாழ்விக்கும் பணிகள் மிக நன்மை தரும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய சூழலில் சின்மயா மிஷன் மக்களை ஆற்றுப்படுத்துவதற்கு மேலும் தம் பணிகளை விஸ்தரிக்க வேண்டும்.

* ஆன்மிக இளைஞர் மகாநாடுகளை நடாத்தி அவர்களை வழிநடத்தல்.
* பாடசாலைகளில் ஆன்மீக நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
* பல்கலைக்கழக மாணவர்களை ஆன்மீக நிகழ்ச்சிகளில் பங்கேற்க வழி செய்தல்.
* வைத்தியசாலைகளில் நோயுற்றுள்ளவர்களுக்கு ஆறுதல் வார்த்தையும், அவர்களுக்கான பிரார்த்தனை நெறிமுறையை வளர்த்தல்.
* மதுபானச் சாலைகளை இயக்கும் தொழிலதிபர்களை அன்பாக நாடி அவர்களின் தொழில் முயற்சியை சமூக நன்மை தரும் தொழில் முயற்சிக்கு மாற்றுதல். இதனால் மதுச் சாலைகள் பல மூட வழிசெய்தல்.
* சிறைக் கூடங்களுக்குச் சென்று அங்குள்ள நடத்தைப் பிறள்வுடைய சமூகத்தை ஆன்மிக ரீதியில் மாற்றியமைத்தல்.
* பொதுமக்கள் தத்தம் கிராமங்களின் அழகை தூய்மையை பேணுவதற்கு திட்டங்களை உருவாக்கி ஊர்தோறும் அழகையும் தூய்மையையும் வளர்க்க வழி செய்தல்.
* போரினால் பாதிக்கப்பட்டுள்ள இளைய தலைமுறையை ஆற்றுப்படுத்தல் அவர்களின் எதிர்கால வாழ்வுக்கான வழிகளை உருவாக்குதல்.
* ஆதரவற்ற சிறுவர்களின் இல்லங்கள் முதியோர் இல்லங்களில் வாழும் ஆத்மாக்களை ஆற்றுப்படுத்தல்.
* தொழிலதிபர்களை ஆறற்றுப்படுத்தி பலர் பணி செய்யக் கூடிய புதிய தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல்.

மேற்குறித்த சமூக நலப் பணிகளை சின்மயா மிஷன் தமது பணிகளில் இணைத்துக் கொள்ள வேண்டும் என எனது சிந்தையில் எழுந்த கருத்துக்களைச் சமர்ப்பித்து சின்மயா மிஷனின் பணி மேலும் சிறக்க இறையருளை வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு. திருமுகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**

# பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர்



ஒவ்வொருவருடைய வாழ்விலும் சம்பவங்கள் அவரவர் சித்தத்திற்கு அப்பால் எதிர்பாராது நடைபெறும். அதையிட்டு பலர் கருத்தில் கொள்ளாது வாழ் கின்றனர். என்னைப் பொறுத்தவரை அவ்வாறான சம்பவங்கள் இறைவனின் அருளால் நடைபெறுகின்றது என்பதை அவ்வப்பொழுது எனக்குள் மீட்டுப் பார்த்து இறைவனுக்கு நன்றி தெரிவிப்பேன்.

சின்மயா மிஷனைப் பொறுத்தவரை கொழும்பில் மிஷனுக்கான புதிய கட்டிட அமைப்பிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் சில வருடங்களுக்கு முன் நடந்த வேளை நான் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் அன்று எனக்கும் சுவாமி சின்மயானந்தர் அவர்களின் அமைப்பிற்கும் நீண்டதோர் உறவும் தொடர்பும் வளரவுள்ளதை உணரவில்லை.

திருக்கோணமலை எனது வாழ்விடமாதலால் அங்கு மிஷன் தொண்டிற்காக நியமிக்கப் பட்டிருந்த பிரம்மச்சாரிணி மஹிமா சைதன்யா அவர்களுடன் நானாக என்னையும் நான் சார்ந்த சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம் எனும் அமைப்பைப் பற்றி சுய அறிமுகம் செய்து உறவை ஏற்படுத்திக் கொண்டேன்.

இந் நிலையில் யாழ்ப்பாணத்தில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்களையும் பிரம்மச்சாரி சிவேந்திர சைதன்யா அவர்களையும் சந்தித்து உறவை ஏற்படுத்தி அவர்கள் தொண்டில் எமது நிறுவனமும் எமது தொண்டில் அவர்களும், அவர்கள் அமைப்பும் இணைந்து செயற்பட ஆரம்பித்தோம். அந்த உறவு பிரம்மச்சாரி சிவேந்திர சைதன்யா அவர்கள் கிளிநொச்சியில் இருந்து தொண்டாற்றுவதால் அந்த மாவட்டத்தில் அவருடனும் இணைந்து தொண்டாற்றி வருகின்றோம். இந்த உறவின் மூலமாக கண்டியிலிருந்து தொண்டாற்றும் பிரம்மச்சாரி கார்த்திக் சைதன்யாவுடனும் இணைந்து தொண்டாற்றி வருகின்றோம்.

எமது ஒருங்கிணைந்த செயற்பாட்டின் மூலமாக அன்பர் சு.சிவபாலன் என்பவருக்கும் எமக்குமிடையில் உறவு ஏற்பட்டது. அவர் ஒரு நாள் நான் படித்து பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில் சில பலனுள்ள நூல்களை என்னிடம் ஒப்படைத்தார். அதில் ஒரு நூல் "HE DID IT" (அதை அவர் செய்தார்) எனும் தலைப்பைக் கொண்ட சுவாமி சின்மயானந்தரின் வாழ்க்கைச் சரித்திரத்தைக் கொண்ட மிகவும் ஆக்கமும் ஊக்கமும் ஏற்படுத்தும் அற்புதமான நூலாகும். கருத்தூன்றி அந் நூலைப் படித்தேன். வழமைபோல் எனக்கும் ஏனையவர்களுக்கும் போதனையாக அமையக்கூடிய பக்கங்களை அந்த நூலின் பின்புறத்திலேயே பக்கங்களைக் குறித்துக் கொண்டேன். நான் வெளியிடவுள்ள "அன்ப யோகக் கலை" என்னும், எனது நூலில் சுவாமி சின்மயானந்தரின் அழகிய திருஉருவத்தையும் பதித்து அவரின் ஓர் போதனையையும் பதித்துள்ளேன். அவர் பற்றிய அந்த நூல்

ஆங்கில மொழியில் இருப்பதனால் அந்த மொழி தெரியாதவர்களுக்கு அந்த நூல் பயன்படாது. எனது பணிவான ஆலோசனை அனைத்து மனிதர்களும் அந்த நூலைப் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதாகும்.

சங்கிலித் தொடரான இந்த உறவிற்கும் செயற்பாட்டிற்கும் சுவாமி ஜாக்ர்த சைதன்யா அவர்களின் ஒத்துழைக்கும் மனோபாவமே காரணமாகும். தூய சமய சமூகத் தொண்டுகளில் நாம் தொடர்ந்து சின்மயா மிஷனின் சேவைத் திட்டங்களில் இணையக்கூடிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் இணைந்து தொண்டாற்ற சித்தமாயுள்ளோம்.

குருதேவரின் பிறந்த நுற்றாண்டுக் கொண்டாட்டத்தை ஆவணப்படுத்தும் நோக்குடன் வெளியிடப்பட வுள்ள மலருக்கு எமது எண்ணத்தைப் பதிவு செய்ய வாய்ப்புக் கிடைத்ததையிட்டு எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

"நன்றே செய்வோம், அதை இன்றே செய்வோம்"
ஓம் சாந்தி.

**இ.கலியுகவரதன்**
**நிறுவனரும், குருவும், தலைவரும்**
**சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம்.**

## சின்மய யுவகேந்திராவின் "நம்மால் முடியும்" வதிவிட முகாமில்





## உயிர் காக்க உதிரத்தை உவந்தளிக்கும் வேளையில்





அன்பே சிவம்


# அகில இலங்கை சைவமகாசபை
## ALL CEYLON SAIVA MAHA SABAI

(பதிவிலக்கம் HA/4/JA/318)

கல்லூரி வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.



இணையத்தளம்: www.saivamahasabai.blogspot.com தொலைபேசி: 021 320 3284 மின்னஞ்சல்: saivamahasabai@gmail.com


# சின்மயா மிஷனுடன் சைவ மகா சபையின் அனுபவ பகிர்வு

நூற்றாண்டை நிறைவு செய்து உலகம் பூராகவும் இந்துமதச் சிந்தனைகளை விதைத்தும் அறப் பணிகளை ஆற்றியும் வரும் இந்து மத துறவியர் பீடமான சின்மயா மிஷனுடைய பணிகளை இத் தருணத்திலே வாழ்த்துவதில் அகில இலங்கை சைவ மகா சபை பேருவகை அடைகின்றது.

கடந்த 5 வருடங்களாக சிவபூமி எனப்படும் இலங்கையின் வட புலத்திலே சின்மயா மிஷனுடன் எமது சைவ மகா சபை பல தொண்டு செயற்றிட்டங்களிலே குறிப்பாக அறநெறிப் பாடசாலைகளை வலுவூட்டுதல், இளைஞர்களிடையே தொண்டுள்ளத்தை வளர்க்கும் வகையில் சிவதொண்டர், சிவமங்கையர்களை உருவாக்குவதல், ஆலய மிருகபலியை ஒழித்தல் போன்ற பல பணிகளில் இணைந்து செயற்பட்டு வருகின்றது. இச் செயற்பாடுகளிற்கு சின்மயா மிஷனுடைய வடபுலத்தின் இளந் துறவிகளான சுவாமி ஜாக்ரத சைதன்யா, சுவாமி சிவேந்திர சைதன்யா ஆகியோர் சீரிய ஆன்மீகத் தலைமைத்துவத்தை வழங்கி வருகின்றனர்.

கிராமங்களிலே இளைய தலைமுறையினரிடையே ஆன்மீக நல்லொழுக்கங்களை பாடசாலைகள், ஆலயங்கள் ஊடாக முன்னெடுப்பதிலும் மூத்தோர்களிற்கான ஆன்மீக நிகழ்ச்சிச் செயற்றிட்டங்கள் ஊடாக உள ஆற்றுப்படுத்துகையை மேற்கொள்வதிலும் குறுகிய காலத்தில் வடமாகாணத்திலே சின்மயா மிஷன் வியத்தகு பணியை ஆற்றியிருக்கின்றது. நல்லூர் கந்தன் உற்சவ காலப் பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவினுடைய சிறந்த வழிகாட்டலிலே சின்மயா மிஷனானது ஏனைய சைவ அமைப்புக்களை, அன்பர்கள், மற்றும் கல்விச் சமூகம் ஆகியோரை இணைத்து மேற்கொண்டு வரும் கண்காட்சியும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வும் எமது சமயத்தின் உன்னத அழகை படம் பிடித்து காட்டுவதோடு பலரை சமய, சமூகப் பணிகளுடன் ஈர்த்தும் வருகின்றமை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டத்தக்கது.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற சைவ சமயத்தின் சமய குரவரான தொண்டுத் துறவி திருநாவுக்கரசரின் வாக்குப் போன்று ஆன்மீக புரட்சிகர சிந்தனையாளர் துறவி சின்மயானந்தரால் தொண்டுக்காகவும் இந்து மதத்தின் சிந்தனைகளை கட்டமைப்பு ரீதியாக இளைய துறவிகளினூடாக வேகமாக முன்னெடுக்க வேண்டுமென்ற பேரவாவுடன் உருவாக்கப்பட்ட சின்மயா மிஷன் தன்னுடைய நோக்கத்தை செவ்வனே உலகெங்கும் முன்னெடுத்து வருவது போல எம் தாய் திருநாட்டிலும் செயற்படுத்தி வருவதற்கு அதனுடைய துறவிகள், செயல்வீரர்கள் அனைவருக்கும் ஈழும் வாழ் சைவத் தமிழ் இந்துக்கள் சார்பாக அகில இலங்கை சைவ மகா சபை மனமார்ந்த நன்றியையும் போற்றுதற்குரிய நூற்றாண்டுப் பணிகள் தொடர்ந்தும் அடுத்த நூற்றாண்டிலும் சிறப்புற வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றது.

அன்பே சிவம்

**அகில இலங்கை சைவ மகா சபை**

# சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் சின்மய சங்கம நிகழ்வுகள்



2011 தைப்பொங்கல் நிகழ்வில்



2013 தீபாவளி சங்கம நிகழ்வில்




2013 தீபாவளி சங்கம நிகழ்வில்

என்றும் புன்னகை எம்மால் முடியும் என்று சிறுவர்கள், குழந்தைகட்கு எடுத்துரைத்த வேளையில்









# சின்மய அணிகள்

ஓம்

# பாலவிஹார் – இன்றைய தேவையும் சின்மய பாலவிஹார் செயற்பாடுகளும்

விஞ்ஞானத்தின் விந்தைகள் விண்ணைத் தொட்டுக் கொண்டிருக்கும் இந்தப் பூவுலகில் நாம் எதையோ தேடி அவசர அவசரமாக ஓடிக்கொண்டிருக்கின்றோம். நாம் எதற்காக எதனைத் தேடி ஓடிக்கொண்டிருக்கின்றோம் என்பது விடை தெரியாத வினாவாக எம் முன்னே வந்து நிற்கின்றது. காலவோட்டத்தில் குடும்ப உறவுகள் கட்டமைப்புக்கள் சிதைவடைந்து மனித விழுமியங்களும் கலை கலாசாரங்களும் மூட நம்பிக்கைகளாகவும் கேள்விக் குறிகளாகவும் காட்சிப்படுத்தப்படுகின்ற இன்றைய காலத்தில் பண்டைய மரபுகளா அல்லது இன்றைய நவீன விஞ்ஞானத்தின் விந்தைகளா மகிழ்ச்சியான வாழ்விற்கு வழி வகுக்கும் என்ற வாதப் பிரதி வாதங்கள் மத்தியில் இன்றைய சிறுவர்கள் பற்றி நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இரண்டரை வயதில் முன்பள்ளி என்ற பெயரில் ஆரம்பிக்கின்ற கல்விச் செயற்பாடானது கணனி வகுப்புகள், பேச்சு ஆங்கிலம், இசை வகுப்புக்கள், நடன வகுப்புக்கள் பிரத்தியேக வகுப்புக்கள் என்று போட்டி போட்டுக் கொண்டு ஓட்டம் எடுக்கின்றன. துள்ளித் திரிந்து இயல்பாக தாத்தா, பாட்டி, அத்தை, மாமா என உறவுகளோடு இயல்பாக கற்க வேண்டியவற்றை குழந்தை மிக்க மன அழுத்தங்களோடு கற்க ஆரம்பிக்கின்றது.

கல்விக் கூடங்களும் தனியார் கல்வி நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு வெறுமனே இயந்திரமயமானதும் வாழ்வாதாரத்திற்கான தொழிலிற்கும் சமூக அந்தஸ்திற்குமான கல்வியை வழங்குவதில் முண்டியடிக்கின்றன. பொருளாதார அடிப்படையான உலகத்தில் நிறுவனக் கல்வியில் முதன்மையாக வருவதே பெரிதாகத் கணிக்கப்படுகிறது. தேர்வுகளும் பட்டங்களும் நல்ல எழுதப் படிக்கத் தெரிந்தவனை உருவாக்கலாம் ஆனால் மகிழ்ச்சியான ஒரு மனிதனை உருவாக்குவதே கல்வி ஆகும்.

பாடசாலைகளில் விழுமியப் பண்புகளை வளர்க்கும் சமய பாடத்திற்கான முக்கியத்துவம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. ஏனைய பாடங்களிற்கு கொடுக்கும் முக்கியத்துவம் சமய பாடத்திற்கு வழங்கப்படுவதில்லை. உடலிற்குக் கொடுக்கும் முக்கியத்துவம் மனத்திற்குக் கொடுக்கப்படுவதில்லை. அவர்களின் சிந்தனை, செயல் வேகத்திற்கு ஈடுகொடுக்கக் கூடிய விதத்தில் அவர்களுடைய களம் அமைவதில்லை. இதனாலேயே இன்றைய சிறார்கள் மத்தியில் முரண்பாடான சிந்தனைகள் தோன்றி மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றார்கள். குழந்தைகள் அன்பு, பாசம், அரவணைப்பு என்பவற்றின் மத்தியில் இயல்பாக கற்றுக் கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. எமது கூட்டுக் குடும்ப அமைப்பு சிதைவடைந்ததன் காரணமாக பெற்றோர் தமது பிள்ளைகளுடன் நேரத்தை செலவிட முடிவதில்லை அவர்களை இலகுவாக சமாளிப்பதற்காக தொலைக்காட்சி, கணனி, தொடுகணனி போன்றவற்றுடன் விட்டு விட்டு தமது வேலைகளிற்குச் சென்று விடுகிறார்கள். இதனால் குழந்தைகள் இயந்திரத் தனமாக வளர்வது தவிர்க்க முடியாததாகின்றது.

"வாழ்க்கையில் ஏற்படும் நல்லவைகளையும் தீயவைகளையும் தாங்கிக் கொள்ள நன்கு தயாரிக்கப் பட்டவனே ஒரு நல்ல படித்தமனிதன்" - ரூஸோ

எங்களுடைய ரிஷிகளும் இதையே கூறினர்.

நம்முள்ளே உள்ள தெய்வத் தன்மையையோ

முழுத் திறமையையோ வெளிக் கொணருவது தான்கல்வி

- சுவாமி விவேகானந்தர்

இந்த நோக்கில் ஆன்மீக உள்வலிமையும் மனச்சமநிலையும் பெறும் கல்வியே இன்றைய தேவை. "இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்" அவர்களிடையே சிறந்த தலைமைத்துவம் உயர்ந்த விழுமியங்களைப் பேணும்தன்மை, தூரநோக்கு, சவால்களை எதிர்கொள்ளல், கலை கலாசாரங்களை மதிக்கும் தன்மை, நாட்டுப்பற்று போன்ற இன்னோரன்ன உயர்ந்த பண்புகளை வளர்க்க வேண்டியது மிகவும் அவசியமானதும் அவசரமானதுமாகும்.

இதனைக் கருத்திற்கொண்டு இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் தோன்றிய சுவாமி சின்மயானந்தரின் தூர நோக்கில் தோன்றியதே சின்மயா இயக்கமும் அதன் பிரிவாகிய சின்மய பால விஹாரும் ஆகும். இதனூடாக சின்னஞ்சிறு பிஞ்சுகளின் உள்ளங்களில் ஆன்மிக விழுமியங்களின் வித்துக்கள் விதைக்கப்பட்டு அவற்றின் மலர்ச்சிக்குத் தேவையான சூழல் உருவாக்கப்படுகிறது. இதன் மூலம் ஒவ்வொரு தனி மனிதனிடமும் உலகளாவிய அன்பு, சகோதரத்துவம், சாந்தி, அமைதி பேரின்பம், பூரணத்துவம் என்பவற்றைத் தோற்றுவிக்க முடியும் என்பதே 'குருதேவர்' என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுகின்ற பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் ஆழுந்த நம்பிக்கை ஆகும்.

"பிள்ளைகள் நிரப்பப்பட வேண்டிய பாத்திரங்கள் அல்ல

ஒளியேற்றப்பட வேண்டிய விளக்குகள்"

- சுவாமி சின்மயானந்தர்

அந்தவகையில் சின்மயா மிஷன் 2011ம் ஆண்டு ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் தனது பணிகளை ஆரம்பித்தது. 2012ம் ஆண்டு யூன் மாதம் அதன் பிரிவாகிய சின்மய பாலவிஹார் ஆரம்பிக்கப்பட்டு ஆச்சாரியாரினால் வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. பின்னர் 2014 ஏப்ரலில் இருந்து இன்று வரை ஆச்சாரியாரின் வழிகாட்டலின் கீழ் நன்கு பயிற்றப்பட்ட சேவகர்களினால் காலை 9.00 மணியில் இருந்து 10.30 வரை வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. மாணவர்கள் இயல்பாக விழுமியப்பண்பு களை வளர்த்துக் கொள்ளக் கூடிய விதத்தில் குழுச்செயற்பாடு, கலந்துரையாடல், கதைகள், விளை யாட்டுக்கள், நாடகங்கள் கலை நிகழ்வுகள், பஜனை, வீடியோ காட்சிகள், விவாதம் போன்ற சொற்பாடுகள் ஊடாக மாணவர்கள் வழிநடாத்தப்படுகின்றார்கள்.

இவற்றை விட வருடந்தோறும் சிறுவர்களுக்கான ஆன்மிக முகாம்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றன. பாலவிஹார் சிறுவர்கள் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகால பஜனை நிகழ்வுகளிலும் பங்கு பற்றி தமது ஆன்மிக அகவலிமையை அதிகரித்துக் கொள்கின்றார்கள். சுவாமி சின்மயானந்தரின் தூர நோக்கில் தோன்றிய சின்மயாமிஷன் ஆனது இன்றைய கால கட்டத்தில் சிறுவர் களை நல்ல மனிதர்களாக உருவாக்க களம் அமைத்துக் கொடுக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

# சின்மய யுவகேந்திரா அணியும் அதன் சீரிய செயற்பாடுகளும்

"சின்மய யுவகேந்திராவினா் எமது நம்பிக்கை நட்சத்திரங்களாகவே உள்ளனா். இளைஞா் களை மறுமலர்ச்சித் திட்டங்களால் துடிப்புள்ளவர்களாகவும் தெளிந்த சிந்தனையுடையவர்களாகவும் சிறந்த பண்பாளர்களாகவும் பயனுள்ள நற்பிரஜைகளாகவும் ஆக்குவதே சின்மய யுவகேந்திரா அமைக்கப்பட்டதன் நோக்கமாகும்."

-பூஜ்ய குருதேவா் சுவாமி சின்மயானந்தர்

"இளைஞர்கள் உபயோகமற்றவர்கள் அல்ல.
அவா்கள் குறைவாகவே உபயோகப்படுத்தபடுகின்றனா்"

-பூஜ்ய குருதேவா் சுவாமி சின்மயானந்தர்

'சின்மய யுவகேந்திரா' என்பது உலகளாவிய ரீதியாக சின்மயா மிஷனின் இளைஞா் படையணி ஆகும். இது "இளைஞா்களின் ஆற்றலை ஆன்மிக வழியில் ஆக்க பூர்வமாக வழிநடத்துதல்" என்ற கொள்கையுடன் இயங்கி வருகின்றது. மேலும் இது இளைஞர்களை அனைத்துத் துறைகளிலும் தூர நோக்குடனும் சீலங்களுடனும் செயற்பட்டு வெற்றி பெறச் செய்யும் ஒன்றாகும்.

சிறப்பானதோர் எதிா்காலத்தை நோக்கி நடைபோடும் இன்றைய இளைஞர்களின் கடந்த காலத்தின் தவறுகளை திருத்துவதுடன் மட்டும் நின்று விடாது, சுபீட்சமும் சிறப்பும் மிக்கதோர் எதிா் காலத்தை உருவாக்குவதற்கு நிகழ்காலத்தில் தீவிரமாக உழைக்க வழிகாட்டுவதும் சின்மய யுவகேந்திராவாகும்.

இளைஞர்கள் எங்கும் எப்போதும் ஆச்சரியமூட்டும் உற்சாகத்தை இயல்பாகவே கொண்டிருக் கின்றனர். அவர்களுக்கு தீவிரமாக பாடுபடுவதற்கான சக்தியும் மனவுறுதியும் இருக்கின்றன. சிறப்பான சிந்தனைகளும் அவர்களிடம் காணப்படுகின்றன. இயக்கம் இன்றி சிந்தனைகள் செயல் வடிவம் பெறா. உற்சாகம் உடைய இளைஞர்களது தீவிர முயற்சியினாலேயே சமூதாயத்தில் சிந்தனைகள் செயல் வடிவம் பெறுகின்றன. எதிர்காலத்துக்கு வேண்டிய தொலை நோக்கிற்கு இளைஞர்களே பொறுப்பாக இருக்கின்றனா். இவ்வாறாக இளைஞர்களை ஓர் உயர்ந்த இலட்சியத்தினை நோக்கி வழி நடத்தவும் அவா்கள் தமது வாழ்வில் வரும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் புன்னகையுடன் முகம் கொடுக்கவும் சின்மய யுவகேந்திரா உதவுகின்றது.

இவ்வகையில இவ் இளைஞா்களுக்காக சின்மயா மிஷனால் வாரந்தோறும் நடாத்தப்படும் வகுப்புகளில் அவா்கள் ஆன்மீகப் பனுவல்களைக் கற்பதன் மூலம் தம்முள் உறங்கியிருக்கும் தகைமைகள் திறமைகள் என்பவற்றை இனங்கண்டு வளர்த்துக் கொள்கின்றனா்.

சின்மய யுவகேந்திரா என்னும் பிரிவிற்கான அத்திவாரம் 1975ம் ஆண்டிலேயே இடப்பட்டது. அதாவது இவ் ஆண்டு பெங்களூரில் சின்மயா மிஷனால் ஒழுங்கு செய்யப்பட்ட Week Long Teenagers என்னும் தொனிப்பொருளில் குருதேவரினால் (சின்மயானந்தரினால்) ஆற்றப்பட்ட கீதை ஞானயக்ஞத்தில் 17வயது தொடக்கம் 25 வயதுப் பிரிவினர் 60பேர் பங்கு பற்றியிருந்தார்கள் இதில் பங்குபற்றிய இளைஞர்களை மையமாக வைத்து ஆரம்பிக்கப்பட்ட இச் சின்மய யுவகேந்திரா என்னும் பிரிவு இன்று, தனிப்பட்ட ஆளுமை விருத்தி, வேறுபட்ட சமூக சேவைகள், ஒன்று இணைக்கப்பட்ட தலைமைத்துவம் ஆகிய காரணிகளின் அடிப்படையில் 40க்கு மேற்பட்ட நாடுகளில் 4 கண்டங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட இளவயதினரின் ஆளுமைகளை விருத்தி செய்யும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது.

சின்மய யுவேகந்திரா என்னும் பிரிவு, வயது அடிப்படையில் வரையறைக்குட்படுத்தப்படு கின்றனர். அவ்வகையில் 14 தொடக்கம் 28 வரையான இருபாலாரும் சின்மய யுவகேந்தரா என்பதற்குள் அடங்குவார்கள்.

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரினால் உருவாக்கப்பட்ட சின்மய யுவகேந்தரா பிரிவில் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெறும்.

1. கற்றல் வகுப்புக்கள் (Study classes)
2. வதிவிட முகாம்களும் பயிற்சிப்பட்டறைகளும் (Camps and workshops)
3. சமூக சேவைகளுக்கான செயற்றிட்டங்கள் (Social Service Projects)
4. கலை, கலாசாரம் (Cultural, Arts)
5. சஞ்சிகைகள் (CHYK Magazine)

இதன் அடிப்படையில் CHYK class என்பது மூன்று நிலைகளில் செயற்படுகின்றன. அதவாவது,

1. Junior CHYK 13 - 15 வயது
2. CHYK 16 - 24 வயது
3. Senior CHYK 25 - 30 வயது

ஒரு வாரத்தில் ஒரு மணித்தியாலம் கலந்துரையாடல் மூலம் இவ் வகுப்புக்கள் ஆச்சாரியரால் நடாத்தப்பட்டு வருகின்றன.

## யாழ்ப்பாணத்தில் சின்மயா யுவகேந்திராவின் செயற்பாடுகள்

இதனை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் சின்மய யுவகேந்திராவின் செயற்பாடு தொடர்பாக நோக்குவோம்.

இலங்கையில் வடமாகாணத்துக்கான மையமாக நல்லூரிலே சின்மயாமிஷன் 2012ம் ஆண்டு வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரதசைதன்யா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 2011ம் ஆண்டிலேயே மிஷனின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் 2012 இல் இருந்தே அதன்

நிலையான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் அடிப்படையிலேயே சின்மய யுவேகந்திராவின் செயற்பாடுகள் தொடர்பாக பின்வருமாறு நோக்குவோம்.

யாழ்ப்பாணத்தில் சின்மய யுவகேந்திராவிற்கான வகுப்புக்கள் அளவெட்டியில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கோண்டாவில், நல்லூர், போன்ற இடங்களில் ஆரம்பிக்கப் பட்டு இன்று வரை நடைபெற்று வருகின்றன. இவ் வகுப்பானது ஆச்சாரியாரின் உதவியுடன் கலந்துரை யாடல் முறைமையிலான ஒரு கற்றல் கற்பித்தலாக மேற்கொள்ளப்படுகின்றது. இதில் "அன்பின் ஆழங்கள்", "வாழ்க்கை எனும் விளையாட்டு" "நம்மால் முடியும்" "நான் சிந்தித்த வேளையில்" ஆகிய குருதேவர் மற்றும் குருஜியின் நூல்கள் இம்முறைமையில் கற்கப்பட்டு தற்பொழுது வாழ்க்கைச் சூத்திரங்கள் எனும் நூல் கற்பிக்கப்படுகின்றது.

மேலும் சின்மயா யுவகேந்திராவினால் வதிவிட முகாம்கள், பயிற்சிப்பட்டறைகள், கண்காட்சி, பஜனை நிகழ்வுகள் போன்றன நாடாத்தப்படுகின்றன. இதன் வகையில் 2012ம் ஆண்டில் இருந்து இன்று வரை பல வதிவிடமுகாம்கள் யுவகேந்திராவினால் வெற்றிகரமாக ஒழுங்கமைக்கப்பட்டு நாடாத்தப்பட்டன. இவை வருமாறு.

1. 2012ம் ஆண்டு சித்திரை மாதம் வாழ்க்கை என்னும் விளையாட்டு என்னும் தொனிப் பொருளில் கோண்டாவிலில் வதிவிடமுகாம் நாடாத்தப்பட்டது.
2. 2012ம் ஆண்டு மார்கழி மாதம் பாலவிஹார் சிறார்களுக்கான வதிவிட முகாம் 'நம்மால் முடியும்' என்னும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் நடாத்தப்பட்டது.
3. 2013ம் ஆண்டு மாசிமாதம் பாலவிஹார் சிறார்களுக்கான 'வாழ்க்கை எனும் விளை யாட்டு' என்னும் தொனிப்பொருளில் Stanley College இல் நடாத்தப்பட்டது.
4. 2013ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் யுவகேந்திராவிற்கான வதிவிடமுகாம் "நம்மால் முடியும்" என்னும் தொனிப்பொருளில் Stanely College இல் நாடாத்தப்பட்டது.
5. 2014 சித்திரை மாதம் பாலவிஹாருக்கான முகாம் 'என்றும் புன்னகை' என்னும் தொனிப்பொருளில் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்திலும், காரைநகர் வியாவில் ஐயனார் மகா வித்தியாலயத்திலும் வதிவிட முகமாக நடத்தப்பட்டன.
6. 2014 கார்த்திகை மாதம் சின்மய யுகேந்திரா விற்கான பயிற்சிப்பட்டறை Future Builder (Fb) என்னும் தொனிப்பொருளில் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் இடம்பெற்றது.

இதனை விட 2013ம் ஆண்டில் இருந்து நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தினை முன்னிட்டு சின்மய மிஷனால் நடாத்தப்பட்டு வரும் "இந்துவாக வாழ்வோம்" எனும் தொனிப்பொருளிலான செயற்திட்டத்திலும் யுவகேந்திராவின் பங்கு இன்றியமையாதது. குறிப்பாக இச் செயற்றிட்டங்களில் ஒன்றான கண்காட்சி முற்று முழுதாக யுவகேந்திராவினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது

மேலும் ஒவ்வொரு வருடமும் நடைபெறும் பூஜ்ய குருதேவரின் ஜெயந்தி தினம் மற்றும் யுவகேந்திராவிற்கான வதிவிட முகாமின் இறுதி தினத்தில் இடம்பெறும் இரத்தான நிகழ்வினை யுவகேந்திராவினரே ஒழுங்கு செய்வதுடன் இரத்த தானமும் செய்கின்றனர்.

பிரதி ஞாயிறு தோறும் காலை ஒன்பது மணி தொடக்கம் 10.30 மணி வரை இடம்பெறும் சிறுவர்களுக்கான பாலவிஹார் வகுப்புக்களில் பாலவிஹார் சேவக் ஆகவும் காலாண்டு சஞ்சிகையான சின்மய நாதத்தின் ஆசிரியர் குழாத்திலும் யுவகேந்திரவினா் பங்கு கொள்கின்றனா்.

மேலும் மஹா சிவராத்திரி, நவராத்திரி பூஜை மற்றும் தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி ஆகிய தினங்களுக்கான கொண்டாட்டங்களும் இடம்பெறும் சின்மய சங்கமம் என்பவற்றினையும் ஆச்சாரியாரின் வழிகாட்டலுடன் யுவகேந்திராவினரே சிறப்பாக ஒழுங்கமைத்து செயற்படுத்துகின்றனர்.

இவ்வாறாக இளைஞர்களை முழுமையான பரந்துபட்ட நோக்கத்தினையும், பெறுமானத் தினையும் கொண்டவர்களாக வலுப்படுத்துவதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் வாழ்க்கையை "எல்லாத்துறைகளையும் வெற்றிகரமாகக் கொண்டு செல்லுதல்" என்னும் சின்மய யுவகேந்திராவின் நோக்கத்திற்கு அமைவாக யாழ் சின்மய யுவகேந்தராவின் செயற்திட்டங்களும் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

# ஸ்வரத்திலின்று ஈஷ்வரனிடம்

ஈஷ்வரன் என்பது இறைவனை குறித்து நிற்கின்றது. இறைவனை அடைவதற்கு பல்வேறு மார்க்கங்களை சமயங்களும் தத்துவங்களும் கூறுகின்றன. மார்க்கங்கள் பலவாக இருப்பினும் அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. அந்த வகையில் இறைவனிடம் உள்ள அன்பு அதாவது பக்தி அனைத்திற்கும் அடிப்படையாக உள்ளது. இந்த அன்பு நெறியில் இறைவனை எந்நேரமும் நினைத்தும், இறைவனைப் புகழ்ந்து பாடியும் இறைவன் புகழைக் கேட்டும் இறை அன்பில் ஆழ்ந்து ஈடுபட்டு வழிபடவும் இசை உதவுகின்றது.

கீதம், வாத்தியம், நடனம், என்ற மூன்றினாலும் இறைவனை வழிபட வழிவகுத்ததன் மூலமாக ஆகமங்கள் கோவில்களில் இசை, நடனம், போன்ற கலைகள் வளர்வதற்கு வழி வகுததுள்ளன. கோவில் வழிபாட்டில் மங்கள வாத்தியங்களின் இசை முக்கியத்துவம் பெறுவதையும் நாம் காணலாம்.

இசை என்பது இறைவனை இசைவிப்பது. இறைவன் சாமகானப் பிரியன் என்பது வேதங்கள் கூறும் கருத்து. இராவணன் சாமகானத்தின் மூலம் இறை அருள் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இசை மூலம் இறைவனை வழிபடும் போது உள்ளம் இறைவனோடு ஒன்றி விடுகின்றது. புற உலக சூழலை மறந்து இறை அனுபவம் பெறப்படுகின்றது. இந்த நிலை மன அடக்கம், புலன் அடக்கத்திற்கு வழிவகுப்பதோடு கலை மூலம் இறை அனுபவத்தைப் பெறவைக்கின்றது. இங்கு ஏற்படும் மன ஒருமைப்பாட்டினால் ஆழ்தியானம் கிட்டுகின்றது.

> **"இசையானது எமக்குள்ளிருக்கும் ஆனந்தத்தையும், தெய்வீகத்தையும் வெளிக் கொணரக் கூடியது"**
>
> **"இசையை இரசிப்பது தியானத்திற்கு ஈடானது"**
>
> **"அமைதிக்கு அழகு சேர்ப்பது இசை"**

-சுவாமி சின்மயானந்தர்-

மேற்கூறப்பட்டுள்ள சுவாமி சின்மயானந்தரின் கூற்றுகளிற்கேற்ப இந்தியா மும்பாய் சின்மயா மிஷனில் 2003 ம் ஆண்டு குருஜியின் பிறந்த தினத்தன்று இசை ஆர்வலர்களினால் சின்மய ஸ்வராஞ்சலி எனும் இசைப்பிரிவு உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாண சின்மயா மிஷனில் 2012 பெப்ரவரியில் சின்மய ஸ்வராஞ்சலி அணி ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் சிறிது சிறிதாக வளர்ந்து வரும் சின்மய ஸ்வராஞ்சலி பல செயற்பாடுகளை வாரந்தமாகவும், வருடாந்தமாகவும் நிகழ்த்தி வருகின்றது. இவற்றுக்கும் மேலதிகமாக சில செயற்றிட்டங்களையும் நடாத்துகின்றது.

வாராந்த செயற்பாடுகளில் கீழ்வரும் சந்தர்ப்பங்களில்

1. பிரதி வெள்ளிக்கிழமைகளில் நல்லூர் முருகப் பெருமான் ஆலய முன்றலில் காலை, மாலை பூஜைகள் முடிவுற்றதும்.
2. பிரதி வியாழக்கிழமைகளில் மாலை வேளையில் சின்மயாமிஷன் ஆச்சிரமத்தில் பாதுகா பூஜை இடம் பெறும் போதும்
3. பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பாலவிஹார் வகுப்பு வேளையிலும் பஜனை பாடப்படுகின்றது. மேலும் பிரதி புதன்கிழமைகளில் சமஸ்கிருத ஸ்தோத்ர பாராயண வகுப்புக்களும் நடாத்தப்படுகின்றன.

வருடாந்த செயல்பாடுகளில் கீழ்வரும் நிகழ்வுகளிலும் பஜனை பாடப்படுகின்றது.

1. ஸ்ரீராம நவமி, ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி
2. நவராத்திரி தினங்கள்
3. சிவராத்திரி தினங்கள்
4. பாலவிஹார், யுவகேந்திரா முகாம்கள் இடம் பெறும் போதும் பஜனை நிகழ்த்தப்படுகின்றது.

## செயற்றிட்டங்களாக

வருடந்தோறும் ஆவணி மாதம் நல்லூர் முருகன் உற்சவகாலத்தில் முருகன் வீதியுலா வரும் போது பஜனை நிகழ்வை சின்மய ஸ்வராஞ்சலியினர் மேற்கொள்கின்றனர். இதில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பங்கு கொண்டு பக்தியில் திளைக்கின்றனர்.

இன்னிசை, பண்ணிசை விற்பன்னர்களை சின்மயா மிஷனிற்கு வரவழைத்து அருகிலுள்ள பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பயனடையும் வண்ணம் வகுப்புக்களை ஒழுங்குபடுத்தி செயல்படுத்தல்.

இவ்வாறு இசை மூலம், மக்களின் இறை உணர்வு மேலோங்க சின்மய ஸ்வராஞ்சலி அணியினரின் சேவை உதவுகின்றது.

# சின்மய ஸ்வராஞ்சலி அணியினரின் பஜனை நிகழ்வுகள்



நல்லூர் ஆலயத்தில்
நம் குழந்தைகள்



ராமபிரான் ஜென்ம தினம்
ரம்மியமாய் அனுஷ்டிப்பு



# சின்மய கோவில் வளாகத்தில்...



ரம்பொட ஸ்ரீ பக்த ஹனுமான் ஆலயம்



புதிதாக அமைக்கப்பட்ட
கட்டிடத்தொகுதி



புதிய கட்டிடத் திறப்பு
விழாவின் போது குருஜியுடன்
யாழ் சின்மய குடும்பத்தினர்

# துறைசார் பெரியார்களின் கருத்துக்கள்

Consul-General

## வாழ்த்துச் செய்தி

பூஜ்ய குருதேவர் சின்மயானந்த சுவாமிகளின் பிறந்த நூற்றாண்டு விழா உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருவதையொட்டி யாழ்ப்பாணத்தில் யாழ். சின்மயா மிஷன் நூற்றாண்டு விழா சிறப்பு மலரினை வெளியிடுவது சாலச்சிறந்தது.

பாலகிருஷ்ணமேனன் என்ற இயற்பெயருடன் இந்திய கேரள மாநிலத்தில் பிறந்த சின்மயானந்த சுவாமிகள் ரிஷிகேசம் சென்று சிவானந்த சுவாமிகளால் சந்நியாச தீட்ஷை பெற்று, தபோவன சுவாமிகள் அவர்களிடம் இந்து தத்துவத்தைப் பயின்று, உலகெங்கும் பல ஆச்சிரமங்களை அமைத்து சமயப்பணி ஆற்றினார். உலகெங்கும் பல பாடசாலைகளையும், மருத்துவமனைகளையும் ஆரம்பித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் செயற்பாடுகளை மேற்கொண்டார். குறிப்பாக கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக சின்மயா அமைப்பை உருவாக்கினார். இன்று உலகெங்கும் 350 மையங்கள் செயற்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்திலும் சின்மயா மிஷன் ஜாக்ரத சைதன்யா சுவாமிகளின் தலைமையில் மக்களுக்கான ஆன்மீக மற்றும் பண்பாடு, வேதாந்தம் போன்ற துறைகளில் மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் அரும்பணியாற்றி வருகின்றது.

யாழ். சின்மயா மிஷன் வெளிடும் நூற்றாண்டு விழா சிறப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். யாழ். சின்மயா மிஷன் பணி தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

(ஆ.நடராஜன்)

भारत का प्रधान कौंसलावास
१४ मारूथेड़ी लेन, नल्लूर, जाफना
दूरभाष संख्या : ००९४-२१-२२२०५०४/५०५
फैक्स संख्या : ००९४-२१-२२२०५०३/२२१९६७५
वेब : www.cgijaffna.org

Consulate General of India
14, Maruthady Lane, Nallur, Jaffna
Tel : 0094-21-2220504/505
Fax : 0094-21-2220503/2219675
Web : www.cgijaffna.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone: 021-222 2233, 021-222 2234

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.


මගේ අංකය / எனது எண் / My No.: GA/JF/VN/03

ඔබේ අංකය / உமது எண் / Your No.:

දිනය / திகதி / Date: 02-05-2016

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



சின்மயா மிஷன் ஸ்தாபகர் பூஜ்ய குரு தேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டினை முன்னிட்டு உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வரும் இவ்வேளை யாழ் சின்மயா மிஷன் சின்மயானந்தரின் நூற்றாண்டு விழா மலரினை நறுமணம் கமழ வெளியீடு செய்யும் இத்தருணத்தில் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மகான்கள் மரணமடைவதில்லை. அவர்களது பணிகள் வாயிலாக இன்னும் அவர்கள் மக்களிடத்தே வாழ்ந்து வருகின்றனர். இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகான்களுள் சிம்மக்குரல் சின்மயானந்தரும் ஒருவர். அவர் அரிய நூல்களை வெளியிட்டதுடன், அறிவு, நுட்பம், தீர்மானமான கொள்கைகள், பெருந்தன்மை, தன்னம்பிக்கை, என்பவற்றுடன் குருவினது ஆசிகளால் பல அரிய ஆன்மீக பணிகளை ஆற்றியவர். இமயத்திலுள்ள பல ஆலயங்களுக்கு யாத்திரை மேற்கொண்ட பெருமகனாவார்.

சின்மயானந்தர் ஆன்ம ஞானியாக, துறவியாக ஞானத்திற்கும், சீரிய ஒழுக்கத்திற்கும் உயர்ந்த பண்புகளுக்கும் அதிபதியாக விளங்கியவர். இவரது சமூகம் நோக்கிய அன்பு, பரிவு, இயற்கையுடன் ஒன்றிவிடும் ஆனந்த பரவச நிலை, தூய்மை, எளிமையான வாழ்வு, ஆழ்ந்த புலமை, பணிவு, ஆண்டவன் சிந்தனையால் பெற்ற பேரின்ப நிலை என்பவற்றால் ஆன்மீக சூழலை சமூகத்திற்கு வழங்கிய பெருமையாளர். ஆன்மீக வழியில் கற்றுக் கொண்டவற்றை சமூகத்திற்கு நீதி நெறியுடன் கூடிய வாழ்விற்குப் புத்துயிர் அளித்து மேம்படுத்த வேண்டும் என்ற மாபெரும் குறிக்கோள் சுவாமி சின்மயானந்தரின் சிந்தனை, செயல், சொல் அனைத்திலும் விளங்கின எனலாம்.

சின்மயா மிஷனின் "ஒரே குடும்பமாக ஒரே எண்ணத்துடன் செயலாற்றுங்கள்" என்னும் குறிக்கோளுடன் அன்புடனும் மரியாதையுடனும், ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டிருப்போம். நேர்மையாக வாழ்வோம், புத்திசாதுரியமான பாதையில் சமூகத்தை வழிநடத்தி கருணையும் நல்லாசியும் இந்த உலகில் பரவ வேண்டும் என்ற நோக்கோடு செயற்படும் அதேவேளை சின்மயா மிஷன் யாழ்ப்பாணத்திலும் தனது சிறப்பான பணியினை செயற்படுத்தி வருவதனை காணக்கூடியதாக உள்ளது. சின்மயா மிஷன் பணிகள் மேலும் தொடரவும் தனது பணிகளை செவ்வனே செய்ய வேண்டி வாழ்த்தி பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா மற்றும் சின்மயா மிஷன் சார்ந்த அனைவரையும் இந் நேரத்தில் பாராட்டி சிறப்பு மலர் மலர்ந்து நறுமணம் பரப்ப என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா.வேதநாயகன்**

ආණ්ඩුකාර කාර්යාලය
උතුරු පළාත
48,වන සංරක්ෂණ කාර්යාල පටුමග,
චුණ්ඩුකුලි, යාපනය

ஆளுநர் செயலகம்
வட மாகாணம்
48. காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

GOVERNOR'S SECRETARIAT
NORTHERN PROVINCE
48, Forest Office Lane,
Chundukkuli, Jaffna

செயலாளர் / ලේකම් / Secretary — 021-2220661
பொது / පොදු / General — 021-2220660
தொலைநகல் / ෆැක්ස් / Fax — 021-2220661

எனது இல: / මගේ අංකය: / My No: G/NPC/A4/SG/Msg/2016

திகதி / දිනය / Date: 18.05.2016

# கௌரவ ஆளுநர் அவர்களின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு வரவிருக்கும் 'சின்மயம்' பிறந்த நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். முதலில் இந்த வாழ்த்துச் செய்தி வழங்க எனக்கு சந்தர்ப்பத்தை வழங்கிய மலர்க் குழுவிற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் கருத்துக்கள் பாமர மக்களையும் சென்று சேரும் வகையில் மிக எளிமையானவை. இக் கருத்துக்களை மக்களுக்கு இவருடைய சிஷ்யர்கள் பல வழிகளில் சென்றடையச் செய்கின்றனர்.

குழந்தைகளிடையே இந்துமத தத்துவத்தினை மிக எளிமையாக அவர்களது வாழ்க்கையில் கைக்கொள்ளும்படி பயிற்றுவித்து விடுவதும் மிகவும் முக்கிய காலத்தின் பணியாகும். அத்தகைய பணியையும் சின்மயா மிஷன் திறம்பட ஆற்றி வருகின்றது. தற்போது இளம் சமூகத்தினரிடம் மத நல்லொழுக்கப் பண்புகள் அருகி வருகின்ற காலகட்டத்தில் இத்தகைய மலர் மூலம் இளம் சமூகத்தினரிடம் மத நல்லொழுக்கங்களை வளர்க்கக்கூடியதாக இருக்கும். அதற்கு இம் மலர் பெரிதும் துணை புரிகின்றது. எனது பாராட்டுக்கள்.

இத்தகைய பணியாற்றும் மலர் சிறப்பாக வெளிவரவும் அத்துடன் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு நடைபெறவிருக்கும் நிகழ்வுகள் இனிதே நடைபெறவும் வாழ்த்துகின்றேன்.

இ.இளங்கோவன்
ஆளுநரின் செயலாளர்
வட மாகாணம்

# வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி



பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் பிறந்த நூற்றாண்டினை கொண்டாடும் முகமாக யாழ் சின்மயா மிஷனால் வெளியிடப்படவுள்ள நூற்றாண்டு விழா மலருக்கு கல்வித்துறை சார்பாக எனது கருத்துக்களை வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

சுவாமி சின்மயானந்தர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சின்மயா மிஷன் உலகளாவிய ரீதியில் தனது ஆன்மீகப் பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றமை பாராட்டத்தக்கதாகும். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கல்விச் சமூகத்திற்காக சின்மயா மிஷனால் மேற்கொள்ளப்படும் பணிகள் தற்கால மாணவர் சமுதாயத்தக்கு மிக அவசியமான தொன்றாகும். அந்தவகையில் சின்மயா மிஷனால் முன்னெடுக்கப்படும் ஆன்மீகம் சார்ந்த பணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

ஆன்மீக சிந்தனை மற்றும் தலைமைத்துவ ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு ஆன்மீகம், தலைமைத்துவம் சார்ந்த சொற்பொழிவுகள் கருத்தரங்குகளை நடாத்துதல். மாணவர்களை ஆன்மீக வழிகளில் ஈடுபட வைக்கும் நோக்குடன் நல்லூர் முருகன் ஆலய திருவிழா காலங்களில் அவர்களை பஜனை செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல். அத்துடன் மாணவர்களின் ஆன்மீக சிந்தனைகளை வளர்ப்பதற்காக சமயப் போட்டிகளையும், பகவத்கீதைப் போட்டிகளையும் நடாத்தி பரிசில்கள் வழங்குவதன் மூலம் மாணவர்களை மேலும் ஊக்கப்படுத்தல். மாணவர்களை ஒழுக்க விழுமியம் கொண்டவர்களாக விளங்க வைக்கும் நோக்குடன் அறநெறிகளை வளர்க்கும் பாலவிஹார், யுவகேந்திரா வகுப்புக்கள் நடாத்துதல். ஆன்மீகச் சிந்தனைகள் அருகிச் செல்லும் இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான பணிகள் மாணவர்களுக்கு மிக அவசியமானதொன்றாகும். அந்த வகையில் இவ் ஆன்மீகப் பணிகளை மேற்கொண்டுவரும் சின்மயா மிஷனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதுடன் கல்விச் சமூகத்திற்காக வழங்கப்படும் இவர்களது ஆன்மீகப் பணிகள் மேலும் தொடர வேண்டுமெனவும் கேட்டு நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள மலர் சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களை யும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இ.இரவீந்திரன்**
**செயலாளர்,**
**வடமாகாண கல்வி,**
**பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை**
**மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.**

# சின்மயா மிஷனின் சமூக ஆன்மீகம்



ஆன்மீகம் என்பது சமூக அழகிலேயே அர்த்தமுழுமை காண்கிறது. இந்த அழகு வாழும் மனிதர்களின் மகிழ்ச்சியினால் வசமாகின்றது. ஆன்மீகத்தின் இந்த விரிந்த பொருளை நிதர்சனமாக்கும் பேரிலக்குடன் உலகளாவிய ஆன்மீக சமூக பணிகளால் நிறைந்து நிற்பவர் பூஜ்ய குருதேவா் சுவாமி சின்மயானந்தா் அவா்கள். தம் வாழ்வு முழுமையையும் மனித சமூகமேம்பாட்டுக்காய் அர்ப்பணித்த அவரின் பிறந்த நூற்றாண்டினைக் கொண்டாடும் இவ்வேளை பெறுமதியானது.

இளமைப்பருவமுதலாகவே சமூக உணர்திறனும் தேடலும் மிக்க அவரது வாழ்வின் தரிசனம் தனித்துவமானது. இலக்கியம். சமயம், இதழியல் ஆகிய துறைகளில் பல்கலைக்கழக புலமைசார் பட்டங்களுடன் அவரது எழுத்துக்கள் யாவும் நலிந்த வறிய மக்களின் வாழ்வு மேம்பாட்டினையே அவாவிநின்றன. சமூக, அரசியல் நீதிக்கான சொல்லும் செயலும் அவரது வாழ்வின் தடங்களாயின. சமூக நிறுவமைப்புக்களின் உண்மைத் தன்மை பற்றிய விமர்சன நோக்கு அவரது இலக்கானது. இத்தகைய உண்மை பற்றிய ஒரு தேடலின் போதே ரிஷி கேசத்தில் குருதேவர் சுவாமி சிவானந்தரின் தரிசனம் வாய்க்கப் பெற்றார்.

சின்மய-தூய அறிவு என்ற பொருள் பொதிந்த புதிய நாமத்துடன் சின்மயானந்த சரஸ்வதியான அவரின் ஆன்மீக பயணத்தின் அறுவடைதான் சின்மயா மிஷன் என்ற அமைப்பாகும்.

To give maximum happiness to
Maximum people for maximum time

சின்மயா மிஷனின் குறிக்கோள் வாக்கியம், எல்லோருக்கும் எல்லையில்லாத மகிழ்ச்சியை தருவதான இந்த பேரிலக்கில் இன்று உலகளாவிய 300க்கும் மேற்பட்ட நிலையங்கள் செயற்படுகின்றன. சமூகப்பணியில் விரிந்த மேம்பாட்டுப் பணிகள் பலவற்றினை இவை ஆற்றுகின்றன. இந்த வகையில் 2011ல் எங்கள் யாழ்ப்பாணத்தில் சின்மயா மிஷன் பணிகள் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்களின் வழிகாட்டுதலுடன் ஆரம்பிக்கப்பட்டு நிறைந்த ஆன்மீக சமூகப்பணிகளை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சமய பண்பாட்டு வாழ்வில் இளைய தலைமுறையினரை ஆர்வத்துடன் ஈடுபடவைக்கும் காலப்பணியில் சின்மயா மிஷனின் அர்ப்பணிப்பு தனித்துவமானது. அவ்வாறே கிராமிய மேம்பாட்டுக்கான சின்மயா நிறுவமைப்பு (Chinmaya Organization for Rural Development - CORD) என்னும் கட்டமைப்பின் மூலம் போரினால் பாரிய பாதிப்புக்குள்ளான எங்கள் புலங்களில் சின்மயா மிஷன் ஆற்றும் பணிகளும் சமூக முக்கியத்துவம் பெற்றவை - சுய உதவிக்குழுக்களின் மூலம் நிலைபேறான மேம்பாட்டுக்கான திட்டங்களை வகுத்து பாதிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள் மேம்பாட் டுக்காய் மிஷன் ஆற்றும் பணிகளின் பயன் கனிகளை இன்று இக்கிராமங்களில் காணமுடிகின்றது.

சமூகப்பணியில் சமய, ஆன்மீக நிறுவனங்கள் ஈடுபடலாமா? என்ற விவாதம் நீண்ட காலமாக எங்கள் சமூக அரசியலில் சொல்லாடல்களில் இடம்பெறும் ஓர் விடயமாகும். குறுகிய மதமாற்றம் அல்லது மதமயமாக்கம் என்ற குற்றச்சாட்டுகளினடியாக இந்த விவாதம் முன்வைக்கப்படுவதுண்டு. எனினும் நேர்ச்சிந்தனையும் உண்மையான சமூக மேம்பாட்டினையே இலக்காக கொண்ட ஆன்மீக சமய அமைப்புக்களின் பணியும் இந்த விவாதத்தினை இன்று பெருமளவுக்கு வலுக்குன்றச் செய்துள்ளது என்றே சொல்லவேண்டும். 'சமூக ஆன்மீகம்' (Social Spirituality) என்ற புதிய பதம் இந்த சொல்லாடல் களின் விளைவாக இன்று மலர்ந்துள்ளது; சின்மயா மிஷனின் சமூகப்பணி செயற்பாடுகளை எடுத்துக் காட்டாக குறிப்பிடலாம்.

எங்கள் சமூகவியல்துறை மாணவர்களின் சமயத்தின் சமூகவியல், கிராமிய மேம்பாடு சார்ந்த வகுப்பறை கலந்துரையாடல்களில், சின்மயாமிஷன் சுவாமிகளின் அனுபவ ஞானம், நிறைந்த பயன்களை தந்துள்ளமையை இங்கு குறிப்பிட வேண்டும். இவற்றுக்கு அப்பால் போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமையினால் நலிந்த எங்கள் மாணவர்களின் வாழ்வாதாரத்திற்கான உதவிகளையும் வழங்குவதில் அவர்கள் கொண்ட ஈடுபாடும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் மேற்கண்ட பணிகளை திட்டமிட்டு விரிவாக மேற்கொள்ளும்போது சின்மயா மிஷனின் கிராமிய மேம்பாட்டுப் புலங்கள் எங்கள் சமூகவியல் மாணவர்களின் பயில்களங்களாகவும், பணிக்களங்களாகவும் அமைந்து முழுதளாவிய சமூகமேம்பாட்டுக்கு வழிசமைக்கும் எனலாம்.

'எல்லோருக்கும் மகிழ்ச்சி' என்ற சமூக அழகை, சமூக நீதியை நிலைநாட்டும் காலப்பணியில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுத்துவதற்கான உறுதியினை சுவாமி சின்மயானந்தா அவர்களின் இந்த மேலான பிறந்த நூற்றாண்டு வேளை எடுத்துக்கொள்வோம்.

சுவாமிகளின் பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வுகள் யாவும் அழகாய் நிறைந்திட எல்லையில்லாத அன்புடனும் பிரார்த்தனைகளுடனும்,

**பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன்**
**மேனாள் துணைவேந்தர்,**
**சமூகவியல் சிரேஷ்ட பேராசிரியர்**
**சமூகவியல்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# கருத்துரை



பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டினை முன்னிட்டு சின்மயா மிஷன் வெளியிடும் நூற்றாண்டு விழா மலரிற்கு செய்தியினை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யாழ் சின்மயா மிஷன் நிறுவனமானது இந்துக்கள் இந்து சமயத்தினைக் கடைப்பிடித்து ஒழுக்க சீலர்களாக வாழ்வதற்குரிய பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. பாடசாலை மாணவர்கள் மத்தியில் சமயத்தின் மீதான பற்றுதலை அதிகரிப்பதோடு அதனை நடைமுறை வாழ்வில் அவர்கள் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு ஏற்றதான செயற்பாடுகள் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து யாழ் சின்மயா மிஷன் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ் சின்மயா மிஷன் நிறுவனமானது நல்லூர் திருவிழாக்காலத்தில் பாடசாலை மாணவர் களுக்காக நடைமுறைப்படுத்திய "இந்துவாக வாழ்வோம்" வேலைத்திட்டமானது மாணவர்களது ஆளுமை மற்றும் ஒழுக்கம் பண்புகளை வளர்ப்பதற்கு பெரிதும் உதவிகரமாக அமைந்ததோடு சமயத்தினைப் பின்பற்றுவதற்கும் மாணவர்கள் மத்தியில் பெரும் உந்துதலாக அமைந்துள்ளது.

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டினை கொண்டாடும் இவ்வேளையில் நாம் எல்லோரும் இந்துவாக வாழ்வோமாக.

**செ.உதயகுமார்**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**வடக்கு மாகாணம்.**

# கருத்துரை



பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டினை முன்னிட்டு சின்மயா மிஷன் வெளியிடும் நூற்றாண்டு விழா மலருக்கான இச் செய்தியை வழங்குவதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன். இவ்வேளையில் எமது சமய, சமூக மேம்பாட்டிற்காக யாழ் சின்மயா மிஷன் ஆற்றிவரும் பணிகளை நன்றியோடு நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன்.

30 வருட யுத்த சூழலில் எமது சமூகம் பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகி இருக்கின்றது. பல சமூகங்கள் தமது பிறந்த மண்ணிலிருந்து "வேரோடு பிடுங்கி எறியப்பட்ட மரங்கள் போல" இடம்பெயர வேண்டியிருந்தது. எமது சமூகக் கட்டமைப்புக்கள் சீர்குலைந்தன. நூற்றாண்டுகளாக கட்டியெழுப்பப்பட்ட எமது சமூக விழுமியங்கள், பண்பாடு, கலாசாரம் என்பன பாதிப்புக்குள்ளாயின. இந்நிலையில் எமது சமூகத்தை மீளக் கட்டியெழுப்புவதில் ஆன்மீகத்தின் தேவை இன்றைய காலகட்டத்தில் மிக அதிகமாக உணரப்படுகின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையிலேயே யாழ் சின்மயா மிஷனின் பணிகள் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்களின் வருகையுடன் புதிய உத்வேகம் பெற்றன. வட மாகாணத்தில் யாழ் சின்மயா மிஷனின் சமய, சமூகப்பணிகள் துரிதமாக இடம்பெற்றன. வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்யா அவர்கள் பல்வேறு ஆலயங்களிலும், வேலைத்தலங்களிலும், நிறுவனங்களிலும் பொது இடங்களிலும் இந்து மதத்தின் பெருமையை தனது சிறப்பான சொல்லாற்றல் மிக்க பேச்சினால் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்கின்றார். அர்த்தமுள்ள இந்து மதத்தின் பெருமைகளை மிகவும் எளிமையான முறையில் குழந்தைகளுக்குக்கூட புரியக்கூடிய வகையில் எடுத்துக்கூறி வருகின்றார்.

ஏனைய சில மதங்களுடன் ஒப்பிடும்போது தன்னைச் சார்ந்த சமூகத்திற்கு பெரிதாக எதுவும் செய்வதில்லை என்ற குறை இந்து மதத்திற்கு உண்டு. இதனைப் போக்கும் வகையில் யாழ் சின்மயா மிஷன் சமூகத்தில் நலிவடைந்த பல்வேறு தரப்பினருக்கும் உதவிக்கரம் நீட்டிப் பல சமூகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் மூலம் சமூகத்திலுள்ள நலிவடைந்தோர் மத்தியில் எமது மதத்தின் மீதான பற்றும் நம்பிக்கையும் வளர்ந்து வருகின்றது. எனவே எமது சமூக, சமய வளர்ச்சிக்காக அரும்பணியாற்றிவரும் யாழ் சின்மயா மிஷனின் சமய, சமூகப் பணிகளை பாராட்டி நிற்கின்றேன். அவர்களது பணிகள் நீண்டகாலம் எமது மக்களுக்கு கிடைக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்**
**பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்**
**வடமாகாணம்.**

# சின்மயா மிஷனின் பணி எமக்குக் கிடைத்த கொடை



சின்மயா மிஷனின் ஸ்தாபகர் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களின் நூறாவது பிறந்த ஆண்டையொட்டி வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவது நமக்குக் கிடைத்த பாக்கியம் என்று கருதுகின்றோம். சின்மயா மிஷனின் வதிவிடம் யாழ்ப்பாணத்தில் அமையப் பெற்றமை நாம் செய்த பெரும்பேறாகும்.

யுத்த சூழலில் ஆக்கிரமிக்கப்பட்ட எம் மக்கள் ஆன்மீகத்திற்குள்ளால் மீண்டெழுவதற்கு சின்மயா மிஷனின் வகிபங்கு காலத்தின் தேவையாகவுள்ளது. சின்மயா மிஷனின் யாழ்ப்பாண வதிவிட ஆச்சார்யர் ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் யாழ்ப்பாண மண்ணில் சின்மயா மிஷனின் பிராந்திய வதிவிடத்தை அமைத்து அதனூடு ஆற்றிவருகின்ற ஆன்மீக தானம் எங்கள் மக்களுக்கு இறைவன் தந்த கொடை எனலாம். இளைஞர்களை, பெரியவர்களை, ஆன்மீக நாட்டமும் தேடலும் உள்ளவர்களை ஆன்மீகத்தினூடு ஆற்றுகை செய்யும் சுவாமிகள் ஊர் ஊராகச் சென்று ஆலயங்களிலும் பொது இடங்களிலும் ஆற்றுகின்ற ஆன்மீக சொற்பெருக்கு சிவபூமியான நம் மண்ணில் தெய்வீகம் தழைத்தோங்க பேருதவியாய் அமைகிறது.

ஜாக்ரத சைதன்ய சுவாமிகளின் கடுமையான முயற்சியும் இடையறாத ஆன்மீகப் பணியும் சின்மயா மிஷனின் சேவையை இலங்கை முழுமையிலும் பரவச் செய்துள்ளது. வடபகுதியில் எந்த நிகழ்வுகள் நடந்தாலும் அந்த நிகழ்வில் சின்மயா மிஷனின் யாழ்ப்பாண வதிவிட ஆச்சார்யார் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் பங்குபற்றவேண்டும் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பெருவிருப்புக்கொண்டு சுவாமி களை அழைத்து அவரின் வருகையைப் பெரும் பேறாகக் கருதுகின்றனர் எனில் யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள சின்மயா மிஷனின் ஆன்மீக, சமூகப்பணி எத்துணை உச்சமானது என்பதை உணரமுடியும்.

இவையாவற்றுக்கும் மேலாக நல்லூர் மகோற்சவ காலத்தில் கந்தப் பெருமானின் வீதியுலா வின் போது சுவாமிகளின் தலைமையில் இடம்பெறும் கூட்டுப் பிரார்த்தனையும் எங்கள் மாணவச் செல்வங்களின் பங்கேற்பும் மிகப்பெரும் தெய்வீகச் செயலை தருவதாகும். கூடவே இந்துவாக வாழ் வோம் எனும் கருப்பொருளிலான கண்காட்சியும் சுவாமிகளின் தெய்வீக உரையும் எங்கள் மண்ணில் நடந்து கொண்டிருக்கும் ஆன்மீக விதைப்புகளாகும். சின்மயாமிஷன் சுவாமிகள் முன்னெடுத்து வரும் ஆன்மீகப் பணியும் சமூகப் பணியும் என்றும் போற்றுதலுக்குரியது. இவ்வேளையில் யாழ்ப்பாண சின்மயா மிஷனால் வெளியிடப்படுகின்ற குருதேவரின் நூற்றாண்டு மலர் எம் மண்ணில் ஆன்மீக எழுச்சிக்கு வித்திட எல்லாம் வல்ல நல்லூர்க்கந்தப் பெருமானின் கழல்பணிந்து நூற்றாண்டு மலரை வாழ்த்தி வணங்குகின்றோம்.

சுபம்.

**நல்லையா விஜயசுந்தரம்**
**பிரதம ஆசிரியர்,**
**வலம்புரி நாளிதழ்.**

# சின்மயா மிஷனின் ஆன்மீகத் தொண்டு



சின்மயா மிஷன், யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட காலத்திலிருந்து இந்து சமய கலாசாரத்தையும், விழுமியங்களையும் பொதுமக்கள் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறது. அத்துடன் தன்னலமற்ற இவ்வாறான தொண்டு காலத்தின் தேவையாக உள்ளது. விசேடமாக மாணவரை மையப்படுத்தி அவர்களின் ஒழுக்க மேம்பாட்டுக்காக எமக்கு வழிகாட்டுவதோடு அர்ப்பணிப்புடன் பணியாற்றும் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்களின் தொண்டு பராட்டுவதற்குரியது. கால நேரம் பாராது சமயத் தொண்டில் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருப்பதோடு முன்மாதிரியாகவும், ஏனை யோரால் மனமுவந்து ஏற்றுக் கொள்ளப்படும் துறவியாகவும் இறை பணி ஆற்றுகின்றார். அத்தோடு மட்டும் நின்றுவிடாது முகாமைத்துவம், ஒழுக்கம், ஆன்மீகம் தொடர்பான ஆழமான அறிவும் அவற்றை ஏனையோரிடம் எடுத்துரைக்கக் கூடிய ஆற்றலும் ஆளுமையும் உடையவராவார்.

சின்மயா மிஷனின் பணி மேலும் சிறக்க இறைவனை இறைஞ்சுகின்றேன். எமது பாடசாலைகளில் சின்மயா மிஷன் மேற்கொண்டுவரும் ஆக்கபூர்வமான பணிகள் அதிபர், ஆசிரியர், பெற்றோர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. தங்கள் பணி தொடர இறை ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

**திரு.ந.தெய்வேந்திரராஜா**
**வலயக் கல்விப்பணிப்பாளர்**
**வலயக்கல்வி அலுவலகம்**
**யாழ்ப்பாணம்.**

யாழ் மாநகர சபை
යාපනය මහනගර සභාව
JAFFNA MUNICIPAL COUNCIL

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
පේදුරුතුඩුව පාර, යාපනය.
Point Pedro Road, Jaffna.

அலுவலகம் / කාර්යාලය / Office: 021 222 2275
தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021 222 2334
மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / E- mail: mcjaffna@sltnet.lk

# பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் ஜனன நூற்றாண்டு விழா நிறைவிற்கு நல்வாழ்த்துக்கள்



இந்நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு மலருக்கான கருத்துரையை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். இவ்வமைப்பு பல வருடங்களைக் கடந்து பொதுப்பணியாற்றி வருவதை சாதாரணமாக எடை போட்டுவிட முடியாது.


யாழ் குடாநாட்டில் இன்று உருவாகியுள்ள சமூகப் பிறழ்வுகளிற்கு தீர்வு காண வேண்டும், இளைஞர்களை நல்வழிப்படுத்தல் வேண்டும் என்ற இலக்குகளை முக்கிய நோக்காகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் பாலவிஹார், யுவகேந்திரா வகுப்புக்கள் சின்மயா மிஷனால் நடாத்தப்படுகின்றன. மக்கள் வாழும் பகுதிகளிற்குச் சென்று அவர்களிற்கு ஆறுதல் அளிக்கும் வகையில் முடியுமான சேவைகளை இவ் அமைப்பு ஆற்றி வருவதை எண்ணி உவகை அடைகின்றேன்.

சின்மயா மிஷனால் பகவத் கீதை வகுப்புக்கள், பெரியவர்கட்கான தியான வகுப்புக்கள் சிறுவர்கட்கான பாலவிஹார் வகுப்புக்கள், பஜனை, ஸ்தோத்திர பாராயணம், குருபாதுகா பூஜை, ஆன்மீக அருளுரை போன்ற செயற்பாடுகளை ஆற்றுதல் பாராட்டத்தக்க விடயமாகும். அத்துடன் இவமைப்பு மகளிர் தலைமையிலான 300 குடும்பங்களிற்கு நிதியுதவி, 60 அநாதை சிறுவர்கட்கு நிதியுதவி வழங்குதலை எண்ணி நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

அந்த வகையில் தனித்துவம் மிக்க அம்சங்களை தாங்கி நின்று செயற்படும் இவ்வமைப்பானது இன்னும் பல ஆண்டுகள் தன் பணியைத் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, குறித்த அமைப்பை அயராத உழைப்புடன் ஒற்றுமையாக பரிபாலித்து செல்லும் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்களுக்கும், அமைப்பு உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இவ்விறை பணிகள் தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பொன்னம்பலம் வாகீசன்
ஆணையாளர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்


பொ.வாகீசன்/மாநகர ஆணையாளர்
පො.වාගීසන්/නාගරික කොමසාරිස්
P.VAGESHAN / MUNICIPAL COMMISSIONER
யாழ்ப்பாணம்/ යාපනය /JAFFNA


சின்மய
பிறந்த நூற்றாண்டு


## பூஜ்ய குருதேவர் பிறந்த மண்ணில் பிறந்த நூற்றாண்டு விழா ஆரம்பம் 06.05.2015 – 08.05.2015



ஆரம்ப நிகழ்வில்
டாக்டர் அப்துல்கலாம்



சின்மய ஜோதி ஏற்றும்
பூஜ்ய குருஜி அவர்கள்




சின்மய ஜோதி
யாத்திரையை
ஆரம்பித்து வைக்கும்
பூஜ்ய குருஜி

# பூஜ்ய குருதேவர் பிறந்த நூற்றாண்டு ஆரம்ப தினத்தில் இந்திய அரசு நாணய வெளியீடு 08.05.2015



இந்தியப் பிரதமர்
நரேந்திர மோடி அவர்கள்
நாணயங்களை
வெளியிடுதல்







வெளியிடப்பட்ட நாணயங்களின் தோற்றம்

# ஓம் பிறந்த நூற்றாண்டு ஆரம்ப தினத்தில்.... நாணய வெளியீடு

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களின் பிறந்த நூற்றாண்டு ஆரம்ப தினத்தில் 08.05.2015 இந்திய மத்திய அரசு குருதேவரின் பணிகளை நினைவுகூரும் வகையில் இரு நாணயங்களை வெளியிட்டு வைத்தது. இதனை இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் சின்மயா மிஷனின் உலகளாவிய தலைவர் பூஜ்ய குருஜி சுவாமி தேஜோ மயானந்தா அவர்களும், சின்மய யுவகேந்திராவின் தேசிய பணிப்பாளர் சுவாமி மித்ரானந்தா அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விதம் மகான்களைக் கௌரவிக்கும் பண்பால் பாரத மத்திய அரசு கௌரவம் பெற்றது என்றால் மிகையாகாது.

## சின்மய ஜோதி யாத்திரை

பூஜ்யதேவரின் பிறந்த நூற்றாண்டு ஆரம்ப தினத்தை முன்னிட்டு குருதேவர் பிறந்த இடமான கேரளாவின் எர்ணாகும் பகுதியில் 2015 மே மாதம் 6ஆம் திகதி முதல் 8ஆம் திகதிவரை பிரமாண்டமான அளவில் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வை இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அமரர் அப்துல்கலாம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். ஆன்மிக ஆர்வலரான கலாம் அவர்கள் குருதேவருடன் தனக்கு ஏற்பட்ட தொடர்புகளின் போது குருதேவரிடம் தான் அவதானித்தவற்றை கூறுகையில், "சுவாமி சின்மயானந்தரின் நேர்மையே அவரை இந்நிலைக்கு உயர்த்தியது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வுகளில் சின்மயா மிஷன் துவிகளுடன் பாரதத்தில் உள்ள துறவிகள் பலரும் கலந்து சிறப்பித்தனர் அந்த மூன்று நாட்களும் கேரளாவின் எர்ணா குளம் பகுதி முழுவதும் ஆன்மிக வெள்ளத்தில் ஆழ்ந்திருந்தது.

இறுதி நாளான 8ஆம் திகதி நிகழ்வுகளில் குருதேவரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் (on a Quest) "தேடலின்போது" திரைப்படம் திரையிடப்பட்டது. இதில் பூஜ்ய குருஜி அவர்கள் கலந்து இரவு 7.30மணிக்கு குருதேவர் பிறந்த நேரத்தில் சின்மய ஜோதியை ஏற்றிவைத்தார். இவ் ஜோதியுடன் குருதேவரின் பாதுகைகளும் குருதேவரின் வாழ்க்கை வரலாறுகள் புகைப்படங்களாக காட்சிப் படுத்தப்பட்ட ஒரு வாகனத்தில் ஏற்பட்டு சின்மய ஜோதி யாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.

இவ் ஜோதியானது இந்தியாவின் 25 மாநிலங்களில் உள்ள 151 நகரங்களூடாக 238 நாட்கள் பயணித்து டிசம்பர் 31ஆம் திகதி, மகாராஷ்டிர மாநிலத்தில் புனேநகரில், கொல்வான் எனும் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சின்மய விபூதி நிலையத்தில் உள்ள பிரணவ கணேஷ் ஆலயத்தில் வைக்கப்பட்டது. அன்றுமுதல் அகண்ட ஜோதியாய் ஒளிர்ந்து கொண்டு உள்ளது.

# யாழ் சின்மயா மிஷனின் சின்மய நூற்றாண்டு நிகழ்வுகள்

2015மே மாதத்தில் 6, 7, 8ஆம் திகதிகளில் பூஜ்ய குருதேவர் அவர்களின் பிறந்த நூற்றாண்டு ஆரம்ப வைபவம் அவரது பிறந்த இடமான கேரளா - எர்ணா குளத்தில் வெகு சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதற்கு ஆச்சார்யார்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது அதனை ஏற்று விழாவில் பங்குகொள்ளச் சென்ற பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்கள், அடியார்கள் 25பேர் வரை அழைத்துச்சென்றார். அவர்கள் 2015மே மாதம் 1ஆம் திகதி நடைபெற்ற சிதம்பர நடராஜப் பெருமானின் கும்பாபிஷேக நிகழ்விலும் கலந்துகொண்டனர். தொடர்ந்து கேரளாவில் இடம்பெற்ற நூற்றாண்டு ஆரம்ப நிகழ்விலும் கலந்துகொள்ளும் பாக்கியத்தைப் பெற்றனர். அத்துடன் ஆதிசங்கரர் அவதரித்த வீடு அவர் வாழ்ந்த இடம், குருவாயூர் கிருஷ்ணர் ஆலயம், திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி ஆலயம் ஆகியவற்றையும் தரிசித்தனர்.

2015யூன் மாதத்தில் இருந்து குருதேவரின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு யாழ் சின்மயா மிஷன் கீழ்வரும் 5 திட்டங்களை முன்னெடுத்து நடாத்தி வந்தது. 1) தினமும் ஆச்சிரமத்தில் குரு பாதுகா பூஜை, 2) வெள்ளிக்கிழமை காலையில் வித்தியாலயங்களில் விழுமிய உரை, 3) வெள்ளிக்கிழமை மாலைகளில் ஆலயங்களில் அருளுரை, 4) மாதம் ஒருமுறை இல்லந்தோறும் பகவத் கீதை, 5) பகவத் கீதை ஞானயக்ஞம் ஆகிய இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

2016 மே மாதம் 1 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை குருதேவரின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு சின்மய வாரமாக அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது சிரமதானம், தியானப் பயிற்சி, ஞானயக்ஞம், இரத்ததானம், குருபாதுகா பூஜை ஆகியன நடைபெற்றன. அதில் முதலாம் இரண்டாம் திகதிகளில் ஆச்சிரம வளாகம் மற்றும் சூழலில் சிரமதானமும் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை தினமும் காலை 6.30 முதல் 7.30 மணி வரை "வாழ்க்கைப் பாதை, அதுவே கீதை" என்னும் தலைப்பில் பகவத்கீதை 'ஞானயக்ஞமும் இடம்பெற்றது. 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இரத்த தானமும், மாலை குரு பாதுகா பூஜை, பஜனை, சத்சங்கம், குருதேவர் குறித்த வீடியோ படக்காட்சி, குருதேவரின் நாம ஜெபம் ஆகியன இடம்பெற்று குருதேவரின் ஜன்ம நேரமான முன் இரவு 7.30 மணிக்கு 100 தீபங்கள் ஏற்றும் வைபமும் இடம்பெற்றன. இவற்றுடன் குருதேவரின் 100வது ஜன்ம தின நிகழ்வு அமைதியாக ஆனந்தமாக நிறைவேறியது.

மேலும் சின்மயா மிஷனின் பணிகள் சிறக்க பூஜ்ய குருதேவரின் பாதார விந்தங்களைப் பணிந்து ஆசி பெறுவோம். அடுத்து 29.05.2016அன்று நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற வுள்ள சின்மய பிறந்த நூற்றாண்டு விழாவில் "சின்மயம்" பிறந்த நூற்றாண்டு மலர் வெளியீடு இடம்பெறவுள்ளது.

ஓம் ஸ்ரீ சின்மய சற்குரவே நமஹ

# ௐ சின்மயா மிஷன் வாக்குறுதி

நாம் ஒரு குடும்பமாக இருப்போம்.
அன்புடனும் மரியாதையுடனும் ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டிருப்போம்.

நாம் ஒரு சேனை மாதிரி உழைப்போம்.
தைரியத்துடனும் ஒழுக்கத்துடனும்
நம் உள்ளும் புறமும் இருக்கும் எல்லாவிதத் தாழ்ந்த மனப்பான்மைகளையும்
பொய்யான மதிப்பீடுகளையும் எப்பொழுதும் எதிர்த்து
போராடத் தயாராக இருப்போம்.

நாம் நேர்மையாக வாழ்வோம்.
தியாகமும் உழைப்பும் கொண்ட கம்பீர வாழ்க்கையையும்,
நாம் உண்பதற்கும் மேலாக அதிக உற்பத்தியைப் பெருக்கியும்,
நாம் எடுத்துக் கொள்வதற்கும் மேலாக அதிகமாகவும் கொடுப்போம்.


நாம் அந்த மகாப்பிரபுவின் கருணையை நாடுவோம்
நம்மை நேர்மையான, தைரியமான
புத்திசாதுர்யமான பாதையில் நடத்திச் செல்வதற்கு.

அவருடைய கருணையும் நல்லாசியும்
நம் மூலமாக நம்மைச் சுற்றிலுமுள்ள இந்த உலகுக்குப் பரவட்டும்.

நாம் நம் தேசத்திற்கு உழைப்பது
பிரபுவுக்கும் மேலான அந்த மகாப்பிரபுவிற்கு உழைப்பதாகவும்,
ஜனங்களுக்கு காட்டும் பக்தி,
அந்த எல்லாம் வல்ல சுயரூபிக்கு காட்டும் பக்தியாகவும் நம்புகின்றோம்.

நம்முடைய கடமைகளை நாம் உணர்ந்திருக்கின்றோம்.
அவைகளைப் பூர்த்தி செய்ய
எங்களுக்கு வேண்டிய சக்தியையும் தைரியத்தையும் கொடுத்தருள்வாயாக.

ஓம் தத் சத்



சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்

9 789554 002005

MATHI COLOURS
Nallur 021 2229285